தனிச்சுற்றுக்கு மட்டும்

# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



கார்த்திகை - 2025

# காற்றுவெளி

**கலை இலக்கிய இதழ்**

கார்த்திகை - 2025

படைப்புக்கள் அனுப்ப :
Mullaiamuthan1954@hotmail.com
mahendran1954@hotmail.com

படைப்புகளின் கருத்துக்களுக்கு
படைப்பாளர்களே பொறுப்பு.

ஓவியங்கள்: நன்றி- கனிவுமதி

- ஆசிரியர் : சோபா
- வடிவமைப்பு : நெகிழன்
- நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- வருட சந்தா : 12.00 பவுண்ட்
- வங்கி இலக்கம் :
  R.Mahendran,
  A/C No : 90759821
  Sort.Code : 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


**வணக்கம்,**

*யாவரும் நலமா?*

காற்றுவெளி கார்த்திகை இதழ் தங்களின் பார்வைக்கு வருகிறது.

தொடர்ந்து ஆதரவு தரும் படைப்பாளர்களுக்கும் எமது நன்றி.

காற்றுவெளி பதிப்பகம் மூலம் பல வருடங்களுக்கு முன்னர் ‘இலக்கியப்பூக்கள்’எனும் பெயரில் கட்டுரைகளின் தொகுதி ஒன்றை வெளியிட்டிருந்தோம். மீளவும் ஏன் வெளியிடுவதில்லை எனக் கேட்கிறார்கள். களச்சூழல் மாறித்தான் இருக்கிறது என்பது உண்மைதான்.ஆனாலும் அதற்குப்பிறகும்(காற்றுவெளி உட்பட) நூல்களை வெவ்வேறு பதிப்பகங்கள் மூலம் வெளியிட்டுமிருந்தோம்.வெளியீட்டு அனுபவங்களிலிருந்து இன்னும் மீளவேயில்லை என்பதே உண்மை.

காற்றுவெளி பலருக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுகிறது என்று குறிப்பிட்டிருந்தோம்.ஒரு வாசகர் கேட்டிருந்தார்.பலருக்கும் அனுப்புகிறீர்கள்.. நிறையவே சந்தா கிடைக்குமே...இது வரை 5 பேர் தான் அன்பளிப்பு எனும் பெயரில் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு இதழுக்குமாக நமது உழைப்பையே தரவேண்டியுமிருக்கிறது.சம காலத்தில் வேறு இதழ்களுக்காக/நூல்களுக்காகவும் நமது உழைப்பையே பகிரவேண்டியிருக்கிறது.எனவே சிற்றிதழாளர்கள் பணம் சம்பாதிகிறார்கள் எனும் நினைப்பே மாறவேண்டியிருக்கிறது.

சிரித்திர,மல்லிகை,மலர்,கொழுந்து,யாழ் ,கவிதை,தெரிதல் இன்னும் பல இதழ்களை நினைத்துப்பார்க்கிறோம்.

கார்த்திகை மாதம் ஈழத்தமிழர்களுக்கு புனித மாதம்.மாவீரர்களை வணங்கும் காலம்..ஈழத்தமிழினம் தங்களின் கனவை நிறைவேற்றும் வரை போராடும் என உரக்கச் சொல்லும் காலமுமாகும்.

கேளிக்கை விழாக்களைத் தவிர்ப்போமே.

நட்புடன்,
சோபா
*01/11/2025*

# படைப்பாளர்கள்

**கவிதைகள்:**

1. கவிதைக்காரன் இளங்கோ
2. செல்மா மீரா
3. A.S.சுந்தரராஜன்
4. கவிஞர்.மீரா
5. ஸ்ரீவாரி மஞ்சு-திண்டுக்கல்
6. மெய்யன் நடராஜ்
7. செ.ரா.கிருஷ்ணகுமாரி
8. த. ரவீந்திரன்
9. சாய் மீரா
10. க. புனிதன்
11. ஜமீல்
12. பாரதிசித்ரா
13. இரஜகை நிவவன்-மும்பை
14. நடேஷ் கன்னா
15. DR.ஜலீலா முஸம்மில்-ஏறாவூர்
16. அலெக்ஸ்பரந்தாமன்-புதுக்குடியிருப்பு
17. பா.சிவகுமார்
18. கலா புவன் லண்டன்
19. ரகுநாத் வ
20. தமீம்.அசாருதீன்
21. நேசன் மகதி
22. கோ.நாதன்

**சிறுகதைகள்:**

1. குந்தவை
2. நௌஷாத் கான் .லி-அபுதாபி
3. கவிஜி
4. எஃப்.மரிய பொனவெஞ்சர்
5. மழைக்குருவி
6. பாலமுருகன். லோ
7. ஜனனி.மோ
8. பவானி சற்குணசெல்வம்
9. முல்லைக்கோணேஸ்

**கட்டுரைகள்:**

1. இளையவன் சிவா
2. சேஹு மொஹம்மது பெனாஸிரா

**சிறுவர் இலக்கியம்:**

1. இளையவன் சிவா



# கவிதைக்காரன் இளங்கோ கவிதை

**மரணத்தின் தனிமை நோக்கி வீழும் உடல்..**

*மதுவை விட போதையூட்டக் கூடியதாக இருக்கிறது வன்மம்*
*காலியாகாத அதன் கோப்பை*
*அந்தரங்க மேஜையில் தளும்புகிறது எப்போதும்*
*ஓர் அறுவை சிகிச்சைக்குப் பிறகு*
*கழற்றியெறியப்படும் கையுறையை ஒத்திருக்கிறது*
*நீ விரித்து வைத்த சம்பவம்*
*கால் நழுவி உச்சியிலிருந்து நழுவ நேரும் கணத்தை*
*பதற்றமின்றி புகைப்படமெடுக்கிறது உன் புன்னகை*
*மரணத்தின் தனிமை நோக்கி வீழும் உடல்*
*மனதின் ரகசிய அறைகளிலிருந்து வெளியேறும்*
*அத்தனை அபத்தங்களையும் தரிசித்து மீள்கிறது*
*யாருமற்ற அறையின்*
*வெளிச்சம் மிகுந்த ஒரு மூலையில்*
*வீணாய் எரிந்தபடி ஒரு பல்புக்குள் தேங்கித் தொங்கும்*
*மின்சாரத்தின் நுண்ணிய ஆரஞ்சு நரம்புகள்*
*என் கடைசி நிழலின் மீது படர்கிறது*
*வலியின் ஒவ்வொரு தசை அவஸ்தையையும் நக்கியபடி*

*நன்றி:முகநூல்*



# மாயை

**குந்தவை**

அமைதியை முறித்து, தண்டவாளத்தைத் தீய்த்து எழும் ரயிலின் சத்தம். ஸ்டேசனை ஒட்டியிருந்த தேநீர்க் கடையிலிருந்த நாங்கள் பானத்தைக் குடித்ததும் குடிக்காததுமான நிலையில், காசை எடுத்துக் கொடுத்துவிட்டு வெளியேறுவதற்குள், சக்கர இணைப்புக்கள் கொஞ்ச, வண்டி குலுங்கி நிற்கும் ஒலி பரம்புகின்றது.

லக்கேஜ் சாமான்களை உருட்டிச் செல்லும் சிப்பந்திகளை லாவகமாகக் கடப்பதற்குக்கூடத் திறமையும் பொறுமையும் வேண்டியிருக்கிறது.

அவசரமாக ஓடி அகப்பட்ட பெட்டிக்குள் எங்கள் சாமான்களைத் தூக்கி ஏற்றிவிட்டு நாங்களும் தொற்றிக்கொள்கிறோம்.

ஆனாலும் ரயில் வரும்வரை தேநீர் குடித்துக்கொண்டிருந்ததன் பலன் - இருக்க இடமில்லை. கொழும்பிலிருந்தே நிரம்பி வழிய வரும் யாழ்ப்பாண மெயில் வண்டிக்குள் பொல்காவலையில் தொற்றிக்கொள்ளும் எங்களுக்கு இடம் வைத்து வரவேற்று உபசரிக்கவா செய்வார்கள்?

தண்டவாளத்தில் தாளமிடும் வண்டிக்கேற்ப நாங்களும் சீற்றின் விளிம்பினைப் பிடிப்பதும் விடுவதுமாகத் தள்ளாடுகிறோம். அந்த நிலைக்கு ஓரளவு எங்களைப் பழக்கிக்கொண்ட பிறகு வழியை மறித்து அடைத்துக் கிடக்கும் பெட்டிகளை மெல்ல ஒதுக்கியவாறு இருக்க இடம் தேடத் தொடங்குகிறோம்.

என் அதிர்ஷ்டம் "புனிதம்! இஞ்சை ஒரு இடமிருக்கு. இஞ்சை வாரும்." கூப்பிட்டவர்கள் என்னுடன் கூடப் படிப்பவர்கள். லலிதாவும் மாயாவும். அவர்களின் எதிரே ஒரு இடம் வெறுமையாக இருந்தது. ஆறுதல் உணர்ச்சி. எனக்குப் பக்கத்தில் நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட ஒரு தம்பதிகள். அவர்களின் சிறு பெண். நான் திருப்தியாக சீற்றில் சாய்ந்து கொள்கிறேன்.

எங்கள் சீற்றிற்கு எதிர் சீற்றில் ஆங்கில 'டியூன்'களை இசைத்துத்தள்ளும் ஒரு மாணவ கோஷ்டி. பல்கலைக்கழக மாணவர்கள் பிரயாணம் செய்யும் ரயில் என்று காட்ட வேண்டாமா என்ன?

"யூ மஸ்ற் பி சிங்கிங்" என்று அவர்களில் யாரையோ சீண்டிவிட்டுக் கொண்டிருக்கிறாள் லலிதா. சோஷலாகப் பழகும் பழக்கமுள்ளவள் அவள்.

கிழத் தம்பதிகளின் அந்தச் சிறு பெண் குறுகுறு என்று அடிக்கடி எங்கள் கவனத்தை ஈர்க்கின்றாள். இதனால் லலிதாவும் மாயாவும் 'ஸாண்டுவிச்'களைப் பிரித்துச் சாப்பிடும் பொழுது, எனக்கும் அவளுக்கும் கூடப் பங்கு கிடைக்கிறது.

"பிள்ளை, என்ன படிக்கிறீங்க? ஆர்ட்ஸோ, ஸயன்ஸோ?" கிழவர் தன் எதிரிலிருந்த மாயாவை விசாரிக்கத் துவங்குகிறார்.

"நாங்கள் மெடிக்கோஸ் ஸெகண்ட் இயர்" மாயாவின் குரலில் நளினம். செயற்கைப் பெருமிதம்.

முன்பின் தெரியாத ஒருவரிடம் இப்படிப் புளுகுவதால் லாபம்? மீறினால், அவர் தன் ஊருக்குப் போய் 'எனக்குப் பக்கத்திலை ரெண்டு மெடிக்கோ பெட்டையள் இருந்தினம்' என்று பேச்சுக்கு யாரிடமாவது சொல்வார். இந்தப் புகழ் எல்லாம் அந்த யாரோ இரு பெட்டையளுக்குள். அடங்கிவிடப் போகின்றவைதானே!

அந்த மனிதர் என்னைத் திரும்பிக் கேட்கிறார் "நீரும் மெடிக்கல் ஸ்ருடண்டா?"

"இல்லை நான் ஆர்ட்ஸ்" என் குரலில் எதிரில் இருப்பவர்கள், புழுகும் பொழுது நான் உண்மையைக் கூறுகிறேன் என்ற பெருமை மண்டிக் கிடக்கின்றது.

வண்டி விரைகிறது. தூக்கப்பொடியைத் தூவிவிட்டதுபோல, ஒவ்வொருவராக சாய்ந்து விழுகின்றனர். அந்தச் சிறுபெண் தூங்கி விட்டாள். அவளை மடியில் விட்டவாறு தாயும் மூலையோடு முடங்கினாள். மாயாவின் பக்கத்திலிருந்த மனிதனும் கையை ஜன்னல் விளிம்பில் வைத்து தூங்கிவிட்டிருந்தான். எதிர் சீற்றில் பாட்டுக்குழுவுக்கு மட்டும் உற்சாகம் குறைந்ததாகத் தெரியவில்லை.

எனக்கும் கண் மடல்களில் தூக்கம் வந்து சொருகுவது போலிருக்கிறது.

மாயாவின் குரல் கேட்கிறது. "புட்போட்டுக்குப் பக்கத்திலை இடமில்லாமல் தம்பி கீழே இருக்கிறார். இஞ்சை இடமிருக்கு அவரை வரச்சொல்றீங்களா?"

"தம்பியா மாயாவின் தம்பி ஒருத்தனும் கம்பஸில் வதிகின்றானா?" என்னுள் எழுந்த இந்தக் கேள்வியுடன் தூக்கக் கலக்கம் கரைகின்றது.

சற்று நேரத்தில் ஒரு வாலிபன் வருகிறான். மூன்றுபேரே இருக்கக்கூடிய சீற்றில் கோடியிலிருக்கும் ஆடவனுக்கும் தனக்குமிடையில் புதிதாக வந்தவனுக்கு எப்படியோ இடம் விட்டுக் கொடுக்கிறாள் மாயா.

அவன் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் தம்பியா இல்லையா என்ற உண்மை முனை காட்டுகின்றது.

எனக்கு அவர்களைப் பார்ப்பதைவிட எனக்குப் பக்கத்திலிருக்கும் அந்த வயதான மனிதர் என்ன நினைப்பார் என்ற நினைவே என்னைக் குடைகிறது. யூனிவஸிட்டிக்கு வருவதற்கு முன்னர் என் முன்னால் இப்படியான செயல்கள் நடந்தால் எனக்குக் கூச்சமாகத்தானிருக்கும். ஆனால் இப்பொழுது நாளைக்கு கணவன் மனைவியாகப் போகிறவர்கள் இப்படியெல்லாம் நடப்பதில் தவறில்லை என நினைக்கலானேன். பெரிய மனித தோரணையில். இவற்றைக் கண்டாலும் காணாத பாவனை காட்டி அலட்சியப்படுத்துவது எனக்கு கைவந்த பழக்கமாகியது. ஆனாலும் இந்தக் கிழத் தம்பதிகளுக்கு முன்னால்... யாரிடம் 'மெடிக்கோ' என்று புளுகி, தேவையில்லாத புகழை அடைந்துவிட்டதாக நினைத்தாளே அவர்களுக்கு முன்னால் வேண்டுமென்றே....

வேண்டுமென்றேதான்! பின்னே, மாயாவின் செல்லாப் பேச்சுகளையும் நளினங்களையும் பார்த்தால் இயற்கையாகவா இருக்கின்றன?

கிழவர் கையிலிருந்த பழைய பேப்பர்களைச் சுருட்டிக் கொண்டு எழுந்துவிடுகிறார்.

"நான் பிள்ளை கீழே எங்கேயும் பேப்பரை விரிச்சுப் போட்டுப் படுக்கப்போறன்." இந்தச் சூழலிலிருந்து விலகிக் கொள்ளும் சாகஸம். நினைவு இழுத்துக் கொள்கிறது. வண்டி ஒரு ஷ்டேஷனில் நின்றிருக்க வேண்டும். பக்கத்து வரிசைச் சங்கீதக்குழு, பாடுவது இருந்தாற்போல் பெரிதாகக் கேட்கிறது.

'கையும் கையும் கலந்திடவா ஜாலியாகவே... காதல் கதை பேசிடவா ஜோலியாகவே'

தமிழ்ப்பாட்டு இப்பொழுது தான் பாடுகிறார்கள். நான் கண்களை உயர்த்துகிறேன். எதிரே, மாயாவின் மடியிலிருக்கும் தலையணை தெரிகிறது. அதில் சிவப்பும் கறுப்புமாக பின்னிக் கிடந்த இரு கைகள்.

நான் தலையை மீண்டும் புதைத்துக் கொள்கிறேன். நையாண்டியாகப் பாடும் அந்த மாணவர்களை என் மனம் தன்னை அறியாமல் மெச்சுகின்றது.

மீண்டுமொருமுறை அரைத் தூக்க நிலையில் ஏற்படும் விழிப்பு. 'மடிமேலே தலை வைத்து விடியும்வரை தூங்குவோம்.' நேர்முக வர்ணனை நடக்கிறதுபோலும்.

தூக்க மயக்கம் முற்றாகக் கழன்று நான் எழுந்து உட்கார்ந்து கொண்ட பொழுது இசைக்குழு எங்கோ சிதறிவிட்டது, எழுந்து ஒலிக்கும் தமிழ்க்குரல்களும் வண்டிக்குள் இருந்த தாராளமான இடமும் தமிழ்ப் பிரதேசங்கள் அண்மி விட்டதை உணர்த்துகின்றன.

இதோ, கொடிகாமம் வரப்போகிறது. நான் சாமான்களை ஓரிடத்தில் எடுத்து வைத்து, இறங்க ஆயத்தமாக வேண்டும். நான் எழுந்து விடுகிறேன்.

அந்த ஜோடி, இருந்த இடத்திலேயே இருக்கிறது. மாயா, தன் கைப்பையைத் திறந்து அலங்காரம் பண்ணத் துவங்குகிறாள். அவன் முந்திக் கொண்டு அலட்சியமாக அவளின் கைப்பையிலும் தலையை நீட்டிய சீப்பை உருவி எடுக்கிறான். இது அவளுடைய கைப்பையில் மட்டுமல்ல, நாளைக்கு அவள் வாழ்விலும் அவனுக்குள்ள உரிமையை ஒட்டுறவை காட்டுவது போலிருக்கிறது.

◎ ◎ ◎

இறுதிப் பரீட்சை முடிந்தது. கட்டிப்போட்டிருந்த எங்களை அவிழ்த்து விட்டது போலிருக்கிறது.

வீடு திரும்பவேண்டிய நாளை ஒத்தி வைத்து, களிப்பிலே மனம் புதைத்து நீண்ட சோர்வினை விரட்டும் துடிப்பு.

நானும் தோழி கமலாவும் கண்டிக்குச் செல்லும் பஸ்ஸிற்குள் ஏறியிருக்கிறோம். பஸ் சங்கமித்த விடுதி வாசலில் வந்து நிற்கிறது. காத்திருந்தவர்கள் ஏறிக் கொள்கிறார்கள். மாயாவும் ஒரு வாலிபனும் சோடியாக பஸ்ஸிற்குள் ஏறி வந்து கொண்டிருக்கிறார்கள். பின்னால் வந்த ஒரு நடுத்தரவயது மாது பக்கத்து சீற்றில் போய் அமருகிறாள். கமலா தலையைத் திருப்பி மாயாவைப் பார்த்துச் சிரிக்கிறாள். என் போலன்றி மாயாவோடு நெருங்கிப் பழகியவள் கமலா.

"எங்கே படத்துக்கா?" கமலாவின் கேள்வி.

"இல்லை நாவலப்பிட்டிக்கு. இவற்றை 'ரிலெசன்ஸ்' இருக்கினம்."

நான் மாயாவோடு ஒட்டியிருந்த வாலிபனைப் பார்க்கின்றேன். நிச்சயமாக அன்று ரயிலில் பார்த்த அவன் இல்லை. அவனைவிட சற்று வெளுப்பு. அடர்த்தியான மீசைக்குப் பதில் மெல்லிய ஹீரோ மீசை.

கண்டியில் பஸ்ஸை விட்டு இறங்கி நானும் கமலாவும் நடக்கிறோம். எனக்கு ஏதோ குறுகுறுப்பு. "அந்தப் பொடியன் மாயாவின் 'போய் பிரண்டா' கமலா?"

"ஓம் பின்னாலே வந்திருந்தது மாயாவின் தாய். தாயுக்கு முன்னாலை இரண்டு பேரும் பக்கத்திலை 'எவ்வளவு' பார்த்தியே! எங்க வீடுகளிலை எண்டா, இப்படி நினைச்சுப் பார்க்கவும் முடியுமோ?"

"வேறு தாரோ தம்பி எண்டு...."எனக்கு முடிக்கத் தெரியவில்லை.

"சீ அது இந்தப் பொடியன்ரை தம்பி. தம்பித்துரை எண்டு பேர். அது இஞ்சைதான் படிக்குது. ஒரு மெடிக்கோ. தமையனுக்காக மாயாவைப் பார்க்க சில நேரத்திலை வர்றது."

தமையனுக்காக மாயாவைப் பார்க்க வருபவன் தானே தமையனாக மாறி விட்டானா? அண்ணியாக வரவேண்டியவளை...

மாயா அம்மாவின் முன்னால் ஒருவனுக்கு அருகே இடம் கொடுக்கும் மாயா – அன்றொரு நாளிரவு அவனின் தம்பியுடன் 'அது ஒரு மெடிக்கோ' – அதுவும் காரணமாயிருக்குமோ? தன் கற்பனைப் பெருமையான 'மெடிக்கோ' மாணவனோடு... எல்லாம் உணர்ச்சிகளின் மாயைப் பின்னல்கள். அவற்றைத் திரையிடும் மாயைத் திரைகள். அந்த மாயைத் திரைகளைக் கிழித்து என் சுத்த கற்பனைகள் முகங்காட்டுகின்றன.

உண்மையான மாயையின் ரூபம் அவன் முன்னால் ஒரு நாள் வெளிப்படும்பொழுது... மனைவியையும் தம்பியையும் கொலை செய்துவிட்டு தூக்கு மேடையில் தொங்கத் தயாராயிருக்கும் வாலிபனாக...

இந்த மாயா துணிந்தவள். அவனே முந்திக்கொண்டு...

'இன்னொரு கோகிலா... ஐயய்யோ!'

கற்பனை பலூன் வெடித்துப் பறக்கிறது. நான் கமலாவுடன் நடந்து கொண்டிருக்கின்றேன்.

- சுதந்திரன், *24.02.1967*

# செல்மா மீரா கவிதைகள்



**அசலின் பேரதிர்வுகள்**

அசலின் மீது அலைமோதுகின்ற
சாகசங்கள்
துணிச்சலுடன்
உள் நுழைகின்றக்
கபட நாடகங்கள்
விசையுடன் விழுந்த சினத்தின்பேரதிர்வுகள்
தெறித்து ஓடுகின்ற நீர்க்குமிழிகள் போல்
கீறல் விழுந்த
முகத்திட்டுக்கள்
தன்னை முழுவடிவமாக்கப் பாடுபடுகின்ற
அவஸ்தைகள்
மெத்தனமாக இழுத்துச் செல்கிறது காற்று
அபராதமாகக் கட்டினேன் புன்னகையினை

◎

**யாருமற்ற ஆரம்பம்**

போதனையில் நேரலையான
உணர்வின் முதலீடுகள்
அடிபணிகின்ற மௌனத்தில்
கண்ணுறங்குகிற வார்த்தைகள்
ஆதங்கத்தின் வெளிச்சத்தில் தகுதியைத்
தீர்மானிக்கின்ற உரிமை
எள்ளி நகையாடுகின்றக்
கூட்டத்தில்
கேள்விக்குறியானது
அபிப்பிராயம்
அமைதி கொள்கிறது
யாருமற்ற ஆரம்பம்

# A.S.சுந்தரராஜன் கவிதைகள்

தயார் தான்...
வாரத்தில் ஒரு வேளையாவது பட்டினியாய்
ஜீரண உறுப்புகளுக்கு
ஓய்வு கொடுக்க

சில சமயங்களில்
தோல்வி அடைய
தொடரும் முயற்சிகள்
திறமையை மேம்படுத்துவதால்

எப்போதாவது
உடல் வேதனைப்பட
மற்றவரின் கஷ்டங்கள்
புரியும் என்பதால்...

◎



**இப்படியும் அப்படியும்...**

செய் தொழிலில்
நிலுவையில் உள்ள
அன்றைய திட்டமிட்ட
பணியினை
காலையில்
புத்துணர்ச்சியுடன்
ஆரம்பித்து
பிற பணிகளின்
இடையூறாலும்
எதிர்பார்த்தபடி
நடை பெறாத
சோர்வாலும்
நாளை பார்க்கலாம்
என்ற நாட்களும் உண்டு
மிகக்கடினமான பணி
இப்போதைக்கு
முடிக்க முடியாது
என்று நம்பிக்கையின்மையில்
ஆரம்பித்து
எதிர்பாராத
ஆலோசனயிலும்
உதவியினாலும்
அடேடே
எளிதாய் முடிந்ததே
என்பதுமான
நாட்களும் உண்டு

◎

நம்மிடம்...
முடிக்கவில்லை
தெரியவில்லை
செய்யவில்லை
சரியில்லை
பழக்கமில்லை
என்று ஏகப்பட்ட
குற்றச்சாட்டுக்களை
பிறரிடம் ஏவும் முன்
இதெல்லாம்
நம்மிடமும்
இல்லை தானா
என்று கேட்டுக்கொள்வோம்.



# கவிஞர்.மீரா கவிதை

சாகாத வானம்நாம்; வாழ்வைப் பாடும்
சங்கீதப் பறவைநாம்; பெருமை வற்றிப்
போகாத நெடுங்கடல்நாம்; நிமிர்ந்து நிற்கும்
பொதியம்நாம்; இமயம்நாம்; காலத் தீயில்
வேகாத-பொசுங்காத-தத்து வம்நாம்;
வெங்கதிர் நாம்; திங்கள் நாம்; அறிவை மாய்க்கும்
ஆகாத பழமையினை அகற்றிப் பாயும்
அழியாத காவிரிநாம்; கங்கையும் நாம் !

தோள்வீரப் புகழ்வளர்ச்சிச் சரித்தி ரத்தின்
தொடக்கம்நாம்; வஞ்சகத்தின் நெஞ்சைக் கீறும்
வாள்வீரம் வருணிக்கும் பரணிப் பாட்டின்
வடிவம்நாம்; வாகைப்பூ மாலை சூடச்
சூள்வீரம் காட்டியதென் பாண்டி மன்னன்
சொந்தம்நாம்; நேருக்கு நேராய் மோதும்
ஆள்வீரப் போர்மரபை அமைத்துக் காட்டும்
அடிப்படைநாம்; வெடிப்படைநாம்; இடிப்படைநாம்!

தென்றல்நாம்; நச்சுமர வேரைத் தள்ளித்
தீர்த்தொழிக்கும் புயலும்நாம்! குளிர்ச்சி மிக்க
குன்றம்நாம்; கூடாத கொடுமை போக்கக்
குமுறும்எரி மலையும்நாம்; இலட்சி யப்பொன்
மன்றம்நாம்; மாற்றாரை நடுங்க வைக்கும்
மறவர்நாம்; தமிழ்காக்கும் அணியில் நின்றே
'சென்றோம்நாம் வென்றோம்நாம்' என்ற நீண்ட
கீர்த்தியனைத் திசையெட்டும் நிரப்பு வோம்நாம்!

# மெய்யன் நடராஜ் கவிதைகள்



**இடைவெளி**

*ஈரெழுத்தாய் இணையும்*
*ஒரு சொல்லாய் ஒன்றும்*
*இருவரில் ஆரம்பமாகிறது*
*வாழ்தலின் தொடர்*

◎

*அதிலே மூவெழுத்தாய் நான்கெழுத்தாய் மேலும்*
*இணையும் குழந்தைகளால் குடும்பம் என்ற*
*காவியத்தில்*
*மகிழ்ச்சிப்பூ பூத்துவிடுகிறது*

◎

*ஒரு சொல்லுக்கும் மறு சொல்லுக்குமான*
*இடைவெளி அழகுடன் இருக்கும்*
*ஒரு வாக்கியத்தைப்போல்*
*அமையும் உறவுகளால்*
*அழகாக விடுகிறது வாழ்தல்*

◎

*பழங்கால புகையிரதமாய்*
*லொடலொடவென விடாமல்*
*பேசும் எவரோடும்*
*தண்டவாளத்தைப்போல்*
*சீரான இடைவெளி பேணுவதில்  வாழ்தலெனும்*
*பயணம்*
*சுகமாகிறது*

◎

இடைவெளிச் சமவெளிகளில்
புல்லாய் வளர்ந்திருக்கும்
நம்மை மேயும்
இடையர் கூட்டத்துடன்
இடைவெளியின் நீளம்
எல்லையற்றதானதாக
இருத்தல் அவசியம்

◎

இடைவெளி கொண்டால்
இருந்த இடம் தெரியாதலாகும்
உறவுகளுக்கு அதையே
தடைவெளியாக்கவும் வேண்டும்

◎

தேவைக்கேற்ப
இடைவெளிகளின் அவசியத்தைக்
கூட்டியும் கழித்தும்
பெருக்கியும் பிரித்தும் கொள்வதில்
வாழ்க்கைக் கணக்கு சரியாகிறது

பொழிதலைச் சுருக்கிக்கொளும்
கார்முகிலுக்கும்
வறட்சியில் நாக்குத் தொங்கும்
பூமியின் தாகத்துக்குமான இடைவெளியாய்
அல்லாமல்
சில நிமிடங்களே தோன்றி மறைந்தாலும்
பசுமையாய் நின்றுவிடும்
வானவில்லின் இடைவெளிகளே அழகானவை

◎

குறுகிய இடைவெளிகளைக் கொண்ட வலைகளாய்
உயிர்வதை கொடுக்காமல்
திறந்ததும் காற்றையும்
காட்சியையும் மட்டுமன்றிக்
காதலையும் வழங்கிவிடுகின்ற
சன்னல் கம்பிகளின்
இடைவெளிகளாய் கவிதையைக் கொடுப்பதிலேயே
வாழ்வில் மகிழ்ச்சிப் பூ பூக்கிறது

◎

மரங்களுக்கு நடுவே
அளவுடன் இருக்கும்
இடைவெளிகளால் பயன்மிக்க
தோப்புகள் காண்பதுவாய்
மனங்களுக்கு நடுவே
அளவுடன் இருக்கும்
இடைவெளிகளால்
பயன்மிக்க வாழ்க்கையைக் காண்போம்

இடைவெளிகள் விரிசல் அல்ல
அவை வேர்கள்

பாறைகளின் சிறு இடைவெளிக்குள்ளும்
ஒரு விதைக்கு இடங்கொடுத்து
வேர்விட வைத்து
மரமாக்கிக் காய் கனிதரும்
தரும் அவை கருணையின் தாய்

◎

நமக்குள்ளும்
தாயின் கருணையின் நிழலாய்
ஒரு இடைவெளி இருக்கட்டும்
உதடுகளில்
புன்னகையாகவேணும் மலர..

# செ.ரா.கிருஷ்ணகுமாரி கவிதைகள்

**பெண் சுதந்திரம்**

*நூலைக் கையில் பிடித்துக் கொண்டு*
*பட்டம் சுதந்திரமாய் பறப்பதாக*
*கூறிக் கொள்கிறார்கள்*

*எவ்வளவு உயரம் பறக்க வேண்டும் என்பதை*
*அவர்களே நிர்ணயிக்கிறார்கள்*

*எப்போது கீழே இறக்க வேண்டும் என்பதையும்*
*அவர்களே*
*நிர்ணயிக்கிறார்கள்*

*வண்ணத்துப்பூச்சியின் கால்களில் கற்களைக்*
*கட்டிவிட்டு*
*பறக்கச் சொல்லி*
*கைத்தட்டி உற்சாகப்படுத்துகிறார்கள்*

*சிறகுகளை வெட்டியப்பின்*
*கூண்டைத் திறந்துவிடுகிறார்கள்*

*இது சுதந்திரமா*
*இல்லை இவர்களின் தந்திரமா!!!.*

◎

*பிறந்தநாளுக்கு கொடுத்த*
*பரிசைக் காட்டிலும்*
*குமிழி உறைக்காகிதம்*
*தந்த மகிழ்ச்சி அதிகம்*

*பால்யத்தின் நினைவுகள்*
*சத்தமாக உடைப்பட்டுக் கொண்டிருக்க*
*மௌன சிரிப்பு முகத்தில்*

*எல்லா குமிழிகளும்*
*உடைக்கப்பட்டதை உறுதி செய்தவளுக்கு*
*இன்னும் நிறைய குமிழி உறைகள் தேவைப்பட்டது*
*நீண்ட பால்யத்திற்கு.*





# பாவாடைச்சாமி

**நௌஷாத் கான்.லி, அபுதாபி**

என் பேரு பாவாடைச்சாமி இந்த பேரை கேட்கும் போதே உங்களுக்கு சிரிப்பு வரலாம் ஆனால் நீங்கள் சிந்தும் ஒவ்வொரு புன்னகையும் என்னை காயப்படுத்திதுன்னு நீங்கள் அறிய மாட்டீர்கள்.

எல்லாம் என் தலைவிதி எல்லா அவமானங்களையும் சுமந்து தானே ஆகணும்.பிள்ளையே இல்லாத வீட்டுக்கு தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை.குலச்சாமி பாவாடைச்சாமி அருளால் பிறந்ததால் அப்பாவும் -அம்மாவும் எனக்கு பாவாடைசாமின்னு பேரு வச்சாங்க.

குலச்சாமி அருளால் நான் நல்லா வரணும்னு தான் அப்பா அம்மா ஆசைப்பட்டாங்க ஆனா கூட இருக்கிற சில மூதேவிங்க நாடாச் சாமி,பாவாடை,ஜட்டின்னு கிண்டல் பண்ணுவாங்க இதனாலயே தெரியாதவங்க,புதுசா பார்க்குறவங்க யாராவது என் பேரு கேட்டா விஜய்,கார்த்திக்,ஷாம்ன்னு எனக்கு தோணுற, வாயில வர்ற பேரை சொல்லுவேன்.

ஆசை ,ஆஸ்திகளை கூட விட்டு கொடுக்கலாம் ஆனா அடையாளத்தை விட்டு கொடுக்க கூடாதுன்னு சொல்வாங்க ஆனா சுத்தி இருக்கிறவங்க பண்ண கிண்டலாலே என் சொந்த அடையாளத்தை (பெயரை )இழந்து நின்றேன்.

சொந்த ஊர்ல பண்ண கிண்டலாலே எனக்கு பிடிக்காத சென்னை நகருக்கு வந்தேன்.சென்னைக்கு ஒரு பிரத்யேகமான ஒரு குணம் உண்டு உங்களுக்கு பிடிச்சாலும்,பிடிக்கலைன்னாலும் சென்னையை நம்பி வந்தா நிச்சயம் வேலையும் உண்டு,வாழ்க்கையும் உண்டு.

சிலருக்கு வாழ்க்கைல விரும்புனது கிடைக்கலைன்னாலும் கிடைச்சது நல்லதாவ அமையும் அப்படிதான் பிடிக்காத நகரவாழ்க்கை நரகமா இல்லாம ஓரளவுக்கு குறை சொல்லாத விதத்துல இருந்ததால அந்த வாழ்க்கை ரொம்ப பிடிச்சு போச்சு.

கிராமம் மாதிரி புறம் பேசிக்கிட்டு,அடுத்தவன் கதையை பத்து வீட்டு திண்ணையில உட்கார்ந்துக்கிட்டு குறை சொல்லி படம் ஓட்டுற கதையெல்லாம் இங்கில்லை. அவனவனுக்கு அவனவன் வாழ்க்கைய பார்க்கிறத இங்கே பெரும்பாடா இருந்தது.

பக்கத்து வீட்டுல என்ன நடந்தாலும் அவனவன் அவன் வேலைய மட்டும் பார்த்துக்கிட்டு போவான் ஏன்னா அவன் வேலையே தலைக்கு மேல இருக்கும் இதனால அடுத்தவன் வாழ்க்கைய பார்க்குறதுக்கு நேரம் இருக்காது அடுத்தவன் மீது அக்கறை படாத,குறை சொல்லாத நகர வாழ்க்கையில் நிறைய நல்லதும் இருக்கு,கெட்டதும் இருக்கு இருந்த போதிலும் இந்த வாழ்க்கை எனக்கு ரொம்ப பிடித்து போனது.

இந்த உலகத்தில் இந்த அற்புதமான காதல் யார் மீது எப்ப வரும்ன்னு யாராலயுமே சொல்ல முடியாது ஆனா அது வர்ற வேண்டிய நேரத்துல கரெக்ட்டா வரும்.

எல்லா பெண்களும் தேவதையா என்பது எனக்கு தெரியாது ஆனால் என்னால் காதலிக்கப்படும் கனிகா என்னை பொறுத்தவரை தேவதைதான்.பொதுவாக காதலிக்க படுபவர்கள் எல்லாருமே தேவதைதான்.

அவளை பார்த்த முதல் தடவையிலேயே என்னுள் காதல் பூ பூத்தது அது ஏனென்று இதுவரை தெரியவில்லை. இந்த பாழாய் போன காதல் யார் மீது எப்ப வரும்ன்னு யாருக்குமே தெரியாது ஆனா இந்த காதல் வந்ததுக்கு அப்புறம் வாழும் வாழ்க்கை கூட ரொம்ப அழகா தெரியும்

எத்தனையோ பெண்களை பார்த்திருக்கிறேன்,சகஜமாய் பேசி இருக்கிறேன் ஆனா அவள பார்க்கும் போது மட்டும் அவ கண்ணை பார்த்து பேச முடியலை.அவளை பார்க்கும் போதெல்லாம் மனசுக்குள்ள ஆயிரம் பட்டாம்பூச்சி பறப்பது போல இருந்தது அவ என் பக்கத்துல இருந்தாலே என் இதயம் ரொம்ப படபடப்பா இருந்தது .

மனசுக்குள்ளயே இன்னும் எத்தனை வருஷத்துக்கு இந்த பொல்லாத காதலை பூட்டி வைப்பது??

காலம் தாழ்த்தி சொல்லும் காதல் காணாமல் போகவும் வாய்ப்புண்டு?

சொன்னால் தானே காதல்??

சொல்லாமல் எப்படி தெரியும் என் காதல்??

அவளை அடிக்கடி திங்குற மாதிரி அவ பார்க்காத போது பார்ப்பது,அவளை தவிர எல்லார்கிட்டயும் அவளை காதலிக்கிறதா சொல்லுறது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது.இந்த பைத்தியக்காரத்தனத்தை தான் இதுவரைக்கும் வைத்தியம் போல எனக்குள்ளயே செஞ்சுக்கிட்டு இருக்கேன்.

நான் மாறணும்னா முதல்ல என் காதல்ல அவகிட்ட சொல்லணும்?

அவ என் வாழ்க்கையில வந்தா எல்லாமும் எனக்கு நல்லதாய் மாறும்னு அவளையே நினைச்சுக்கிட்டு அனத்துற,துடிச்சுக்கிட்டே இருக்குற அந்த இதயம் சுமக்குற நெஞ்சுக்குழி சொல்லிக்கிட்டே இருந்தது.

இப்படியே போனா என் வாழ்க்கையும்,காதலும் கானலா தான் போகும்?

ஒரு வழியா என் காதல்ல அவகிட்ட சொல்லணும்னு முடிவு பண்ணேன் ஆனா பொய்யான பேரை சொல்லி அவளை ஏமாத்தி கல்யாணம் செய்ய விரும்பலை.பாவாடை சாமி என்கிற என் சொந்த அடையாள பெயரோட அவளை கல்யாணம் பண்ண விரும்புனேன்.

ஒருவேளை என் சொந்த பேரை சொன்னா என் காதலை அவள் ஏற்றுக்கொள்ளாமல் போவதற்கும் வாய்ப்புண்டு ஏனென்றால் மிஸ்ஸஸ் கனிகா பாவாடை சாமின்னு கல்யாணத்துக்கு அப்புறம் அவளை யாராவது கூப்பிட்டா அவ வருத்தப்படவும்,அவமானப்படவும் வாய்ப்பிருக்கு. ஒரு படிச்ச பொண்ணு பல விஷயத்தை யோசிச்சு தான் முடிவு எடுப்பா.

கல்யாணத்துக்கு அப்புறம் என் பெயரால வர்ற பிரச்சனையை ஒரு நிமிஷம் அவ யோசிச்சா என் காதல்

அந்த நிமிடமே காணாம போகவும் வாய்ப்பிருக்கு

இப்படி எக்குத்தப்பா,கிறுக்கு தனமா என் மனசு ஆயிரம் சொன்னாலும் உண்மையா அவகிட்ட இருக்கணும்னு தோணுச்சு .ஒருவேளை உண்மையை அவகிட்ட சொல்லி என் காதல் தோத்து போனாலும் பரவாயில்லை என்னை பொறுத்தவரைக்கும் நூறு சதவீதம் அவகிட்ட உண்மையா இருக்கணும் அவ்வளவு தான்.

மனசை திடப்படுத்தி கொண்டு இதுவரை சொல்லாத காதலை அவளிடம் சொல்லிட முற்பட்டேன்.

ஒருநாள்

கனிகா உங்ககிட்ட தனியா பேசணும்??

என்ன பேசணும் இங்கேயே சொல்லுங்க

ப்ளீஸ் வேலை முடிஞ்சு வெளியே வாங்க அப்புறம் சொல்லுறேன்

அன்று மாலை

கனிகா நான் சொல்லப்போறது சரியா -தப்பா,உங்களுக்கு பிடிக்குமா -பிடிக்காதா என்பது எனக்கு தெரியாது ஆனா உங்களுக்கு காலம் முழுதும் நான் உண்மையுள்ளவனா இருக்கணும்ன்னு ஆசைப்படுறேன்

What You Mean??

உங்களுக்கு இன்னமுமா புரியலை.நான் உங்களை சின்ஸியரா விரும்புறேன்,உங்களையே கல்யாணம் பண்ணனும்னு நினைக்குறேன்

Will You Marry Me?

(சிறு புன்னகைக்கு பிறகு)

நீங்க விரும்புறது எனக்கு முன்னாடியே தெரியும் நீங்க சைட் அடிக்குறது ஆபிஸ்ல வேலை பார்க்குறவங்களுக்கே தெரியும் போது சைட் அடிக்க படுற எனக்கு தெரியாதா என்ன?

பொண்ணுங்களை பத்தடி தூரத்துல இருந்து ஒரு ஆம்பளை பார்த்தாலும் கண்டுபிடிச்சிடுவாங்க. இயற்கையாவே பெண்களுக்கு உள்ளுணர்வு அதிகம்.நீங்க பார்க்குறது,உருகி உருகி ஒன் சைடா லவ் பண்ணுறது முதல்ல பிடிக்கலைன்னாலும் நீங்க வருஷக்கணக்கா உண்மையா காத்திருந்து காதலிக்கிறதால உங்களை காலப்போக்குல எனக்கும் பிடிச்சு போச்சு.ஒருத்தர் இன்னொருத்தரை உருகி,உருகி காதலிக்கிறதே வரம் தானே.

நீங்களா காதல்ல வந்து சொல்வீங்கண்ணு தான் இதுநாள் வரை காத்திருந்தேன்.

உங்களுக்கும் என்னை பிடிச்சிருக்கா??

ஆமாம்

அவன் மனது சந்தோஷப்பட்டாலும் உள்ளுக்குள் ஒரு சிறு தயக்கம் இருந்தது.

கனிகா உங்ககிட்ட ஒரு உண்மை சொல்லணும்,அந்த உண்மையை சொல்லும் போது உங்களுக்கு என்னை பிடிக்காம கூட போகலாம்.

பிடிச்சிருக்குன்னு சொன்ன உங்க உதடுகள் என்னை திட்டி விட்டு வெறுக்கவும் வாய்ப்பிருக்கு?

என்ன உண்மை அது??

அது வந்து.....அது வந்து??

சீக்கிரம் சொல்லுங்க..

நீங்க நினைக்குற மாதிரி என் பேரு ஷாம் இல்லை பாவாடைச்சாமி,குலதெய்வம் அருளாலே பொறந்ததால எனக்கு அந்த பேரை வீட்ல வச்சுட்டாங்க.

அந்த பெயரை கேட்டதும் ஒரு சிறு புன்னகைக்கு பிறகு,இதுக்கு தான் ரொம்ப டென்ஷனானீங்களா மிஸ்டர் பாவாடைச்சாமி.

இந்த பேரு யாருக்கு பிடிக்குதோ பிடிக்கலையோ எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு அதை விட உண்மை பேசுற உங்க மனசை ரொம்ப,ரொம்ப பிடிச்சிருக்கு என்று சொல்லி அவன் கன்னத்தில் செல்லமாய் ஒரு முத்தமிட்டாள்.

உங்ககிட்ட நானும் ஒரு உண்மையை சொல்லணும்,நீங்க நினைக்குற மாதிரி என் பேரு கனிகா இல்லை.உண்மையான பேரு முண்டக்கனி ஈஸ்வரி.குலதெய்வம் ஞாபகமா வீட்ல வச்சது.

இப்ப நீங்க சொல்லுங்க,இப்பவும் என்னை பழைய மாதிரி காதலிக்கிறீங்களா??

Do You Love Me Now??

You Merry Me?

அவள் அப்படி கேட்கவும் அவளை கட்டியணைத்து இதழோடு இதழ் வைத்து லவ் யூ சொன்னான் பாவாடைச்சாமி.

# நூல் அறிமுகம்: அதோ அந்தப் பறவை போல வானத்தின் பிள்ளைகளை ரசிப்போம்...

## இளையவன் சிவா

இயற்கையின் மீதும் காட்டுயிர்கள் மீதும் காட்டும் அக்கறையையும் பேரன்பையும் தனது எழுத்தின் வழியாக செயல்பாடுகளின் வழியாக உணர்த்தும் காட்டுயிர் சிந்தனையாளர் சூழலியலாளர் கட்டுரையாளர் இயற்கையியலாளர் என பன்முகத்தன்மை வாய்ந்த முகமது அலி அவர்களின் இந்த நூலில் பறவைகளின் வரலாற்றை அறிய முடிகிறது.

இந்த பூமியில் கடைசியாக பிறந்த மனிதன் தனது பகுத்தறிவினாலும் கல்வியின் பயனாகப் பெற்ற அறிவினாலும் இந்த பூமியையே தனக்கான சொந்தம் எனக் கொண்டாடி மகிழ்கிறான். அதே சமயம் அவனுக்குள் ஒளிந்திருக்கும் பேராசை அவ்வப்போது எட்டிப் பார்த்து பூமியின் இயற்கை வளங்களையும் சுற்றுச்சூழலையும் சீர்கேடு செய்யத் தொடங்கி விடுகிறது. எல்லாம் தனக்கு கீழ் தனது காலடியில் தான் என்ற ஆணவத்தின் பின்னே அலையும் மனிதர்கள் இயற்கையை அதன் பசுமையை அது தரும் அத்தனை வளங்களையும் தனக்கானதாக மாற்றிக்கொண்டு பூமியில் வாழும் மற்ற உயிரினங்களை அழிவின் பாதையில் தள்ளிவிடப் பார்க்கிறான். அந்த வகையில் வானத்தை தமது இல்லங்களாக வரையும் பறவைகள் இன்று கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருகின்றன.

மனிதன் பாழ்படுத்தியது போக மிச்சம் இருக்கும் இயற்கையும் அதன் வளங்களிலும் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கும் பறவைகளைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கான அடித்தளம் இடுகிறது இந்த நூல்.

ஆகாய வெளியில் நம் கண்களுக்குப் பரவச விருந்தளித்து பறந்து கொண்டிருக்கும் புள்ளினங்கள் பல்லுயிரிய வலைப்பின்னலின் முக்கியமானதொரு கண்ணியாக விளங்குகின்றன. மனிதனின் செயற்கையான செயல்களால் உருவான அத்தனை மாசுகளையும் எதிர்கொண்டு இயற்கையோடு இணைந்து வாழும் பறவைகளின் அற்புதங்களையும் அவை வாழும் சூழலில் ஏற்படும் அதிசயங்களையும் இயற்கையின் முக்கியமான சங்கிலிப்பின்னலின் இன்றியமையாத உயிரியையும் இந்த நூல் நமக்கு முழுமையாக அறியத் தருகிறது.

தான் மட்டுமே இந்த உலகில் உயர்ந்தவன் தனக்குக் கீழ் தான் மற்ற எல்லாம் என்ற சிந்தனைக்குள் ஆட்டம் போடும் மனிதர்கள் அறிவியலின் வளர்ச்சியில் ஏற்படுத்திய கருவிகளும் எந்திரங்களும் உலகின் வேகத்தையும் நாகரீகத்தையும் விரைவாக்கி ஓட்டத்தை இன்னும் துரிதமாக்கும் அதே வேளையில் மனிதர்களின் இயல்பான சிந்தனைகளும் அறச் செயல்பாடுகளும் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து வருவதை உணர வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். பறவைகளின் உலகினை அறியும் போது நாம் தவறவிட்ட தருணங்களை உணர முடிகிறது.




மனிதர்களின் தேவையற்ற செயல்பாடுகளாலும் போர்களாலும் எண்ணெய் வளங்களைத் தோண்டி எடுத்து நிலத்தையும் நீரையும் மாசுபடுத்தும் தருணங்களிலும் பறவைகள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து முற்றிலுமாக அழிந்து போவதை இன்னும் உணராமலேயே ஓடிக் கொண்டிருக்கிறோம்.

உண்மையில் பறவைகளின் இருப்பின் அர்த்தம் என்ன? அவற்றால் மனித குலத்திற்கு ஏதேனும் பயன் உள்ளதா? என்ற வினா நம்முள் எழும்போது அதற்கான விடைகளைத் தேடி அலைய வேண்டியதில்லை. இந்த நூலே முழுமையான கையேடாக நமக்கு விளக்கி விடுகிறது. மனிதர்களைப் போல பல மடங்கு எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் பூச்சிகளின் இருப்பை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்து உணவுச் சங்கிலியையும் பல்லுயிரையும் தொடர்ச்சியான இயக்கத்தையும் பறவைகளே தீர்மானிக்கின்றன. பூச்சிகளின் எண்ணிக்கை பெருகப் பெருக விளைநிலங்களின் பயன்கள் குறைந்து மனித வாழ்வு கேள்விக்குறியாக மாறிவிடும்.

அத்தகு சூழலில் பறவைகளே நமக்கு ஆபத்பாந்தவனாக மாறி காலச்சக்கரத்தை சரியான ஓட்டத்தில் சுழல வைக்கின்றன.

மரத்தின் பெயரோ பறவையின் பெயரோ தெரியாத புதிய தலைமுறையாக வளரும் நம் குழந்தைகளுக்கு பறவைகளின் வாழ்வியலை அறிமுகம் செய்து அதன் வழியே மனிதர்களின் வாழ்வியல் எப்படி தொடர்பு ஆகிறது என்பதையும் அறிமுகம் செய்வது காலத்தின் அவசியம்.

ஒவ்வொரு நாளையும் அழகாகத் துவங்கும் பறவைகளின் இயல்பும் பறத்தலும் காணும் நமக்குள் புத்துணர்வையும் குதூகலத்தையும் ஏற்படுத்தி அன்றைய நாளை ரசிக்க வைத்து விடுகின்றன.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்து இயற்கையின் சகல வளங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் மனிதன் அதற்கு அடித்தளம் இட்ட பறவைகளை கவனிப்பதன் அவசியத்தையும் பாதுகாப்பதன் அவசியமும் இந்த நூல் அறிவுறுத்துகிறது.

பறவைகளின் வாழ்வியல் பற்றிய கருத்துக்கள் தமிழ் மொழியில் வெகு குறைவாகவே கிடைக்கப்பெறுகின்றன. பிற மொழிகளில் பறவைகள் பற்றிய புத்தகங்களும் கட்டுரைகளும் படங்களுடன் வெளிவருகையில் தமிழில் அப்படி ஒரு குறை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இதை சரி செய்வதற்கான சிறந்த வழியாக இந்த நூலை நாம் அணுக முடியும். இயற்கை அறிவியலின் முழு பரிமாணத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டுமானால் நமது பதிவுகளும் அனுபவமும் மட்டுமே போதாது. அது குறித்த விஞ்ஞான நூல்கள் மற்றும் ஆய்வு கட்டுரைகளின் பரிச்சயமும் மிக அவசியம் என்பதை இந்த நூல் உணர்த்துகிறது. ஆங்கில மொழியுடன் ஒப்பிடும்போது தென்னிந்திய மொழிகளில் நவீன அறிவியல் இலக்கியங்கள் மிகவும் அரிது. இயற்கை வரலாறு பற்றிய அறிவியல் நூல்கள் தமிழில் தனிப்படைப்பாக வெளிவருவது மிக மிகக் குறைவு. இன்றைய சூழலில் அறிவியல் மனப்பான்மை என்பது ஓர் அந்நிய கலாச்சாரமாகவே கருதப்படுகிறது. அதிலிருந்து விடுபட்டு பழமையான மூடநம்பிக்கைகளுக்கு புதிதாய் அறிவியல் விளக்கங்களை தேடும் பாமரத்தனமான முயற்சிகளை தவிர்த்து அறிவியல் பார்வையில் இயற்கையை அணுகுதல் அவசியமாகிறது.

பறவைகள் பற்றிய அடிப்படை உண்மைகளையும் பல விஞ்ஞானத் தகவல்களையும் எடுத்துரைக்கும் இந்த நூல் பறவைகளின் தோற்றம், பரிணாமம், வாழ்க்கைச் சுழற்சி, உடல் அமைப்பு, வலசை போதல், சூழ்நிலைத் தகவுகள், சுற்றுச்சூழல் பணிகள் மற்றும் பறவைகளின் பயன்கள், அருகி வரும் பறவைகள், அவற்றின் வாழ்விடங்கள், பறவைகளை பாதுகாப்பதன் அவசியம் என பல்வேறு சுவாரசியமானத் தகவல்களை மிக நேர்த்தியாகவும் புள்ளி விவரங்களுடனும் அறியத் தருகிறது.

நம் சமூகத்தில் நிலவும் பறவைகள் மீதான பல்வேறு கட்டுக்கதைகளையும் இந்த நூல் உடைத்திருக்கிறது. பறவைகள், சுற்றுப்புறச் சூழ்நிலை, மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் இவை மூன்றுக்கும் இடையே உள்ள சங்கிலித் தொடர்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் இந்த நூல் பறவைகளைப் பற்றி அறிந்து கொள்பவர்களுக்கும் பறவைகளை நேசிக்கும் இயற்கை ஆர்வலர்களுக்கும் நல்லதொரு வழிகாட்டியாக அமையும் அதே வேளையில் மனித சமூகத்தின் தொடர்ச்சியான நெருக்குதலில் சீர்குலைந்து கொண்டிருக்கும் பூமிப்பந்தை சரி செய்வதற்கான ஓர் அடியை எடுத்து வைப்பதற்கு மனிதர்களுக்கு உதவும் பாதையாகவும் அமைகிறது..

*அதோ அந்தப் பறவை போல*
*ச.முகமது அலி*
*வெளியீடு வாசல் மதுரை*
*முதல் பதிப்பு ஜனவரி 2016*
*பக்கம் 148*
*விலை ரூபாய் 160*

# சாய் மீரா கவிதைகள்

நல்லவேளை நான் செத்துவிட்டது
நீ யை ஒருபோதும் நெருங்குதற்கில்லை
நானற்ற இத்தனிமையில்
நாதம் தேடியபோது
இத்தனை நான் களை
கண்டது அவ்வளவு ஆச்சரியமாய்
இல்லை
இப்போதைக்கு
இருளுள் புகுந்து
ஒளியில் வெளிப்பட வேண்டும்
அவ்வளவே!

◎

யாருமற்ற
வெற்று அறையின்
தென்மேற்கில் அமைதியாய்
அமர்ந்திருந்தேன்
வடகிழக்கில்
வந்து நின்றதொரு
குருவி
மெல்ல மெல்ல
குதித்தும் சிறகசைத்தும்
அங்குமிங்குமாய்
வெற்றுத் தரையில்
எதையோ கொத்திக் கொத்தி
எடுத்துவிட்டு
ஒரு கணம்
நேராய் என் புறமாய்
பார்த்திட
இருவருக்குள்ளும்
பற்றிக்கொண்ட
சிறு பதற்றத்தைப் பற்றி
பிரிதொரு நாளில்
நினைவு கூர்ந்து எழுதுவதாய்
வாக்களித்த பின்
பறந்தே விட்டது அகக்குருவி!

◎

சாதலை என்னவெனச்சொல்வது
வாழ்தலின் துவக்கு
என்பதைத் தவிர
உலகியலின் உச்சமான
பைத்தியக்காரத்தனங்களில்
ஒன்றான ஒன்றை
நான் செய்யத் துணிவுற்ற போது
காலம் தன் கடைவாய் பல்
தெரிய சிரித்துவிட்டு
சொல்லிய சொல்
“வாழ்தல் என்பது
சாதலின் துவக்கு
கண்ணம்மா
இருமையின் ஒருமையிலும்
யானே
ஒருமையின் இருமையிலும்
யானே”

◎

கொஞ்சம் மழையும்
கொஞ்சம் குளிரும்
கொஞ்சம் வெளிறிய வானமும்
கொஞ்சம் பச்சையேறிய வனமும்
போதுமானது
புதையுண்ட கையெல்லாம்
ஒரு கணத்தில்
உயிர்த்தெழ...
எல்லாம் வல்ல இறையின்
அருளால் இச்சிறியாள்
காக்கப்படுவதாக
ஆமென்!



# தட்டான் மலைக்காரி

**கவிஜி**

**வ**யதுக்கும் வாழ்க்கைக்கும் என்ன தொடர்பு. வாழ்வுக்கும் வாழ்தலுக்கும்தான் என்ன தொடர்பு. சிந்தனை சிக்கி முக்கி கல்லென இதயத்தில் தீ ஆற்ற... காலில் சக்கர மிட்டாய் கொண்டு நடக்கத் தொடங்கி விட்டோம். நாங்கள் யாருமே ஒரே வயதில் இருப்பவர்கள் அல்ல. ஒரே குணமும் அற்றவர்கள். துருவங்கள் பலவற்றில் இருந்து தோன்றிய கர்வமற்ற துறவுகள். ஆளுக்கொரு வயதில் ஆளுக்கொரு வானம் நாங்கள்.

பேரன்பை எப்படி வளர்த்துக் கொள்வது எனத் தேடியபோது காடுகளுக்குள் களமாடு என்று சொன்ன பதிலைத்தான் இங்கே மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறேன். நான் ஒரு பல மொழி பெயர்ப்பாளன். நானே ஒரு மொழி ஆகும் தத்துவத்தை உங்களிடம் நானாக சொல்ல மாட்டேன். நீங்களாக கண்டுணர்ந்தால் நிம்மதி. காண மறுக்கும் கண்களுக்கும் கவிதை தருவேன்.

எங்கள் கூட்டத்தில் புதிதாக இணைந்த இந்தப் பெண்ணுக்கு வயது கொஞ்சம்தான். வாழ்வின் மைல்கல் மட்டும் 61. பெயர் ஒன்று தான். ஆனால் கூப்பிட நிறைய வார்த்தைகளை சேகரித்துக் கொண்டோம். வழக்கமாகவே இங்கே யாருக்கும் ஒரு பெயர் கிடையாது. எந்தப் பெயரிலும் யாரையும் அழைக்கலாம். யாரும் திரும்பாத போது யார் திரும்புகிறார்களோ அவர்கள்தான் அந்தப் பெயருக்கு சொந்தமானவர்.

நீலவேணி என்றழைத்த போது முந்திக்கொண்டு திரும்பிய அந்தப் புது பெண் இனி அப்படியே அழைக்கப்படுவாள். பேர் மாறும் போது அறிவிக்கும் நாங்களும் மாறியே இருப்போம். மாறிக்கொண்டே இருப்பதில் மருத்துவம் இருப்பதாக நினைக்கிறது மன தத்துவம்.

சின்னஞ்சிறு இதயத்தைக் கொண்டு சீக்கிரம் சீக்கிரம் தன்னையே சுழலும் ஓய்வுக்குள்... ஓயாமல் கொண்ட தேடலைத்தான் இங்கே எங்களோடு சேர்த்துக் கொண்டிருக்கிறோம். சேர்ந்து கொள்ள தயாராக இருக்கும் உங்களோடுதான் அடுத்தடுத்து பேசவும் செய்வோம்.

இந்த வாரம் நாங்கள் சென்று கொண்டிருக்கும் காடு கோலம்பாளையம் பக்கமிருக்கும் தட்டான் கரடு. எங்களுக்கு இருந்தது இயற்கையோடு நாங்கள் இணையும் உணர்வு. நீலவேணி முகத்தில் இருந்தது தீரா திரும்புதல். நெற்றியில் சுழலும் புல்லாங்குழல் இசையை அரூபத்தில் காணும் பாக்கியம் எமக்குண்டு. அனைவரையும் கூட்டி காட்டியபோது ஆளுக்கொரு ஸ்வரம் சேர்த்துக் கொண்டார்கள். கணக்குக்கும் கற்பனைக்கும் இடையே ஒரு முழு வாழ்வு போனதாக நம்பும் நீலவேணியிடம் ஒரு கலைப்படைப்பின் தேடல் இருப்பதை உணர்ந்தே இருக்கிறோம். எது ஒன்றுக்கும் இலகும் மனதை எப்படி யார் கொடுத்தது என்று கேட்டபோது.. இளமையில் வறுமை.. வறுமையில் வாழ்வு என்று சொன்ன பதிலை மற்றவர்கள் கேட்காத மாதிரி கடந்து கொண்டிருந்தார்கள். நான் கேட்டிருக்க வேண்டாம் என்று நடந்து கொண்டிருந்தேன்.

ஓரிடத்தில் பிறந்து வேறொரு இடத்தில் வாழும் பெண்ணின் வாழ்க்கை எப்போதுமே அந்தரத்து ஊஞ்சல்தான்.. இல்லையா அரூபன் என்று கேட்ட நீலவேணிக்கு என்ன பதில் சொல்வது. பதில் பதிலாய் கொட்டும் பரவசத்தில் இருந்து வெற்றுப் பார்வையை கொட்டும் பக்குவத்தை அந்நேரம் எனக்கு கொடுத்தது.

ஒரு கால கட்டம் வரை... உடன் இருந்த அம்மா அப்பா அதன் பிறகு எங்கோ நின்று விடுகிறார்கள். நாங்கள் எங்கோ ஏதோ ஒரு வீட்டுக்கு வாசலாகி விடுகிறோம். இப்போது யோசித்தாலும் பயமா இருக்கு... ரூபன் என்று சொல்லி பெயரை தவறாக சொல்லி விட்ட பார்வையை என் பக்கம் ஆழமாய் வீசியபோது.. நான் வெறும் ன் கூட என் பெயர்தான் என்று புன்னகைத்தேன். புன்னகைக்கும் போதும் கண்ணீர் வருமா.. எனக்கு வரும். நான் புல்லரிக்கும் போதெல்லாம் புலி வரும் என்று நினைத்துக் கொள்வதும் உண்டு. நினைப்புக்கு என்ன கட்டுப்பாடு. ஞாபகம் இருக்கும் போதே நினைத்துக் கொள்தல் நல்லது.

அண்ணன் தம்பி... யாரோவா ஆகிடறாங்க... ஆத்தா தாத்தா காணாம போயிடறாங்க... சொந்த பந்தம் எல்லாம் புதுசு. ஒரு செடியை வேரோட எடுத்து வேற பக்கம் நட்டினா... எல்லா செடியுமா செழித்து வளர்ந்துரும் என்ற நீலவேணி முனங்குவதை எல்லாரும் சுற்றி நின்று கேட்டார்கள். நான் கேட்டுக்கொண்டே நீலவேணி நிழலில் நின்று சுற்றினேன். சிரிப்பும் சிவப்புமாக எங்களைச் சுற்றிய வட்டத்தைத் தாண்டித் தாண்டி சிறிது நேரம் விளையாடினோம். சிரிப்புக்கும் அழுகைக்கும் இடையே ஒரு சித்து எங்களில் இருந்து எழும்பியதை நாங்கள் கண்டுகொள்ளவில்லை.

ஊருக்கும் நமக்கும் இடைவெளி ஆகிடுது. ஊர் பஸ் உள்ளுக்குள்ள மோதிட்டே இருக்கும். ஊர் பேர் கொண்ட மைல்கல் கூட மயில் தோகைதான்... இல்லையா. இருந்திருந்த மாதிரி எல்லாமே மாறி போகுது ஏன் அரூபா என்ற கேள்விக்கு என்னிடம் நிறைய பதில்கள் இருக்கின்றன. நான் சிரித்து மட்டும் வைத்தேன். சிணுங்கும் சவத்தை மறைத்துக் கொண்டேன்.

ஆண்கள்லாம் ஒரே வீட்டில் இருக்கும்போது... பெண்கள் மட்டும் ஏன் ரெண்டு வீட்டில் வாழ வேண்டும். என் வீடு அம்மா வீடு ஆகுது.. என் ஊரு அம்மா ஊரு ஆகுது.. என் வாழ்க்கை ஞாபகமா மாறுது.. ஏன் ரூபா...

எனக்கு கேள்வி பிடித்ததோ இல்லையோ... என் பெயர் மாறிக்கொண்டே இருப்பது நன்றாக இருந்தது. நன்றி இலையரசி என்றேன். கணம் ஒன்றில் திகைத்து மறுகணம் ஒன்றில் புரிந்து புன்னகைத்த இலையரசிக்கு ஏக்கம் ஏக்கமாய் வருகிறது போல. சுற்றிலும் பார்த்து பார்த்து... மூச்சு மூச்சாய் வாங்கியது. காலம் சேர்த்து வைத்த வியர்வையைக் கொட்டிய அம்முகத்தில் புது ஞாலம் கண்டடைந்த மினுங்கல்.

எங்கள் கூட்டம்... கூட்டத்தோடு இருந்தாலும் தனித் தனி ஆளாகவே இருக்கும். அவரவருக்கு பிடித்த வானத்தில் தொற்றிக் கொண்டிருப்பார்கள். அவரவருக்கு பிடித்த புல்வெளியில் நீந்திக் கொண்டிருப்பார்கள். அவரவருக்கு பிடித்த பாறையில் புரண்டு கொண்டிருப்பார்கள். சொற்கள்

அற்ற வாக்கியங்களை தூக்கிச் சுமக்க தேவை இல்லை. சூழல் கொண்ட சிறகுகளைப் பொருத்திக் கொண்டால் போதும். பூமத்திய ரேகையில் டயர் வண்டி ஓட்டும் கனவை எல்லாருக்கும் காட்டினேன். பின்... தொடர்ந்து விழுந்து எழுந்த புகை விலக்கிய பூலோக புதிர் ஒன்றை போர்த்திக் கொண்டோம்.

எங்களைச் சுற்றிய காற்றுக்கு நாங்களே றெக்கை. வெயில்.. வேலி போட்டுக் கொண்டிருந்தது. இலையரசி அமர்ந்திருந்த மரத்தடியே நிழலுக்கு நல்ல வாசம்.

இங்க ஒரு ரயிலடி இருக்கும் பாரு... ஆ அந்தா அங்க ஒரு பெரிய ஆலமரம் இருக்கும். தட்டான் மலை முழுக்க என் காலடி பட்ருக்கு. அதோ அங்க தெரியுது பாரு.. அந்தப் பாறை மேல உக்காந்துதான் படிப்பேன். அப்புறம்... அப்புறம் எனப் பார்த்துக் கொண்டே வந்த இலையரசிக்கு காட்டுக்குயில் பெயர் தான் இனி பொருத்தம். கண்கள் அப்படியே பாடத் தொடங்கி விட்டது. பாட்டு வரிகளை மௌனத்தால் எழுதத் தெரிந்த கணக்கு டீச்சருக்கு கண்ணீருக்குள் காலம் நீந்தச் செய்யும் அறிவியலும் வாய்த்திருக்கிறது.

காலம் இவ்ளோ சீக்கிரம் ஓடும்னு நினைக்கவே இல்ல. இப்பதான் பாவாடை சட்டை போட்டுக்கிட்டு... ரெட்டை ஜடைல இந்த காடு மேடெல்லாம் அலைஞ்ச மாதிரி இருக்கு. இந்தா... கண்ணு முன்னாடி நான் மேய்ச்ச மாடுங்கலாம் வந்துட்டு போகுது.. என் தோழி ருக்குமணி பவுடர் பூசிட்டு வெள்ளை பூனை மாதிரி வந்து பேன்னு நிக்கறா. அடிவாரத்துல மேயற கோழிங்கலாம் கண்ணுல கத்துது... சாரை சாரையா கோரை புல்லு அசையறத பாக்க முடியுது. ஹ்ம்ம்...இருவது வயசுல இங்கிருந்து வெளிய போனேன். இப்பதான் வரேன். ஏன் வரலன்னு சொல்ல ஆயிரம் காரணம் இருக்கு.. ஆயிரத்தையும் ஒவ்வொண்ணா அழுதுகிட்டே சொல்லணும்னு ஆசையாவும் இருக்கு.

ஆயிரமும் காரணமா என்ன என்று கேட்க வந்தேன். வந்த என்னை அந்த நொடியே மறைத்துக் கொண்டேன். இலை உதிர்க்கும் போது... மரத்திடம் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. நதி ஓடும் போது... முதுகு திருப்பி அணை கொடுக்கக் கூடாது. இதயம் பேசும் போது... மூளை மூடிக்கொண்டு இருக்க வேண்டும்.

அரூ... நான் உளறல... என்னவோ மனசு கிடந்து தவிக்குது... காணாம போன உறவையெல்லாம் நினைக்க சொல்லுது. செத்து போன அம்மாவும் அப்பாவும் அதோ அந்த தோட்டத்துல வெண்டைக்காய் பறிச்சிட்டுருக்காங்க..

ஒரே நேரத்தில் கடந்த காலமும் கடக்கும் காலமும் சந்தித்துக் கொள்ளும் புள்ளியில்... கல்வனா சுழன்று கொண்டிருப்பது புரிகிறது. நான் இலையரசியைக் கல்வனாவாக மாற்றி விட்டேன். இதெல்லாம் எங்க காடு என்று சொல்லி சில நொடிகள் அப்படியே நின்று வெற்றிடம் பார்த்தபோது படபடவென இருந்தது. நினைவுக்கும் நினைப்புக்கும் இடையே கல்வனாவின் நெஞ்சாக்கூட்டு துடிப்பாக நாங்கள் குதித்தோம்.

நீங்க சொல்ற உங்க வானம் உங்க பூமி மாதிரி இல்ல. இது நிஜமாவே எங்க காடு. எங்க நிலம். இங்கதான் எங்க வீடு இருக்கும். இங்க தான் நாங்க கல்லும் மண்ணுமா வாழ்ந்தோம். மாடு மாதிரி உழைச்சோம். இங்கதான் கத்திரிக்கா போடுவோம். அதோ அங்க வெண்டைக்கா. அதோ அங்க பச்சை மொளகா... முருங்கை மரமெல்லாம் அந்தப்பக்கம் இருக்கும். நான் என் அக்கா என் தம்பி மூணு பேருமே எங்க அப்பா அம்மாவுக்கு கூட மாட ஒத்தாசை செய்வோம். சேத்துலயும் மண்ணுலயும் உழண்டு சுழன்று பன்னெண்டாவது வரை படிச்சேன். கணக்கு நல்லா வரும்னு அதுக்கப்புறம்தான் எங்க தூரத்து மாமா ஒருத்தர் மூலமா கல்லூரில சேத்து விட்டாங்க. அப்போல்லாம் பீஸ் கம்மி. ஆனா அதக்கூட கட்ட முடியாம ஒவ்வொரு முறையும் தடுமாறுவேன். அழுவேன். மதிய சாப்பாடு நேரத்துல யார் கூடவும் சேர மாட்டேன். ஏன்னா டிபன் பாக்ஸ்ல பழைய சோறு இருக்கற நாள விட வெறும் டிபனை கொண்டு போற நாள் தான் அதிகம்.

எவ்ளோ கணக்கு போட்டு எவ்ளோ பேர் வாங்கி இருந்தாலும்... காலம் போடற கணக்க புரிஞ்சுக்கவே முடியலயே... அரவா என்று சொல்லி... வெட்ட வெளியில் துளிர்க்கத் தவிக்கும் தனித்த செடி போல நின்ற கல்வனாவைப் பார்த்துக் கொண்டே நின்றேன். மலங்க மலங்க பார்க்கும் அந்தக் கண்களில் வளரும் முன்னே பிடுங்கி விட்ட கடலைச் செடி வேரின் பதற்றம் தெரிந்தது.

பிறந்து வளர்ந்த இடத்துக்கு மீண்டும் வருவதெல்லாம் வரமா சாபமா. யாருமே இல்லாத நிகழ்வில் எல்லாமாக இருந்த நினைவு என்ன செய்யும். தன்னில் இருந்து பிரிந்து ஓட கல்வனா தவியாய் தவிப்பது நன்றாகத் தெரிகிறது.

எங்க மண்ணுல யாரோ மாதிரி நிக்கறது எப்படி இருக்கு தெரியுமா... உயிரோடயே செத்து போற மாதிரி... என்று உடைந்து உடைந்து வந்த அவள் வார்த்தைகளில் ஒலிக்குருதி.

அந்தந்த கால கட்டத்துக்கு சென்று வர வாய்ப்பிருந்தால் மானுட வாழ்வு எப்படி இருக்கும். எல்லாருமே அவரவர் சிறு பிள்ளை காலத்துக்கு செல்லவே வரிசை கட்டி நிற்பார்கள். வரிசையில் நின்று பார்த்தேன். வரம் நடுவே ஒரு மரம் விசும்ப விரும்புகிறது.

வீட்டுக்குள் இருந்து அம்மா நான் பள்ளிக்கூடம் போயிட்டு வர்றேன் என்று கத்திய சிறுமி... இருப்பா வர்றேன் என்று அப்பாவுக்கு கட்டங்காப்பி கொண்டு போன சிறுமி... ஒழுக்கமா என் பேனாவை குடுத்துரு

என்று தம்பியிடம் கத்திய சிறுமி... ம்மா இவ என்ன அடிச்சிட்டேருக்கா என்று அக்காவைப் பார்த்து முறைத்த சிறுமி... உங்கூட்டுக்கு என்னையும் கூட்டிட்டு போடி என்று தோழியிடம் கெஞ்சும் சிறுமி.. பாறை மேல் அமர்ந்து மாலை நேரம் படிக்கும் சிறுமி... தோகை விரிந்து நடக்கும் மயிலை கோழிக்குஞ்சாய் பின்தொடரும் சிறுமி... வரப்பில் அமர்ந்து மாடு மேய்வதை அசையாமல் பார்க்கும் சிறுமி... மரத்தில் அமர்ந்து வானம் மேய்வதை மேகமாய் பார்க்கும் சிறுமி... சேற்றில் கால் வைத்து வைத்து புண்ணாகி நொண்டி நொண்டி நடக்கும் சிறுமி... சுடு சோறு வேணும் என்று மூஞ்சை தூக்கி வைத்துக் கொள்ளும் சிறுமி... செவலை நாயோடு ஓடி விளையாடும் விடுமுறை நாள் சிறுமி என்று அவளே ஆங்காங்கே அடுத்தடுத்த அவளாகத் தெரிவதை எனக்கும் காட்டினாள்.

என்னவோ போல இருந்தாலும்.. எண்ணத்தின் வண்ணங்களைக் காண்பது நின்றபடியே பறப்பதுவே. பருக்கள் முகத்தில் கருக்கல் கட்டாத சிறு வானம். கொஞ்சும் சிலையான சிறு நங்கை கொஞ்சம். பறந்து பறந்து கண்டேன் அவளை. பருவத்தில் பாகற்காய் இனிக்கும் என்று சொல்லும் புன்னகையோடு தெரிந்தாள்.

அப்போல்லாம் நிறைய தட்டான் பறக்கும் இங்க. அதுனாலதான் இந்த மலைக்கு இந்தப் பேரே. தட்டான் றெக்கை அப்பிடியே புறுபுறுனு கொசுவலை மாதிரி மினுங்கும். கரகரனு அது றெக்கை அடிக்கற சத்தமே ஆசையா இருக்கும். சொல்லிக் கொண்டே தேடிய கண்களில் பறக்க மறந்த இரு தட்டான்கள் கண்டேன்.

தட்டான் மலை அடிவாரத்தில் நீட்டிக் கொண்டே இருக்கும் கிறுக்கல்களாக நின்றோம். பசித்த வயிற்றுக்கு அது இது என்று எதுவும் இழுபடுவது போல.. கனத்த அந்தக் கண்களில் காட்சிகளின் குவியல். பாறையிடம் நின்று பேசத் தொடங்கி விட்ட கோதை... பாதி பேச்சில் மூச்சடக்கி என்னைப் பார்த்தாள். எனக்கு புரிந்து விட்டது. பொறுமை பொறுமை என்றேன். எனக்குத்தான் பாறை மொழி தெரியுமே.

அருகே சென்று யார் என்று தெரிகிறதா என்று கேட்டேன்.

பாறை கண்கள் விரிந்தது. கோதை சொன்னதை அப்படியே மொழி பெயர்த்து சொன்னேன். பாறையின் முகத்தில் ஆனந்தக் கசிவு. அப்படியே சற்று நொடிகள் சரிய சரிய பார்த்து பூத்தது.

நல்லா நினைவு இருக்காம். பச்ச கடலய கொட்டிக் கொட்டி தின்னுவீங்களாம். பாறை சொரசொரப்புல பட்டும்படாம உள்ளங்கை உரசி உரசி பாப்பிங்களாம். நினைச்சா ஓடி வந்து மேல ஏறி நின்னு மலை காத்துக்கு மாலை போட்டமாதிரி ஆடுவீங்களாம். ஒரு முறை சறுக்கி கீழ விழுந்து முட்டில அடி பட்டுச்சாம். அப்போ உங்களோடு சேர்ந்து அதுவும் அழுததா சொல்லுது என்றேன்.

ஓடிச்சென்று பாறையைத் தாவிக் கொண்டாள் கோதை. கைக்கடங்காமல் பார்க்கும் பாறைக்கும் பேரன்பைத் தாங்க முடியாத மூப்புதான். மூச்சு வாங்கியது.

காலப்போக்குல உங்க சொந்த பந்தம் மட்டுமா இங்கிருந்து காணாம போச்சு.... எங்களோட சொந்த பந்தங்களும் தான். வீடு கட்ட... ரோடு போட... பாலங்கட்ட... அடுக்குமாடி கட்டன்னு எங்காளுங்கள வெட்டி வெட்டி.... வெடி வெச்சு தகர்த்து.. தூக்கிட்டு போய்ட்டானுங்க. நான் கொஞ்சம் சரிவுல இருக்கறதுனாலயோ என்னவோ விட்டுட்டானுங்க. எப்ப ஆப்பு வைக்க போறாங்கனு தெரியல என்று சிரித்துக் கொண்டே சொன்ன பாறையை மொழிபெயர்க்கும் போது.. கோதைக்கு கண்களில் வார்த்தைகள் மின்னின. நெஞ்சத்தில் காலங்கள் விம்மின.

அடுத்து நின்ன இடம்... அம்மாம் பெரிய ஆலமரம்.

கிளிகளோடு கிளிகளாய்.. பறவையோடு பறவையாய்... வெயிலோடு வெயிலாய்... தனக்கும் மரத்துக்குமான உறவை விவரிக்க... அப்படியே விளக்கிச் சொன்னேன். சொன்ன நொடியில் தெரிந்து கொண்டது. காற்றுத் தோழி உடனே வந்து சேர்ந்து கொள்ள உடலை ஒரு சிலிர்ப்பு சிலிர்த்தது. பூ உதிர்த்து இலை உதிர்த்து இசை காட்டி இதயம் பேசியது மரம். என்னை அருகே அழைத்து கோதை எப்போதோ செதுக்கி இருந்த அவள் பெயரை வெளிக் காட்டியது.

ஹேய் யப்பா.. நாப்பது வருசமா எப்பிடி அழியாம என்று வினவினேன். எனக்குப் பிடித்த மனிதர்களை எப்போதும் அழிய விட மாட்டேன் என்று சொல்லி கிளையாட்டிய மரத்துக்கு அவள் வைத்த பெயர் மஞ்சுவாம். மஞ்சு... நிழலால் அணைத்துக் கொள்ள... கோதை அணிலாய் நின்ற இடத்திலேயே தாவிக்கொண்டே திரும்பி அப்படியா என்று கேட்க கேட்க வாய் விட்டு அழுது விட்டாள்.

மரம் பேசும்னு படிச்சிருக்கேன். ஆனால் முதல் முறையா உணர்றேன் என்று சொல்லி கைகள் விரித்து மரத்தை அணைப்பதாக பார்த்தவள் மீது பக்கத்தில் இருந்த மரம் மே பூக்கள் உதிர உதிர வாழ்த்தியது.

கைவிடப்பட்ட ஒரு கிணறு இருக்குமே எனத் தேடிய கண்களில் புதர் மண்டிய இடத்தில் இருக்கும் கிணற்றைக் காட்டிக்கொடுத்தது காற்றுக் காதலி. நான் காற்றை காதலியாகத்தான் பார்ப்பது. மூச்சோடு இருக்கும் அவளை அப்படி பார்ப்பதே சரி. கன்னம் இணுங்கிச் சென்ற காதலியைக் கடிப்பதாக பாவித்தேன். வெட்கம் தாங்காமல் நெளிந்து வளைந்தாள்.

திடும்மென திணறும் முகத்தில் மூர்ச்சையாகி விட்டது போல அப்படி ஒரு தோற்ற மாற்றம். பார்த்துக் கொண்டே

நின்றாள். ஆனால் அவள் கால்கள் சற்று பின்வாங்கி என் பின்னால் மறைவது போல ஆகி ஆனாலும் முகம் எட்டி கூர்ந்து கவனிப்பது சற்று தூரத்தில் என்று தெரிந்து விட்டது.

என்னாச்சு அனலி... ஏன் இப்பிடி நடுங்கறீங்க என்றேன்.

அது... அது தான் என் தம்பி.. - சொல்லிக்கொண்டே நீண்டிருந்த கையில் விரல்கள் எல்லாம் கண் திறந்திருந்தன. அந்த முகத்தில் விரிந்த பேரன்பின் பற்றாக்குறை சிறுபிள்ளை தவிப்பாக தத்தளித்தது.

பேசி முப்பது வருஷம் இருக்கும். குடும்ப சண்டை தான். போக்குவரத்து இல்ல. இந்தக் காடு இப்ப அவன் பேர்லதான் இருக்கு.

அனலியின் கண்களில் கண்ணீராய் சேர்ந்திருந்த காலம் கடகடவென கொட்டியது.

எங்கள் கூட்டமும் அப்படியே என் பின்னால் நின்றது. எங்கள் கண்கள்... வெள்ளை வேட்டி சட்டையில் புல்லட்டில் இருந்து இறங்கி வீட்டுக்குள் சென்று கொண்டிருக்கும் அவரின் மீதே இருந்தது.

கால வேகத்தில் தம்பிகள் வேகமாய் பெரிய மனிதர்களாகிப் போகிறார்கள். - குரல் வந்த திசையில் பாதி சிதிலமடைந்திருந்த புத்த சிலை ஒன்று கிடந்தது. என் கண்களின் வழியே வேகமாய் கழுத்து திருப்பிய அனலிக்கு... ஐயோ என்றிருந்தது. இது இன்னும் இங்க இருக்கு பாரு... என்று முனகியபடியே ஆச்சரியம் விரிய எட்டித் தாவி அந்த சிலையைத் தூக்கி சிறுபிள்ளையைப் போல நெஞ்சோடு ஏந்திக் கொண்டாள்.

நினைவுகள் அவள் நெற்றியில் ரீங்காரமிடுவதை உணர்ந்தேன்.

இது எப்பிடி இங்க வந்துச்சுனு தெரியாது. ஆனா இது இங்கதான் இருந்துச்சு. நோம்பி நாள்ல மாலை போட்டு பொட்டு சந்தனம்லாம் வெச்சு... மத்த சாமிங்களோடு இதுக்கும் சாமி கும்புடுவோம். அனலியின் கண்களில் ஒன்று புத்தருக்காக கண்ணீர் சிந்தியது. இன்னொன்று தம்பிக்காக முந்தியது.

அவள் பார்வை சற்று தூரத்தில் தெரிந்த தம்பி மீதே குவிந்திருந்தது.

சரி சரி... இருங்க என்றேன். புத்தன் தோளில் ஒரு சிறுமியைப் போல சாய்ந்து கொண்டு விசும்பலால் சுரண்டும் அனலிக்கு இப்போது என்ன வேண்டும் என்றேன். வாய் பிதுக்கி சொல்ல முடியாத அழுகையைக் காட்டினாள். வாங்க நான் பேச வைக்கிறேன் என்றேன். என்னவோ தடுக்கிறது. வாழ்வின் மிக ஆழமான வளைவுகள் ஒருபோதும் நிமிர்வதே இல்லை. வேண்டாம் என்று சொல்லி அப்படியே நின்று அந்த தோப்பு வீட்டைப் பார்த்து பார்த்து விசும்புகிறவளுக்கு என்ன சமாதானம் சொல்வது.

ஆனது ஆச்சு... என நீங்க இருங்க நான் இப்ப வரேன் என்று சொல்லி தம்பி வீட்டை நோக்கி நடந்தேன்.

அந்த செம்மண் பாதையில் காலத்தின் சுவடுகளை உணர முடிந்தது. இரண்டு தலைமுறையின் இடைவெளியைக் காண முடிந்தது.

நடந்து நடந்து வாசல் அடைகையில் தூரத்து வாசம் பக்கத்தில் உணர்ந்தேன். நின்று பார்த்து அழைத்து பார்த்து அப்படியே... வீட்டுக்குள் சென்றும் பார்த்தேன்.

சில நிமிடங்களுக்கு பிறகு வெளியேறினான். அங்கிருந்து பார்க்கையில்... ஒரு சிறுமி தன் சேக்காளிகளோடு நின்று பணியாரம் கொண்டு வரும் நண்பனுக்காக காத்திருப்பது போலவே தெரிந்தது. சில கேள்விகளுக்கு நிறைய பதில்கள் கிடைத்து விடுகின்றன. எப்போதாவது இப்படி நிறைய பதில்களை வைத்துக் கொண்டு ஒற்றைக் கேள்விக்கு அல்லாடுகிறது இந்த மனம். நான் வருவதை ஆவலோடு பார்த்துக் கொண்டே நிற்கும் அனலிக்குப் பின்னே அந்தப் பாறையும்.. தட்டான் மலையும்கூட நான் என்ன சொல்லப் போகிறேன் என்று காத்திருப்பதாக தோன்றியது.

நான் இயல்பாகவே இருக்கும் போதே இல்லாமல் போகிறவன். இப்போது ஏனோ இல்லாமலும் இருக்கவே நினைக்கிறேன். அனலி மாதிரி சிறுமிகளுக்கு பிடித்துக்கொள்ள விரல் கொடுப்பதுதான் இந்த வெயிலி நண்பனுக்கு அழகு.

மனம் முழுக்க நிழல் சூழ்ந்து கொண்டது. கொண்டாட முடியவில்லை. மெல்ல அனலியை நோக்கி நகர்ந்தேன். என் கூட்டம் குத்த வைத்து ஆளுக்கொரு குத்துக்கல்லாய் அமர்ந்திருந்தது.

பாறை மரம் செடி கொடி கோரைப்புல் வரப்பு காடுனு... இதெல்லாம் பேசறதை மொழி பெயர்த்து சொல்லும் உனக்கு என் தம்பி மௌனத்தை மொழி பெயர்க்க தெரியலயான்னு கேட்டால் என்ன சொல்வது.

உங்க தம்பி எதுவுமே பேசலன்னு எப்படி சொல்றது... யோசித்துக் கொண்டே பாறைத் துண்டாக அருகே செல்கிறேன்.

61 வயது கணக்கு டீச்சர்... 11 வயது தட்டான் மலைக்காரியாக மாறி என்னையே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.



# விடமாட்டேன் நான்

**எஃப்.மரிய பொனவெஞ்சர்**

வலைதளத்தில் எகனாமிக் டைம்ஸ் செய்திகளை மேய்ந்து கொண்டிருந்த கதிர் என்னும் கதிரவனை அந்த செய்தி ஜிலேபியில் ஒழுகும் ஜீராவால் ஈர்க்கப்படும் ஈ போல கவர்ந்தது.

'பென்னி பங்கு அளிக்கும் 870% டிவிடெண்ட்'

பிரகடனம் செய்யப்பட்ட டிவிடெண்ட் விகிதம் அதிகமாக இருக்க, ஈர்க்கப்பட்ட கதிர் அந்த செய்தியின் உள் நுழைந்து அதை வாசிக்க தொடங்கினான்.

"கபாரியா டூல்ஸ் – 10 ரூபாய் முக மதிப்பு கொண்ட கபாரியா டூல்ஸ் எனும் கம்பெனியின் பங்குக்கு இந்த வருட டிவிடெண்டாக 87 ரூபாய் வழங்கப்பட உள்ளது. கடந்த வருடம் இதே கம்பெனி 55 ரூபாய் டிவிடெண்டும் 1:1 விகிதத்தில் போனஸ் பங்குகளையும் அளித்தது. இந்த கம்பெனியின் பங்கின் சந்தைமதிப்பு பன்னிரெண்டு ரூபாய் தான்"

டிவிடெண்ட் என்பது ஒரு கம்பெனி தன் லாபத்தை பங்குதாரர்களுக்கு பங்கீடாக அளிப்பது.

அதிர்ந்து போனான் கதிர்.

நல்ல டிவிடெண்ட்.

மேலும் ரிசர்வாக வைத்திருந்த சேமிப்புத் தொகை கொண்டு போனஸ் பங்குகளை பகிர்ந்தளித்திருந்தது கபாரியா டூல்ஸ். இவை அத்தனையும் தாண்டி குறைந்த சந்தை மதிப்பு கொண்ட பங்கு.

கதிர் கபாரியா டூல்ஸ் பற்றிய கம்பெனி விவரங்களை இணையத்தில் தேட ஆரம்பித்தான். சென்னையைத் தலைமையகமாக கொண்டு செயல்பட்டு வந்தது கபாரியா டூல்ஸ். நிறுவனர்கள் பற்றிய குறிப்பு கம்பெனி மேல் நல்மதிப்பை அதிகரித்தது.கம்பெனியின் கடன் முற்றிலும் பூஜ்யம்.

கம்பெனியின் எல்லா விவரங்களையும் ஆராய்ந்த கதிர் கபாரியா டூல்ஸ் பங்குகளில் முதலீடு செய்வதென்று முடிவு எடுத்தான்.

அங்கிங்கு சிதறி கிடந்த வங்கி இருப்புகளை கணக்கிட்டு பார்த்ததில் ஒரு லட்சத்து ஆறாயிரம் தேறியது.

வரும் புத்தாண்டின் பெயர் சொல்லி வேலை பார்க்கும் கம்பெனியில் இருபதாயிரம் விசேச கடன் பெறலாம்.

ஆக மொத்தம் ஒரு லட்சத்தி இருபதாயிரம் ரூபாய் கபாரியா டூல்ஸ் பங்குகளில் முதலீடு செய்யலாம்.

கபாரியா டூல்சின் முந்தைய செயல்பாடுகளை பார்த்தால் வருடத்துக்கு ஒரு போனஸ் பங்கு அளிக்கப் பட்டிருந்தது. மேலும் டிவிடெண்ட் தான் செய்யும் முதலீட்டுத் தொகைக்கு குறைந்தது வருடத்திற்கு ஆறு லட்சம் கிடைக்கும். இது எனக்கு ஒரு இரண்டாவது வருமானமாக இருக்கும்.

கதிரின் கணக்கு எப்பொழுதும் தவறியதே இல்லை.

நேரம் பார்த்தான். ஒன்பது இருபதாகி இருந்தது.பங்குச் சந்தையில் வர்த்தகம் ஆரம்பமாகி இருக்கும்.

காலை சூரியனின் வெளிச்சம் சோம்பேறித்தனமாய் அறையினுள் எட்டிப் பார்த்துக்கொண்டிருந்தது.

கதிர் தனது ஷேர் புரோக்கருக்கு கைபேசியில் அழைப்புவிடுத்தான்.

"எனது கணக்கில் பத்தாயிரம் கபாரியா டூல்ஸ் பங்குகள் வாங்க வேண்டும். என்ன விலைக்கு கிடைக்கிறது சந்தையில்?"

ஷேர் புரோக்கிங் கம்பெனியில் வேலை பார்க்கும் திவ்யா கதிரின் அழைப்பை ஏற்று பேசினாள்," கதிர் சார், கபாரியா டூல்ஸ் பற்றி இன்று விசாரிக்கும் நாப்பத்தி ஆறாவது ஆள் நீங்கள். எனக்கே அந்த ஷேர் தேவை. ஆனால் நோ செல்லர்ஸ்: ஒன்லி பையர்ஸ்"

திவ்யா அப்படி சொன்னது கதிரின் சுய மரியாதையை சற்று அசைத்து விட்டது.

எப்பாடு பட்டாவது கபாரியா டூல்ஸ் பங்குகளை வாங்கி விடுவது என்று கதிர் முடிவெடுத்தான்.

கபாரியா டூல்ஸ் கம்பெனியின் அலுவலகத்தின் தொடர்பு எண்ணை தேடி கண்டு பிடித்தான் கதிர்.

'விடுவதாய் இல்லை. நீயா, நானா ஒரு கை பார்த்துவிடுகிறேன்'

எடுத்த டெலிபோன் ஆபரேட்டர் பேசிய ஆங்கில உச்சரிப்பு கதிரை ஒரு நிமிடம் கதி கலங்க வைத்தாலும்," நிதித் துறை ப்ளீஸ்" என்றான், தான் கலங்கி விட்டது குரலில் தெரியா வண்ணம்.

"நிதி துறையில் யார் வேண்டும் உங்களுக்கு சர்?" என்றாள் அந்த முகம் தெரியா ஆப்பரேட்டர்.

"உயர் அதிகாரி யாராவது"

"யார் பேசுவது என்று சொல்ல சர்" என்று வினவினாள் சார் என்ற வார்த்தையில் சாக்கு பின் கால் போடாத உச்சரிப்புடன் அந்த ஆப்பரேட்டர்.

"நான் பேசியபின் அந்த அதிகாரியே உனக்கு சொல்வார், உனக்கு சொல்ல தேவையிருந்தால்"

இது நாள் வரை அந்த ஆப்பரேட்டரிடம் யாரும்

அப்படி பேசியதில்லை.

"ஒரு நிமிடம் ப்ளீஸ்" என்ற அவள் யாரிடமோ பேசிவிட்டு," சர், உங்கள் நபர்" என்று தொடர்பு கொடுத்தாள்.

" யெஸ்,குட் மார்னிங்" என்ற குரலின் தோரணையே கதிருக்கு உணர்த்தி விட்டது, அவரிடம் கடலை விற்பது செல்லுபடியாகாது என்று.

கதிர் நேரடியாக விஷயத்திற்கு வந்தான்,"சர்" அந்த டெலிபோன் ஆப்பரேட்டரின் பாதிப்பு தனக்கும் வந்துவிட்டதை உணர்ந்தான் கதிர்."உங்கள் கபாரியா டூல்ஸின் சந்தை செயல்முறையை கூர்ந்து நோக்கும் முதலீட்டாளர்களில் நானும் ஒருவன்"

"சற்று துரிதமாக நீங்கள் சொல்ல வந்ததை சொல்லுங்கள்"

"ஒரு பத்தாயிரம் பங்குகள் உங்கள் மேன்மைமிகு கம்பெனியான கபாரியா டூல்ஸில் முதலீடு செய்யலாம் என்று உள்ளேன்"

அந்த அதிகாரி சத்தமாக சிரித்தார்.

"உங்களது ஈடுபாட்டிற்கு நன்றி. நாங்கள் செபி மேற்பார்வையில் உள்ளோம். சந்தையில் யாராவது விற்றால் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். நான் என்னிடம் உள்ள பங்குகளை விற்கும் முடிவிற்கு வந்தால் உங்களை நினைவில் கொள்கிறேன்"

இணைப்பை அவர் துண்டித்தார்.

கதிர் அவ்வளவு சுலபமாக மண்ணைக் கவ்வ விரும்பவில்லை.

ஷேர் புரோக்கிங் கம்பெனியின் கிளை மேலாளருக்கு ஃபோன் செய்தான் கதிர்.

'விட மாட்டேன் அவ்வளவு சுலபமாக. ஒரு கை பார்த்து விடலாம். நீயா நானா என்று'

"ராம்கி இந்த பக்கம். சொல்லுங்க"

"ராம்கி நான் கதிர் பேசுறேன்"

"சொல்லுங்க"

ராம்கியின் நேரம் மல்ட்டி மில்லினியர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டது. அவன் கதிரின் அழைப்பை ஏற்றதே பெரிய விஷயம்.

"நான் பத்தாயிரம் கபாரியா டூல்ஸ் பங்குகளை வாங்கலாம் என நினைக்கிறேன்"

"நீங்கள் திவ்யாவிடம் பேசினீர்களா?"

"பேசினேன். சந்தையில் கிடைக்கவில்லை. அது தான் க்ரே மார்க்கெட்டில் வாங்கலாம் என்று உள்ளேன்"

"சுதிர்"

"நான் கதிர்"

"ஓகே கதிர். க்ரே மார்க்கெட் என்பது ஒரு பங்கு, சந்தைக்கு வெளிவருமுன் செயல்படும் மார்க்கெட். கபாரியா டூல்ஸ் க்ரே மார்க்கெட்டில் கிடைக்காது. மறந்து செயல்படுங்கள்"

"அப்ப என்ன தான் வழி"

ராம்கியின் இணைப்பு ஏற்கனவே உயிர் இல்லாமல் இருந்தது.

விடமாட்டேன். ஏதாவது வழி இருக்கும். பார்த்து விடலாம் ஒரு கை. நீயா, நானா என்று.

கதிர் அவன் அலுவலக அதிகாரிக்கு ஃபோன் செய்தான்.

"சார். இன்று ஒரு நாள் விடுப்பு வேண்டும். அம்மாவை ஊருக்கு அனுப்ப வேண்டும்"

"கதிர், பெயரை கெடுத்துக்காதே அடிக்கடி லீவு போட்டு"

"இல்லை சார். நன்றி சார்"

அதிகாரி மேலும் விசாரிக்கு முன் நன்றி சொல்லி முடித்துக் கொண்டான் கதிர். மனிதர் நல்லவர். அவர் அக்கா பெண்ணை கதிருக்கு கல்யாணம் செய்து வைக்க தீவிரமாக முயன்று வருகிறார். கதிரின் மேல் ஒரு மென்மையான நோக்கு கொண்டவர்.

அவர் அக்கா பெண்ணை மணந்து கொண்டால் உத்தியோக உயர்வு வாங்கி தந்து விடுவார். கிடைக்கும் வசதிகளும் கூடும்.

ஹெல்மெட்டை அணிந்து தனது நூறு சிசி பைக்கை உதைத்து கிளப்பினான் கதிர்.

கபாரியா டூல்ஸ் பங்குகள் மட்டும் கிடைத்து விட்டால் கிடைக்கும் முதல் டிவிடெண்டில் வாங்க வேண்டியது சின்னதாக ஒரு கார். வாங்கி விட்டு இந்த பைக்கை காயலான் கடையில் போடணும்.

மனதிற்குள் எண்ணிக் கொண்ட கதிர் பைக்கை கபாரியா டூல்ஸ் தலைமை அலுவலகம் நோக்கி செலுத்தினான்.

விடமாட்டேன். பார்த்து விடலாம் ஒரு கை. நீயா, நானா என்று.

கபாரியா டூல்ஸ் தொழிற்சாலை கும்மிடிப்பூண்டியில் இருந்தது. ஆனால் அதன் தலைமையகமோ ராமாபுரத்தில் இருந்தது.

தலைமையகத்தின் பெரிய இரும்பு கேட், நுழைவு வாயில் தெரியாமல் நுழையும் அந்நியர்களை தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது.

கதிர் தன் பைக்கை நிறுத்தி விட்டு நுழைவு வாயிலை தட்டி சத்தம் செய்தான்.

இரும்பு கேட்டில் இருந்த ஒரு சிறிய ஜன்னல் திறந்து பாதுகாவலர் முகம் எட்டி பார்த்தது.

“எஸ். என்ன வேண்டும் சொல்லுங்க?”

”நிதித் துறை தலைவரை பார்க்க வேண்டும்”

“ப்ரெஸ்ஸா”

“இல்லை”

“அப்பாயிண்மெண்ட் இருக்கா?”

“இல்லை”

“இடத்தை காலி பண்ணுங்க. கபாரியா சார் வரும் நேரம்”

கதிரின் எண்ணமெல்லாம் தங்க முட்டையிடக் கூடிய பத்தாயிரம் பங்குகள் வாங்குவதின் மேலேயே இருந்தது. நுழைவு வாயிலை விட்டு சற்று தள்ளி பைக்கை நிறுத்திவிட்டு அடுத்து என்ன மூவ் எடுக்கலாம் என்று கதிர் யோசித்துக் கொண்டிருந்த பொழுது கருப்பு நிறத்தில் பள பள என்று ஒரு பென்ஸ் கார் வந்து கேட்டின் அருகில் நின்று பீப் என ஒரே ஒரு முறை ஹார்ன் செய்தது.

வாயில் காப்பவர்கள் இருவர் இரும்பு கேட்டை இரண்டு பக்கமும் மின்சாரம் பாய்ந்தவர்கள் போல் பரபரப்புடன் திறந்தனர்.

பென்ஸ் குலோப் ஜாமுன் போல் வழுக்கி கொண்டு உள்ளே சென்றது.

இரும்பு கேட் திரும்ப மூடுமுன் கதிர் நுழைவு வாயிலை நெருங்கி இருந்தான்.

”அண்ணே”

அவனைப் பார்த்த வாயில் காப்பவர்களில் ஒருவன்,”ஏம்பா, நீ இன்னும் போலியா?” என்று கதிரின் அருகில் வந்தான்.

“அண்ணே எனக்கு ஒரு உதவி செய்வீங்களா” என்ற கதிரிடம்,”என்னப்பா, பணம் எதுவும் வேணுமா?” என்றான்.

“நிதித் துறை...”

“அதான் முதலிலேயே சொன்னேனே தம்பி. முடியாதுன்னு. நீ என் வேலைக்கு உலை வைக்கப் பாக்கிறியே”

அடுத்த வாயில் காப்போன் கதவை மூடியிருந்தான்.

“உனக்கு நிதித் துறையில் என்ன வேண்டும் சொல்”

“வேறு ஒண்ணும் இல்லண்ணே. உங்க கம்பெனியின் பங்குகள் வாங்க வேண்டும்”

அட. அவனா, நீ, என்பது போல் கதிரை ஒரு நிமிடம் பார்த்த அந்த வாயில் காவலன்,” எனக்கு தெரிஞ்சு ஒரே ஒரு வழி தான் இருக்கு” என்று கதிரை தனியே அழைத்துச் சென்றான்.

பத்து நாட்கள் கழிந்து, கபாரியா சீனியர் எப்பொழுதும் போல் பதினோரு மணிக்கு அலுவலகம் நுழைந்தார்.

அன்று அலுவலகத்தில் ஒரு பெரிய ஹைலெவல் மீட்டிங் இருந்தது.

அம்மாதிரி மீட்டிங்குகள் போர்ட் ரூமில் தான் நடக்கும்.

எப்பொழுதும் போல் கபாரியா சீனியர், போர்ட் ரூமில் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று மீட்டிங் நடக்கு முன் மனித வள துறை மேலாளர் சந்தோஷுடன் ஒரு நோட்டம் விட்டார்.

மீட்டிங் நடக்கும் அறை வெகு சுத்தமாக, ரூம் ஃப்ரெஷனர் கமகமப்புடன் இருந்தது.

“என்ன ஒரு மாற்றம் தெரியுதே, சந்தோஷ் ” என்ற கபாரியா சீனியரிடம், சந்தோஷ்,” ஆமாம் சார், புதிதாக ஒரு பையனை அட்டெண்டர் வேலைக்கு சேர்த்திருக்கிறோம். செய்யும் எல்லா வேலைகளிலும் ஒரு அர்ப்பணிப்பு தெரிகிறது”

கபாரியா சீனியர்,”அந்த பையனை கூப்பிடுங்கள் பார்ப்போம்” என்றார்

சந்தோஷ் வெளியில் நின்ற அந்த அட்டெண்டரை அழைக்க வந்து நின்றான், கதிர் எனும் கதிரேசன்.

பத்து நாட்களுக்கு முன் தனக்கு முன் பரிதாபமாக நின்ற கதிரிடம்,” எனக்கு தெரிஞ்சு ஒரே ஒரு வழி தான் இருக்கு” என்று தனியே அழைத்துச் சென்ற அந்த வாயில் காவலன் சொன்னான்,”இந்த கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தால் உனக்கு கம்பெனியில் வேலை பார்ப்போருக்கு கிடைக்கும் கோட்டாவில் பங்கு கிடைக்கும். ஆனால் இப்போது எனக்கு தெரிந்து வேலை எதுவும் உனக்கு தகுந்த மாதிரி காலி இல்லை. ஒரே ஒரு அட்டெண்டர் வேலை தவிர” என்றான்.

கதிர் தனக்குள் சொல்லிக்கொண்டான்,” நீயா, நானா பார்க்காமல் விடமாட்டேன்”



# விடுப்பு

**மழைக்குருவி**

குமரனுக்கு படபடப்பாகவே இருந்தது. இன்றைக்காவது எப்படியாவது மேனேஜரிடம் லீவு கேட்க வேண்டும். லீவுக்காக சூப்பர்வைசரிடம் பேசும்போதெல்லாம், “மேனேஜர் கடும் டென்ஷனில் இருக்கிறார். இப்பொழுது வேண்டாம்..” என்று மறுத்துவிடுகிறார். ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் பணிபுரியும் இத்தனை பிரம்மாண்ட தொழிற்சாலையில் என் ஒருவனுக்கு விடுப்பு கிடைப்பது என்ன அத்தனை கடினமா என்று எப்போதும் நொந்து கொண்டிருக்கிறான் குமரன்.

முன்பொரு முறை இப்படித்தான் குமரன் மேனேஜரிடம் விடுப்பு கேட்டபோது, மேனேஜர் அரங்கநாதன் சூப்பர்வைசர் கனியை தன் அறைக்கு வரவழைத்து "இவன் எப்படி நேரடியா என்கிட்டயே வந்து லீவு கேட்கறான். நீ என்ன புடுங்கிட்டு இருக்க.. இதான் நீ யூனிட்ட பாத்துக்குற லட்சணமா..?" என்று கேட்டதும் குமரன் அதிர்ந்து போனான். சூப்பர்வைசர் கனியும் தான் ஒன்றும் புடுங்கவில்லை என்பது போல் அமைதியாக நின்று கொண்டிருந்தார். மேனேஜர் திரும்பி குமரனை கேவலமாக ஒரு பார்வை பார்த்தார். குமரனுக்கு ஏசியிலும் வியர்த்துவிட்டது.

"தம்பி.. உன் கோரிக்கை எல்லாம் வீட்ல சாமி கும்பிடுற மாதிரி நேரடியா தெய்வத்துகிட்ட சொல்லக்கூடாது. கோயில்ல சாமி கும்பிடுகிற மாதிரி சொல்லணும். முதல்ல அர்ச்சனை சீட்டு வாங்கணும். அப்புறம் வரிசையில் நிக்கணும். உன்னோட முறை வர்ற வரையிலும் பொறுமையா இருக்கணும். அப்புறம் யாரு பேருக்கு அர்ச்சனையோ அதை பூசாரிகிட்ட சொல்லணும். பூசாரிதான் தெய்வத்துகிட்ட சொல்லுவார். நீயே நேரடியா என்கிட்ட வந்துட்டா அப்புறம் பூசாரி எதுக்குயா..?" என்று சூப்பர்வைசர் கனியைக் கைக் காட்டினார் மேனேஜர்.

"சாரி சார்.. இதுக்கப்புறம் இது மாதிரி நடக்காம நான் பாத்துக்குறேன்.." என்றான் கனி.

மேனேஜர் அறையை விட்டு வெளியே வந்ததும் குமரனுக்கு ஓங்கி ஒரு அறை விடலாம் போல இருந்தது கனிக்கு. ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. குமரனை ஒரு முறை முறைத்துவிட்டு எதிர்த்திசையில் நடக்க ஆரம்பித்துவிட்டான். இது நடந்து சில மாதங்கள் ஆகிவிட்டது.

◎ ◎ ◎

இப்போது எப்படி லீவு கேட்பது? அன்றைய சம்பவத்திலிருந்து சூப்பர்வைசர் கனி வேறு குமரனிடம் சரியாகப் பேசுவதில்லை. சீனியர் ஒர்க்கர் அனந்தராமனிடம் சென்று உதவி கேட்டால் என்ன என்று திடீரென்று குமரனுக்குத் தோன்றியது. மேனேஜர் அரங்கநாதனுக்கு, ஒர்க்கர் அனந்தராமன் ரொம்ப குளோஸ் என்று யூனிட் முழுவதற்கும் தெரியும். ஆம் அதுதான் சரி என்று குமரனுக்குத் தோன்றியது. முதலில் சாப்பிட்டு விடுவோம் என்று நேராக கேண்டீன் நோக்கி நடக்க ஆரம்பித்தான். கேண்டீனில் எலக்ட்ரானிக் டிஸ்ப்ளேவில் அரிசி உப்புமா என்று ஓடிக்கொண்டிருந்தது. குமரனுக்கு இதற்காகவே லீவு எடுக்க வேண்டும் என்று தோன்றியது.

கேண்டீனில் ரொம்ப நாளைக்குப் பிறகு அப்பாஸைப் பார்த்தான் குமரன்.

"அப்பாஸ் அண்ணே.. யூனிட் 3க்கு மாறினதுக்கு அப்புறம் ஆளையே பார்க்க முடியல.." என்றான். அப்பாஸ் கவலை தோய்ந்த முகத்துடனே சொன்னார், "யோவ்.. ரெண்டு மாசம் கழிச்சு நானே இப்பதான் வேலைக்கு வரேன்.." என்றார்.

"என்ன ஆச்சுண்ணே?"

"சித்தப்பா சீரியஸா இருக்காருன்னு அரங்கநாதன்கிட்ட ரெண்டு நாள் லீவு கேட்டேன். ஏதோ அவன் சொத்துல பாதிய கேட்ட மாரி லபோதிபோனு கத்துறான். கெஞ்சினேன் கெஞ்சினேன் அப்படி கெஞ்சினேன். கால்ல விழாத குறை. மன்றாடுனேன். தரமாட்டேனுட்டான். எங்க வீட்ல எங்க அப்பா இறந்ததுக்கு அப்புறம் என்ன தூக்கி வளர்த்ததே எங்க சித்தப்பாதான். அவர் சீரியஸா இருக்கும்போது கூட போய் பார்க்க முடியலன்னா மனசுக்கு எவ்வளவு வெறுப்பா இருக்கும்னு நீ யோசிச்சு பாரு. ரெண்டு நாள்ல சித்தப்பா காலமாயிட்டாங்க. அப்ப போய் லீவு கேட்டப்போ.. உண்மையிலேயே உனக்கு உன் சித்தப்பா மேல அன்பு இருந்திருந்தா என் பேச்சை மதிக்காம நீ போயிருப்ப.. ஆனா நீ போகல.. இதிலிருந்து எனக்கு ரெண்டு விஷயம் தெரியுது. ஒண்ணு - அவர் உனக்கு அவ்வளவு முக்கியமான சித்தப்பா இல்ல.. ரெண்டு - சித்தப்பா சீரியஸ்னு நீ சொன்னது பொய். எதுக்கோ உனக்கு இப்ப லீவு தேவைப்படுது. அதுக்கு சித்தப்பா இறந்துட்டாருன்னு அடுத்த லெவல் லீவுக்கு அப்ளை பண்ற. லீவுக்காக நீங்க சொல்றது எல்லாமே கற்பனைச் சாவுகள். கட்டாயம் லீவு வேணும்னா வேலையை ரிஸைன் பண்ணிட்டு போ.. ன்னுட்டான்டா.."

அப்பாஸின் கண்கள் பனித்திருந்தன. குமரன் அப்பாஸையே பார்த்துக் கொண்டிருந்தான். பெருமூச்சு ஒன்றை விட்டு அப்பாஸ் மீண்டும் தொடர்ந்தார்.

"வேலை ரிஸைன்லாம் அப்புறம் பாத்துக்கலாம். முதல்ல சித்தப்பான்னு நினைச்சுட்டு ரோட்டுல வண்டில போயிட்டு இருக்கும்போதெல்லாம் அரங்கநாதனோட பேச்சுதான் மண்டையில் ஓடிட்டே இருந்தது. அதீத கோவத்துல எதிர்ல வந்துகிட்டு இருந்த வேன் மேல வேணும்னே விட்டுட்டேன். கால் எலும்பு பிராக்ச்சர் ஆயிடுச்சு.. மெடிக்கல் லீவ்.."

" லூசாண்ணே நீ.. எதுக்கு வேன் மேல போய் மோதுன?"

"வேன் பேரு அரங்கநாதன் டிராவல்ஸ்னு எழுதி இருந்துச்சு.!!"

குமரன் தலையில் அடித்துக் கொண்டான்.

அரிசி உப்புமாவோடு போர் செய்துவிட்டு தேனீர் அருந்தி கொண்டிருக்கும் பொழுது மீண்டும் அப்பாஸ் மெதுவாக வந்து குமரனின் அருகில் அமர்ந்தார்.

“வேன்ல மோதுன நொடி செத்துப் போன சித்தப்பாவை பக்கத்துல பார்த்துட்டு வந்தேன்டா..”

“ஏன்ணே அரங்கநாதன் இப்படி இருக்காரு?”

“அரங்கநாதன் இல்ல… அரங்கநாதன்கள்.. உலகம் ஃபுல்லா இருக்காங்க.. போதை.. அதிகார போதை..”

“நம்ம கனி சார் மாதிரி ஆட்கள் மேனேஜர் ஆயிட்டாங்கன்னா நமக்கு ஓரளவுக்கு லீவு ஈசியா கிடைச்சிடும்ண்ணே..”

அப்பாஸ் உலர்ந்த சிரிப்பொன்றை உதிர்த்தார்.

“அதிகாரத்துக்குன்னு இருக்குற பிரத்தியேக குணம் ஒண்ணே ஒண்ணுதான்.. தனக்கு கீழே இருக்கிறவன துச்சமா கேவலமா மலத்துக்கு சமமா நினைக்கிறது. அதிகாரத்துக்கு நல்லவன் கெட்டவன் குட்டை ஒசரம் கருப்பன் செவப்பன் அறிவாளி முட்டாள்னு எந்த அடையாளமும் கெடயாது. அதிகாரம்ங்கிற நாற்காலில யார் போய் உட்கார்ந்தாலும் அதோட தனித்துவம் மாறவே மாறாது. “

“அண்ணே.. எனக்கு இப்ப ரெண்டு நாள் லீவு வேணும்ண்ணே..”

“ஒனக்கு சித்தப்பா இருக்காரா..?”

“அண்ணே.. தங்கச்சி பெரிய மனுஷியாயிடுச்சுண்ணே..!”

“அத அந்த பெரிய மனுஷன் ஒத்துக்கிடமாட்டானேடா.. நீ எதுக்கும் அனந்தராமனப் போய் பாரு..”

◎ ◎ ◎

ஆலைச் சங்கு ஆங்காரமாய் முழங்கியது. பணியின் போது சூப்பர்வைசர் கனியிடம் லீவு பற்றி கேட்பதற்காக குமரன் வந்து கொண்டிருந்த போது, வடமாநிலங்களில் இருந்து தற்காலிக ஊழியர்களாக நியமிக்கப்பட்டிருந்த பெண்களில் ஒருத்தி அரைகுறை ஆங்கிலத்தில் கனியிடம் லீவு கேட்டுக் கொண்டிருந்தாள். குமரன், அவர்கள் அருகே வந்துவிட்டபோது கனி அவளை அவசர அவசரமாக, “3 டேஸ் ஒன்லி.. ஓகே.. கோ..கோ..” என்று சொல்லி அனுப்பினான். குமரனுக்கு நெஞ்சு அடைத்துக் கொண்டது.

“சார்.. மூணு நாள் லீவா.. எனக்கு ரெண்டு நாள் போதுங்க..” என்றான்.

“ஒனக்கு பீரியட்ஸா..?”

“சார்..!?”

“அவ அவளோட உடல் உபாதைய சொல்லி லீவு கேக்குறா.. அதோட வந்தா வேலையும் செய்ய மாட்டா.. மெடிக்கல் சென்டர்ல போய் படுத்துக்குவா.. M.Cல மூணு நாள் M.L கொடுத்துருவாய்ங்க..அப்புறம் எல்லா பெண்களும் பீரியட்ஸ் வந்தா M.C போலாம்.. மூணு நாளு M.L கெடைக்கும்னு நம்ப ஆரம்பிச்சுருவாளுங்க.. அது நடக்கக் கூடாது. லீவு மட்டும் எப்பவுமே நம்ம கண்ட்ரோல்லையே இருக்கனும் குமரா..”

சூப்பர்வைசர் கனி இப்போது குமரன் கண்களுக்கு வேறு மாதிரி தெரிந்தான்.

“நேத்து ஜாயின் பண்ண வட மாநில பொண்ணுங்களுக்கு இருக்கிற சலுகை.. பல வருஷமா வேலை பாக்குற எங்களுக்கு இல்லல்ல..”

“அதுக கிட்ட இருக்குறது எல்லாம் உங்ககிட்ட இருக்கா..?”

“சார்..!!”

“சுறுசுறுப்ப சொன்னம்பா..இப்பவும் ஒண்ணும் கெட்டு போகல.. நாளையிலிருந்து சுடிதார் போட்டுட்டு வந்துடேன்.. “

“விளையாடாதீங்க சார்.. வர்ற திங்களும் செவ்வாயும்.. எப்படியாவது மேனேஜர்கிட்ட பேசி நீங்க..”

“எது திங்களும் செவ்வாயுமா.. யோவ்.. ஏற்கனவே ஞாயிற்றுக்கிழம லீவாச்சே.. அப்போ உனக்கு மூணு நாள் லீவா..?”

“சார்.. சண்டே ஆல்ரெடி ஹாலிடேதான சார்..?”

“நம்ம மேனேஜர் எதையுமே பிரிச்சு பார்க்கமாட்டார். நீ ஒன்னு பண்ணு.. தங்கச்சி ஃபங்ஷன்தானே.. சொந்த பந்தத்தை எல்லாம் சென்னைக்கு கூட்டிட்டு வந்துரு. இங்க ஃபங்ஷனை வச்சுக்க.. நைட் ஷிப்ட் வீக்ல ஃபங்க்ஷனை வச்சுட்டேன்னா.. பகல்ல ஃபங்ஷனை கவனிச்சுக்கிடலாம். நைட்டு டூட்டிக்கு வந்துடலாம் எப்படி?” என்று சொல்லிவிட்டு சூப்பர்வைசர் கனி கெக்கேபிக்கேவென சிரித்தான்.

குமரன் கனியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

“என்னடா அப்படிப் பாக்க?”

“ஒண்ணுமில்ல சார்.. மேனேஜர்ங்குற பதவியோட ஒளிவட்டம் உங்க தலைக்கு பின்னால பிரகாசமா சுத்துது.”

கனி அகோரமாக சிரித்தபடியே சொன்னான், “ஆங்.. சுத்துதா..சுத்துற அந்த ஒளி வட்டத்தோட RPM இன்க்ரீஸ் பண்ணத்தான் ராத்திரி பகலா ஒர்க் பண்ணிட்டு இருக்கேன்.

◎ ◎ ◎

சீனியர் ஒர்க்கர் அனந்தராமனை எங்கு தேடியும் காணவில்லை. யூனிட் 1 சூப்பர்வைசரிடம் போய் கேட்டுவிட்டு அவ்விடத்திற்கு வந்தான் குமரன். அந்த

அறைக்கு வெளியில் இருந்து கத்தினான்.

“அனந்து சார்.. அனந்து சார்.. “

“ யார்ரா அது? “

“நான்தான் சார் குமரன்.. யூனிட் 7..”

டாய்லெட்டிலிருந்து வெளியே வந்த அனந்தராமன் எரிச்சலோடு, “ஏன்டா பிரம்மஹத்தி.. கக்கூஸ்ல இருக்கும்போது என்னடா கம்யூனிகேஷன்..?”

“உங்க சூப்பர்வைசர்கிட்ட கேட்டேன். T4ல இருக்கீங்கன்னு சொன்னாரு.”

“T4ன்னா..?”

“டாய்லெட் 4..”

“இவ்வளவு தூரம் வாட்ச் பண்றானுங்களா..!!”

“சார் உங்ககிட்ட ஒரு ஹெல்ப் கேட்டு வந்துருக்கேன்..”

“லீவு ரெக்கமெண்டேஷன் தவிர வேறு எதனாலும் கேளு..”

குமரன் நொந்து போனான். கசங்கிப் போயிருந்த தன் சட்டையை பேண்டுக்குள் இன் செய்தபடியே அனந்தராமன் புலம்பலானார்.

“குமரா.. என் நாலாவது மச்சினிக்கு கொழந்த பொறந்திருக்குன்னு ஒரே ஒரு நாள்தான்டா லீவு கேட்டேன். பரதேசி எம்மேலேயே வள்ளுன்னு விழுந்துட்டான். “

“ஏன்..?”

“ஏன்னா அவன் மச்சினிக்கு பல வருசமா கொழந்தயே பொறக்கலயாம்..!”

“என்ன சார் இது.. கேடு கெட்ட லாஜிக்கா இருக்கு.. “

“”என் மூணு மச்சினிக்கும் கொழந்த பொறந்தப்போ.. அரங்கநாதன்கிட்டதான் ரெண்டு ரெண்டு நாள் லீவ் வாங்கிட்டு போனேன். இது ரொம்ப முக்கியமான மச்சினி. அவ கொழந்தைக்கு என் பேரு வைக்கிற அளவுக்கு முக்கியமான மச்சினின்னா பாத்துக்கோயேன்..”

இரண்டு நாள் லீவுக்காக என்னென்ன கருமாந்திரக் கதைகளையெல்லாம் கேட்க வேண்டி இருக்கிறது என்று தன்னைத்தானே நொந்து கொண்டான் குமரன்.

“குமரா.. யாராவது எறந்துட்டாங்கன்னு சொல்லி எமர்ஜென்சி லீவ் போட்ரு..”

“சார்.. நல்ல காரியத்துக்கு போறேன்..” என்று இழுத்தான் குமரன்.

அப்புறம் உன் இஷ்டம் என்று சொல்லிவிட்டு நகன்றுவிட்டார் அனந்தராமன். குமரனுக்கு தலையே வெடித்துவிடும் போல் இருந்தது. சூப்பர்வைசர் கனியிடமே திரும்பி வந்தான் குமரன்.

“இத பாரு குமரா.. நம்ம மேனேஜர்... ஒர்க்கர்னு இல்லை, யாரையுமே நம்ப மாட்டார். போன வருஷம் எங்க அப்பா இறந்து போனது உனக்கு தெரியும்ல. சாவு வீட்டுல இருந்து ஒரு போட்டோ எடுத்து வாட்ஸ் அப்ல எனக்கு அனுப்புன்னு சொன்னான் அந்த நாயி..”

குமரன் திடுக்கிட்டு சூப்பர்வைசர் கனியைப் பார்த்தான்.

“என்ன சார் பண்ணீங்க..?”

“போட்டோ அனுப்புனேன்..” என்றபடியே கனி தலையை தொங்கப் போட்டுக் கொண்டான்.

“இதெல்லாம் ஒரு பொழப்பா சார்..?”

“எங்க பொழப்பு இப்படித்தான். எமோஷனாகி நான் அவரை ஏதாவது சொல்லிட்டேன்னா.. இப்ப போயிட்டு இருக்க மாதிரி இவ்வளவு ஸ்மூத்தா என் பியூச்சர் இருக்காது. எமோஷனாகி அவரை ஏதாவது பண்ணிட்டேன்னா என் பியூச்சரே காலி... இன்னைக்கு ஜெயில்ல இருக்கிற பாதி பேரு இந்த மாதிரி எமோஷனல்ல சிக்குனவந்தான்..”

குமரனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. விடுப்பு கிடுப்பு என்று சொல்லிக் கொண்டு நீயாக மேனேஜரின் அறைக்கு சென்றுவிடாதே என்றும் எச்சரித்து விட்டுப்போனான் கனி. HR துறைக்குச் சென்று யாரேனும் உதவ முடியுமா என்று ஒரு அதிகாரியைப் பார்த்துக் கேட்டான். இரண்டு நாள் விடுப்பையெல்லாம் ஒரு பிரச்சனை என்று தூக்கிக்கொண்டு HRக்கு வந்து விட்டாயா என்று காரித் துப்பாத குறையாக குமரனைத் திட்டி அனுப்பிவிட்டார் அந்த அதிகாரி. யூனியன் மூலமாகச் சென்று ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்தால் அந்த டொக்கு யூனியன் ஏதாவது செய்து விடுப்பு வாங்கி தருவதற்குள் குமரனின் தங்கைக்குக் கல்யாணமே வந்துவிடும். பாவம்.. குமரனால் என்னதான் செய்ய முடியும். ஒரு தொழிலாளி ஒரு நாள் விடுப்பு எடுத்தால், அந்த ஒரே நாளில் அந்த தொழிற்சாலையே அதள பாதாளத்தில் விழுந்துவிடும் என்பது போன்ற கட்டமைப்பு அங்கே இருந்தது. கடைசியாக ஒருமுறை அரங்கநாதனிடமே லீவு கேட்டு விட்டால் என்ன என்று தோன்றியது குமரனுக்கு.

சூப்பர்வைசர் கனியை அழைத்துக் கொண்டே மேனேஜரின் அறைக்குச் சென்றான் குமரன். கணினித் திரையில் மூழ்கி இருந்த அரங்கநாதன் மூக்கு கண்ணாடியை சற்று கீழிறக்கி இருவரையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு மீண்டும் கணினித்திரையில் மூழ்கிப் போனார். இருவரும் இருபது நிமிடங்களுக்கு மேலாக அங்கேயே அமைதியாக

நின்று கொண்டிருந்தனர். அரங்கநாதன் தன் மேசையில் இருந்த தண்ணீர் குடுவையைத் திருகி ஒரு மடக்கு நீர் அருந்திவிட்டு கனியைப் பார்த்துக் கேட்டார்.

“20 நிமிஷமா ரெண்டு பேரும் சும்மாவே நிக்கிறீங்க.. இது மாதிரி இன்னிக்கு மட்டும் எத்தனை 20 நிமிஷம் சும்மா இருந்திருப்பீங்க.. அப்போ இன்னிக்கி, நேத்து, போன வாரம், போன மாசம், எத்தனை எத்தனை 20 நிமிஷம் சும்மா போச்சுன்னு தெரியலையே..?”

“சார்.. நம்ம குமரனோட ஓன் சிஸ்டர் பெரிய மனுஷியா ஆயிட்டாங்களாம். அவங்க ஊர்ல பங்க்ஷனாம். வர்ற திங்களும் செவ்வாயும் லீவு கேக்குறாப்புல..”

“ஒரு பெண் பெரிய மனுஷியாகறது ஒரு இயற்கை நிகழ்வு. அதுக்கு நீ போய் என்ன செய்யப் போற. பாரின்லல்லாம் இப்படி ஒரு சடங்கே கெடயாது தெரியுமா? “

“எங்கூர்ல எல்லாம் உண்டு சார்..” என்றான் குமரன். அரங்கநாதன் மிரட்டும் விழிகளால் அவனை ஏற இறங்கப் பார்த்தார். ஒரு பேப்பரை எடுத்து அவன் வலது கையில் திணித்தார்.

“நீ ஊருக்கு போனதிலிருந்து அங்கே உனக்கு என்னென்ன வேலை இருக்கும்னு இந்த A4 சீட்டில் எழுதிக் கொடு. அந்த வேலையோட முக்கியத்துவத்தைப் பொறுத்து உனக்கு லீவு கொடுக்கிறேன். “

குமரனுக்கு என்ன எழுதுவது என்றே தெரியவில்லை. பத்து நிமிடங்களுக்கு மேலாக பேப்பரை கையில் வைத்தபடியே சும்மா நின்று கொண்டிருந்தான். அரங்கநாதன் அந்தப் பேப்பரை படக்கென்று பிடுங்கினார்.

“இந்த பேப்பரில் என்ன இருக்கோ அதுதான் நீ ஒன் ஊருல பார்க்கக் கூடிய வேலை.. (அந்த பேப்பரைக் கசக்கி அவன் முகத்தில் விட்டெறிந்தார்) என்ன எழுதறதுன்னே தெரியல... ஊர்ல போய் என்ன கிழிப்பே?.”

“”சார்.. நான் அண்ணன் சார்..”

“சரிங்க நொண்ணன்... ஃபாரின்ல இருந்தா என்ன பண்ணுவீங்க நொண்ணன்..?”

“பாரின்ல இருந்தாலும் வந்துருவேன் சார்..”

“இங்கிலாந்து போயிருந்தா..?”

“வந்துருவேன் சார்..”

“இட்டாலி போயிருந்தா..?”

“வந்துருவேன் சார்..”

“சிக்காகோ போயிருந்தா..”

“வந்துருவேன் சார்..”

“செத்துப் போயிருந்தா..?”

குமரன் வாயடைத்துப் போனான். கனி திகைத்துப் போனான்.

“போ.. செத்துப்போயிட்டேனு நெனச்சுக்கோ..”

◎ ◎ ◎

குமரன் காதில் யாரோ வயலினால் இசைக்கும் ஒரு சோக கீதம் ஒலித்தது. அழுகை கழுத்தில் நின்று கொண்டிருந்தது. ஆனாலும் அரங்கநாதன் முன்பு கண்கள் கசியக்கூடாது என்று நினைத்தான். சூப்பர்வைசர் கனியோ போகலாம் என்று தன் கைகளினால் குமரனுக்கு சைகை காண்பித்தான். குமரனோ விடுப்பு இல்லாமல் அவ்விடத்தை விட்டுச் செல்லக்கூடாது என்று நினைத்தான். குமரன் என்ன நினைத்தானோ.. திடீரென்று அரங்கநாதனின் வலது காலை பிடித்துக் கொண்டான்.

“நான் ஒங்களுக்கு என்ன செய்யணும்..?” என்றான். கணினித் திரையை பார்த்துக் கொண்டிருந்த அரங்கநாதன் வலது பக்கம் குனிந்து குமரனைப் பார்த்தார்.

“நேரே HRக்கு போ.. உன்னோட செல்வாக்குல ஒரு மேன் பவர் வாங்கிக்கோ.. இந்த ரெண்டு நாள்ல நீ இந்த ஃபேக்டரியில் என்னென்ன ஒர்க் பண்ணுவியோ அதையெல்லாம் அந்த மேன் பவருக்கு டிரெயின் பண்ணி விட்டுட்டு நீ லீவு எடுத்துக்கோ..”

குமரன் பேயறைந்தது போலாகிவிட்டான்.

“அது எப்படி சார் முடியும்..?”

“உனக்கு ஒரு ஆப்ஷன் கொடுத்துட்டேன். மேன் பவர் வாங்கு.. ட்ரெயின் பண்ணு.. லீவு எடுத்துக்கோ.. குடும்பத்தோட குஷாலா இரு.. நான் தடுக்கல..”

குமரனுக்கு நந்தனார் கதை நினைவுக்கு வந்தது. கண்களில் இருந்து நீர் வடியத் தொடங்கியது.

“சார் ப்ளீஸ்.. கொஞ்சம் ஹெல்ப் பண்ணுங்க சார்..”

“தம்பி.. திருவரங்கத்தில் வீற்றிருக்கும் அந்த அரங்கநாதனே என் முன்ன வந்து நின்னாலும்.. வந்ததுதான் வந்தே, ஒரு ரெண்டு நாள் இங்க வொர்க் பண்ணிட்டு போயேன்னு சொல்றவன்தான் இந்த அரங்கநாதன்.” என்று சொல்லிவிட்டு கணினித்திரையில் மூழ்கிப் போனார். இறந்து போன மனதுடன் அந்த அறையை விட்டு வெளியேறினான் குமரன்.

அரங்கநாதன் கனியிடம்,”மண்டே இந்த ராஸ்கல் வரலைன்னா எனக்கு இன்பார்ம் பண்ணனும்.” என்றார்.

◎ ◎ ◎

திங்கட்கிழமை காலை. ஆலைச் சங்கு ஆக்ரோஷமாக முழங்கியது. மணி ஏழானதும் வருகைப் பதிவு தொடங்கியது. குமரனை இன்னும் காணவில்லை. கனி, மேனேஜர் அரங்கநாதனுக்கு தகவல் தெரிவிக்க முனைந்த போது ஒரு மணி நேர பெர்மிஷனில் கூட வந்து விட வாய்ப்புள்ளது கொஞ்ச நேரம் பார்க்கலாமே என்று மற்ற தொழிலாளிகள் கூறினர். ஆனால் மணி 8, 9, 10, 11 என்று சென்று கொண்டே இருந்தது. குமரன் வந்த பாடில்லை. ஆப்சென்ட் உறுதி செய்யப்பட்டு மேனேஜருக்கு தகவல் அனுப்பப்பட்டது. குமரன் என்றைக்கு பணிக்கு வந்தாலும் தனது அனுமதி இன்றி பணி செய்ய அனுமதிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார் மேனேஜர்.

ஆனால் சரியாக 12 மணிக்கு குமரன் பணிக்கு வந்தான். கனி, குமரனிடம் எதுவும் பேசவில்லை. நேராக மேனேஜரிடம் அழைத்துச் சென்றுவிட்டான்.

“குமரன் சார் வாங்க வாங்க.. என் பேச்சை மீறி லீவு போட்டுட்டீங்களே.. உங்க தைரியத்தையும் மனவலிமையும் நம்ம பேக்டரி தொழிலாளர்கள் சார்பா பாராட்டுறேன். நீங்க வராததை பார்த்துட்டு நானே உங்களை ஹீரோன்னு நினைச்சுட்டேன்.”

“இல்ல சார்.. நான் ஊருக்குல்லாம் போகல..”

“ஓஹோ.. அப்ப என்னோட இமேஜ உடைக்கிறதுக்காகவே அரை நாள் லீவ் போட்டு இருக்கீங்க..”

“இல்ல சார்.. நான் வழக்கம்போல ஷிப்டுக்கு கிளம்பி வந்துட்டு இருந்தேன். அப்ப ரோட்டில ஒரு அம்மா ஆக்சிடென்ட் ஆயிட்டாங்க. அப்படியே விட்டுட்டு வர மனசு வரல. ஆட்டோல ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போனேன். சிவியர் கேஸ்னு எதாவது பெரிய ஹாஸ்பிடல்க்கு கொண்டு போகச் சொல்லிட்டாங்க. அட்மிட் பண்ணிட்டு வர்றதுக்கு லேட் ஆயிடுச்சு சார்.”

அரங்கநாதன் தன் இருக்கையை விட்டு எழுந்து வந்து கனியிடம் பக்கத்து அறைகளிலுள்ள எல்லா அதிகாரிகளையும் அழைத்து வரச் செய்து, குமரனின் கருணை உள்ளத்திற்காக அனைவரையும் கைதட்டச் செய்து எல்லோரிடமும் கைகுலுக்கும்படி செய்தார். குமரன் தடுமாறினான். பிறகு ஒரு தாளை எடுத்து அவனிடம் நீட்டினார்.

“யூ ஆர் ஸஸ்பெண்டட்..” என்றார். குமரனுக்கு அதிர்ச்சியும் ஆத்திரமும் கலந்தோடி வந்தது.

“விபத்துக்குள்ளான ஒருத்தரை காப்பாத்துறது கூடவா தப்பு..”

“பாராட்டுக்குரிய செயல்தான்.. ஆனா கூகுள் பண்ணிப் பாரு. ஒரு நிமிஷத்துல இந்த உலகத்துல எத்தனை விபத்துகள் நடக்குதுன்னு..அத்தனை குமரன்களுக்கு இந்த உலகம் எங்க போகும். இப்ப கைவசம் ஒரே ஒரு குமரன்தான் இருக்க. உன் சேவை இந்த உலகத்துக்கு தேவை...”

“இது அநியாயம் சார்..”

“பேசாம போயிட்டேன்னா ஒரு வாரம் கழிச்சு திரும்ப கம்பெனிக்கு வரலாம். நானா அனுப்புனன்னா பத்து பைசா கூட தேறாது. அரங்கநாதன மீறுனா என்ன நடக்கும்னு...( சிரித்தபடியே..) யூ ஆர் கோயிங் டு பி ஏ கிரேட் எக்ஸாம்பிள் டு ஒர்க்கர்ஸ்.. !”

◎ ◎ ◎

குமரனுக்கு எங்கிருந்துதான் அப்படி ஒரு தைரியம் வந்ததோ, வெள்ளைத்தாளை எடுத்து கடகடவென எழுதத் தொடங்கினான். ராஜினாமாக் கடிதத்தை எடுத்துக்கொண்டு HR துறைக்குச் சென்றான். அவன் அங்கு செல்லும் முன்னரே சம்பவங்கள் முன்னறிவிப்பு செய்யப்பட்டிருந்தது. மேலும் ஏகப்பட்ட தாள்களில் அவர்கள் கையெழுத்து வாங்கிக் கொண்டனர். தன் ராஜினாமா உறுதி செய்யப்பட்ட பிறகு மீண்டும் மேனேஜர் அரங்கநாதன் அறைக்கு வந்தான். அங்கே அவர் இல்லை. ஹால் 17ல் முக்கிய மீட்டிங்கில் இருப்பதாக சொன்னார்கள். நேரே ஹால் 17க்குச் சென்றான். கண்ணாடிக் கதவிற்கு வெளியே குமரனைப் பார்த்ததும் அரங்கநாதன் எரிச்சலானார். ஒரு மணி நேரம் குமரனை வெளியே காத்திருக்க வைத்தார். பிறகு உள்ளே வரும்படி அழைத்தார். என்ன என்று சைகையில் கேட்டார்.

“ சொல்லக்கூடாதுன்னுதான் சார் நினைக்கிறேன். ஆனா சொல்லாம இருக்க முடியல.. ஏன்னா நாங்க ரொம்ப சாதாரணமானவங்க.. ஆக்சிடெண்டான அந்த அம்மா உங்க ஒய்ஃப்தான்.. அரை மயக்கத்துல கொஞ்சம் பேசுனாங்க.. அஞ்சப்பர் ஆஸ்பத்திரில சேத்துருக்கேன்.. கொஞ்சம் சிவியர்தான்.. இனிசியல் அமௌன்ட் கொஞ்சம் கட்டியிருக்கேன்.. போலீஸ்தான் ரொம்ப ஹெல்ஃப் பண்ணாங்க... உங்க நம்பருக்கு கால் பண்ணிட்டே இருந்தோம். ரீச் ஆகவே இல்ல.. என் ஒய்ஃப் உங்க ஒய்ஃப்போட அங்கதான் இருக்காங்க.. பதட்டப்படாம போங்க.. “ என்று சொல்லிவிட்டு வேகமாக நடக்கத் தொடங்கினான்

அரங்கநாதனுக்கு உடம்பெல்லாம் அதிரத் தொடங்கியது. அவர் குமரனைப் பார்த்து ஏதோ சொல்லி தொண்டை கிழிய கத்துகிறார். ஆனால் அவர் தொண்டையில் இருந்து குரல் எழும்பவில்லை. என்னவோ ஒன்று அவர் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொண்டிருந்தது. கண்களில் நீர் வழிய வழிய மிகுந்த முயற்சி செய்து குமரா என்ற அவர் கத்தவும் முதல் ஷிப்ட் முடிந்து ஆலைச் சங்கு வழக்கம் போல்லோ முழங்கியது.

# பொசசிவ்னஸ்
# (உடைமை உணர்வு)

**பாலமுருகன். லோ**

**வி**னோத் தனது காரை வேகமாக ஓட்டிக்கொண்டு கடற்கரைச் சாலையில் சென்றுகொண்டிருந்தான். அவனது பார்வை சாலையைப் பார்ப்பது போலிருந்தாலும், உண்மையில் வினோத் தனது ஆழ் மனதில் எதையோ பற்றி யோசித்துக்கொண்டே காரை ஓட்டினான்.

திடீரென்று, அவன் மூளையை யாரோ கசக்கிப் பிழிவதைப் போல ஒரு வலி எழுந்தது. இருந்தும், வினோத் தான் ஓட்டிச் சென்ற காரை ஓரமாக நிறுத்தாமலும் வேகத்தைக் குறைக்காமலும் சென்றுகொண்டிருந்தான்.

ஒரு கட்டத்தில், அவன் மூளைப் பகுதியில் மின்னல் வெட்டியதைப் போல ஒரு அதீத வலி ஏற்பட்டது. அதே சமயம், சாலையின் நடுவே நாய் ஒன்று இடது புறத்திலிருந்து வலது புறமாகச் செல்ல, காரின் குறுக்கே பாய்ந்தது.

வினோத் செய்வதறியாது திகைத்துப்போய், காரின் பிரேக்கை வேகமாக அழுத்தினான்; அந்த நேரத்தில் அவனது மூளை சரிவர வேலை செய்யவில்லை. ஒருபுறம் வினோத்தின் மூளையில் ஏற்பட்ட அழுத்தத்தினாலும், அவன் எதையோ யோசித்ததாலும், நாயைப் பார்த்தவுடன் காரின் வேகத்தைப் படிப்படியாகக் குறைக்காமல் திடீரென பிரேக் அழுத்தினான். கண் இமைக்கும் நேரத்தில் அந்த விபத்து அரங்கேறியது. நொறுங்கிய காருக்குள், வினோத் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

◎ ◎ ◎



நுங்கம்பாக்கத்தில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் தனது குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருந்த மோனா, அலைபேசி மணி ஒலித்தவுடன் ரிசீவரை எடுத்துக் காதில் வைத்து, "ஹலோ" என்றாள். மறுமுனையிலிருந்து, "இது வினோத்தின் வீடா?" என்று ஒருவர் கேட்டார்.

"ஆம், இது வினோத்தின் வீடுதான், என்ன வேண்டும்?" என்றாள் மோனா. தொலைபேசியில் இருந்தவர், "மோனா, பதற்றப்படாதீர்கள். நாங்கள் கடற்கரைச் சாலையில் உள்ள லேகா தனியார் மருத்துவமனையிலிருந்து பேசுகிறோம். இங்கு வினோத் ஒரு விபத்தில் சிக்கி, தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" என்றார். இந்த பதிலைக் கேட்டவுடன் அதிர்ந்துபோன மோனா, அவர்களிடம், "மருத்துவமனை முகவரியை உடனே சொல்லுங்கள், நான் அங்கு வருகிறேன்" என்றாள். வேகவேகமாக மருத்துவமனை முகவரியை ஒரு காகிதத்தில் குறித்துவிட்டு, தன் குழந்தையுடன் குடியிருப்பிலிருந்து வெளியேறினாள். சாலையில் சென்ற ஆட்டோ ஒன்றை வாடகைக்குப் பேசி அதில் ஏறிக்கொண்டாள்.

மருத்துவமனை முகவரியை ஓட்டுநரிடம் சொல்லி அங்குப் போகச் சொன்னாள். ஆட்டோ ஓட்டுநரும், இந்தப் பெண் ஏதோ பதட்டத்தில் உள்ளார் என்று யூகித்து, அவரைப் பாதுகாப்பாக அவர் சொன்ன மருத்துவமனையில் இறக்கிவிட்டார். மோனா பேசிய பணத்தை அந்த ஆட்டோ ஓட்டுநரிடம் கொடுத்துவிட்டு, அவசர சிகிச்சைப் பிரிவு எங்குள்ளது என்று வரவேற்பறையில் விசாரித்துவிட்டு அங்கு விரைந்தாள்.

◎ ◎ ◎

மருத்துவரிடம் பேசிய பிறகே மோனாவிற்குத் தெரியவந்தது, இனி வினோத்தால் எழுந்து நடக்க முடியாது என்று. அவனது கால்களில் ஒன்று அகற்றப்பட வேண்டும். ஏனெனில், விபத்தில் கால் முற்றிலுமாகச் சேதமடைந்துவிட்டதால் மருத்துவர்கள் இந்த முடிவிற்கு வந்தனர். மோனாவிடம் சில முக்கிய ஆவணங்களைக் கொடுத்து, அதைப் படித்துவிட்டு கையொப்பம் இடுமாறு மருத்துவர்கள் கூறினர்.

மோனா கையொப்பம் போட்ட பிறகே வினோத்திற்கு அறுவைசிகிச்சை மேற்கொள்ளப்படும் என்றும் கூறிவிட்டனர். வினோத், மோனா இருவருக்கும் பெற்றோர் இல்லாததால், அவள் தன்னிச்சையாக முடிவெடுத்து அந்த ஆவணங்களைப் படித்துவிட்டு, கண்ணீர்த் திரைக்குப் பின்னால் தன் கையெழுத்தை அதில் இட்டாள். பிறகு, மருத்துவர்கள் அறுவைசிகிச்சையை மேற்கொண்டனர்.

மூன்று மணி நேரம் கழித்து, மருத்துவர் மோனாவிடம் வந்து, 'அவரது இடது கால் அகற்றப்பட்டுவிட்டது. இனி அவரால் ஊன்றுகோல் இல்லாமல் நடக்க முடியாது" என்று கூறினார்.

மோனா இதைக் கேட்டவுடன், தாங்கொணாத் துயரத்திற்குத் தள்ளப்பட்டாள்.

'இனி எப்படி வாழ்க்கை நகரப்போகிறது? இதுநாள் வரை வினோத் வேலைக்குப் போய் சம்பளம் வாங்கி, அதில் குடும்பத்தை நடத்தினோம். இனி நாம்தான் பணிபுரிய வேண்டும்' என்று யோசித்து வேலை தேடினாள். அவளுக்கு ஒரு மென்பொருள் நிறுவனத்தில் சுருக்கெழுத்தாளர் பணி கிடைத்தது.

பகலில் மழலையர் பள்ளியில் குழந்தையை விட்டுவிட்டு, வேலை முடித்து வீடு திரும்பும்போது, மாலை வேளையில் குழந்தையை அழைத்துக்கொண்டு வீடு திரும்புவாள். வினோத்தைப் பார்த்துக் கொள்வதற்குத் தற்காலிகமாகச் செவிலியர் ஒருவரை ஏற்பாடு செய்திருந்தாள். மோனா காலை வேலைக்குப் போய்விட்டு வீடு திரும்பும் வரை, அந்தச் செவிலியர் வினோத்தைப் பார்த்துக்கொள்வார்.

◎ ◎ ◎

ஒரே அறையில் முடங்கிக் கிடப்பது வினோத்திற்கு மேலும் சங்கடத்தைக் கொடுத்தது. அவன் விபத்து நடந்த நேரத்தில் என்ன யோசித்துக்கொண்டிருந்தானோ, அதையே இப்போதும் யோசித்துக்கொண்டிருந்தான்.

அப்படி வினோத் என்ன யோசித்தான் என்றால், மோனாவின் அலைபேசிக்கு அடிக்கடி அவளது பள்ளி நண்பர் ஒருவர் பேசுவது வழக்கம். மோனா ஜனரஞ்சகமான பெண்; அவள் பள்ளியில் படிக்கும்போது பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனம் என அனைத்திலும் கலந்துகொள்வாள். அதனால், அனைவரும் அவளிடம் அன்பு பாராட்டுவார்கள். அவளுக்கு நண்பர்கள் பட்டாளம் அதிகம். திருமணம் ஆன புதிதில் எல்லாரிடமிருந்தும் அலைபேசி அழைப்பு வரும், அதனால் வினோத் எதையும் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனால், இரண்டு வருடங்களுக்குப் பிறகு, குறிப்பாக அந்த ஒரு நபரிடமிருந்து மோனாவிற்கு அடிக்கடி அலைபேசி அழைப்பு வரும். அவளும் மிகுந்த ஆவலோடு எடுத்துப் பேசுவாள்.

இதைக் கண்டும் காணாமல் இருந்துவிடலாம் என்று கூட வினோத் நினைத்ததுண்டு. ஆனால், வினோத் மோனாவின் மேல் வைத்திருந்த அதீத அன்பும் பாசமும், உடைமை உணர்வாக (*Possessiveness*) மாறி, அது அவனைத் தவறாக நினைக்க வைத்ததுண்டு.

அதுவே நாளடைவில் ஒரு மன நோயாக மாறிவிடுமோ என்ற பயமும் வினோத்திடம் காணப்பட்டது.

◎ ◎ ◎

வினோத் எப்போதுமே கோபத்துடன் காணப்பட்டான். அன்று அப்படித்தான், மோனாவிடம் ஒரு பெரிய விவாதம் செய்துவிட்டு, காரை ஓட்டிக்கொண்டு கடற்கரைச் சாலையில் போய்க்கொண்டிருந்த சமயத்தில்தான் அந்த விபத்து நேர்ந்தது.

இப்போது இந்தத் தனி அறையும், தனிமையும், அவனிடம் ஒரு பெரும் வெற்றிடத்தை உருவாக்கியது. விபத்து நடந்து இரண்டு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், அவனது உடல் பலத்தை விட, மனபலம் வெகுவாகக் குறைந்துகொண்டே வந்தது.

இரவில் படுக்கையில் படுத்தால் வினோத் தூங்குவதில்லை; மாறாக, அவன் விடியாத இரவுகளில் வீட்டின் மேற்புறக் கூரையை வெறித்தவாறே, அந்த அலைபேசி அழைப்பைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பான்.

அவனால் இதை மோனாவிடம் நேரடியாகக் கேட்க முடியவில்லை. ஒருவேளை தான் நினைக்கும் விஷயம் பொய்யாக இருந்துவிட்டால், அவளது மனம் எவ்வளவு வலிக்கும் என்று எண்ணி, அந்த அழுத்தத்தைத் தன் மனதிற்குள்ளேயே போட்டுப் புதைத்துக்கொள்வான். ஆனால், அவன் அப்படியே தன் மனதில் போட்டு அடைத்துவைத்த அழுத்தம், ஒரு கொடிய மன நோயாக மாறிவிட்டது.

◎ ◎ ◎

மாலை வேளையில் குழந்தையுடன் வீடு திரும்பிய மோனா, தனது அன்றாட வேலைகளைச் செய்து முடித்தாள். இரவுச் சாப்பாடு தயார் செய்துவிட்டு, வினோத் இருக்கும் அறைக்குச் சென்று பார்த்தாள். அங்கு அவள் கண்ட காட்சி, இடியென அவள் தலையில் இறங்கியது. அவன், தன்னைத்தானே மாய்த்துக்கொண்டிருந்தான்.

கடைசி வரையில், தன் மனதை அரித்துவந்த அந்தச் சந்தேகத்தை அவளிடம் கேட்டு அவன் நிவர்த்தி செய்துகொள்ளவே இல்லை. வினோத் கேட்காமல் இருந்தது குற்றமா? அல்லது அவன் மோனாவின் மீது வைத்திருந்த உடைமை உணர்வுதான் காரணமோ? என்னவாக இருக்கக்கூடும்? ஆனால், கடைசியில் வினோத் ஒரு முடிவைத் தேர்ந்தெடுத்து அதை நோக்கிச் சென்றுவிட்டான். உண்மையில் பாதிப்பு யாருக்கு? மோனாவிற்கா அல்லது அவளது அறியாப் பிஞ்சுக் குழந்தைக்கா? ஒரு கண நேர விபரீத முடிவினால் உண்டாகும் பின்விளைவுகள் என்னவோ அதிகமே. ஆனால், இதை என்றும் உணராத நிலைக்கு வினோத் சென்றுவிட்டான்.

# ஸ்ரீவாரி மஞ்சு கவிதை

திறந்தே இருக்கும்
என் வாசல்
உனக்காக...
என்றாலும்
அவர்கள்
வாசலை நாடாதீர்....

நிழலாய் நானிருப்பேன்
என்றாலும்
உருவத்துக்குள் அவர்களைத் தேடாதீர்....

குறுஞ்செய்தி போதும்
உன்னருகிலிருப்பேன்
என்றாலும்
அவசர கதியில்
அவர்களைத் தேடாதீர்....

நினைவின் ஆக்கிரமிப்பில்
ஓர் பகுதி நீயென்று
புலம்பினாலும்
அவர்களின் நினைவுகளை
குழம்பிப்போய் தேடாதீர்...

ஓர் வார்த்தை சொல்ல வேண்டுமென
சொல்லுவதையெல்லாம்
சொல்லென கொள்ளாதீர்...
கொல்லென கொன்றுவிடும்
கையளவு இதயத்தை....



## க. புனிதன் கவிதை

**பிராத்தனை**

வெண்மைமலர்கள் போல்
வெண் கொக்குகளின்
பிரார்த்தனை அழகானவை

கேரட்டை தன் குட்டிகளுக்கு
பகிர்ந்து தரும் தாய் முயல் போல்
அம்மா பகிர்ந்து தரும்
பழத்தில் இறங்கும்
கத்தியின் பிராத்தனை
மிகவும் அமைதியானவை

மகிழுந்தில் அடிபடாமல்
நாய் குட்டியை காப்பாற்றிய
பிராத்தனை கொள்ளை அழகு

வழி தடத்தில் தேங்கிய
மழை நீரில் குடையுடன் கடந்து செல்லும்
முதியவர் பிம்பம் போல்
பிராத்தனை எளிமையானவை

சிறு குழி நீரில் தெளிந்த
மழைப் பயணியின்உருவம் போல்
பிராத்தனைகள் அபூர்வமானவை

## த. ரவீந்திரன் கவிதை

**நாளைய யதார்த்தம்**

இந்நாளில் எதுவாக இருந்தாலும்
ஏற்றுக் கொள்ளும் மனநிலை
உன்னால் மட்டுமே உண்டானது
இன்றைய மாற்றத்தினால் காலம்
கற்று தந்தது நாளை யதார்த்தம்
எதுவாக என்றாலும் ஏனென்று
வினவாமல் ஏற்றுக் கொண்ட
என்னுள் நீ நீந்துகிறாய்
பேறு காலமில்லா பிள்ளையாய்..

# பாரதிசித்ரா கவிதை

என்னை பிடிப்பது எவ்வாறென வெகுநன்றாய்
தெரியும் இந்த இரவுக்கு...

தேர்ந்த மீனவனின் லாவகத்துடன் அது பின்னும்
வலையில் இருந்து நான் தப்பியதே இல்லை...

உன்னோடு பிணங்கி நகரும் என் தூரத்தை இரவுகளே
தீர்மானிக்கிறது...

சிறுகயலென நழுவும் போதெல்லாம் உன்நினைவை
உணவாக்கி தூண்டிலில் வீசும்...

உதறி நகர்ந்த போதெல்லாம் இடறி விழுந்தது உன்
வாக்குகளை வலையாய் விரித்து வைத்த போதுதான்..

நகரும் என் பாதங்களை அடியோடு இழுக்கும்
இழுவலை உன் குறுஞ்செய்தி...

மடியை வலையாக்கி அள்ளிக்கொள்ளும் உன்னையும்
இந்த இரவையும் கொன்று தின்றால் தான் என்ன??!!!



# கவிமணி இரஜகை நிவவன்

## கவிதை

**புதுக்கவிதை**

தொடுவானமேயில்லையோ?

தொட்டு விடத்தான்
துடிக்கிற மனதில்
தொடுவானமேயில்லை...

தொட்டுப்பார்க்க
இலையசைக்கும்
காற்றைப் போல..

நம்ப மறுக்கும்
இதய நாளங்கள்
நடுக்கம் மிகுப்பினும்
வேகம் குறையாத
கால்கள்..

கடல் மணலின்
புதைவில்
புதையலைத் தேடுகிறதா?...
புத்தனைத் தேடுகிறதா?
புரியாத அலைச்சலில்
சரணடையப்
பார்க்கிறதே...சுருண்டு வரும்
நுரை தொப்பை
அலைகளின்
ஆரவாரத்திடம்...

இதோ...அதோ..வென

போக்குக் காட்டும்

கானல் நீரின் கயமைகளுடன்
உரசிப்பார்க்கிறதோ?

வராத கனவுகளின்
இமைப்பறவைகளின் சேமிப்பில்
என்று வந்த பால் நிலா

என தேடிப்பார்க்கிறதோ?

மனமோ அல்லாட
மதிமயங்கிய
மங்கையின் சோகத்தோடு
ஊதக்காற்றின்
பனிச்சரிவாய்
மேக முகடுகளில்
விரியும் வெண்பனியாய்

தெளிவாகிப்போன சப்தங்களோடு
சங்கீதமிழைக்க
புதிய அழைப்பிதழோ?

தேடித் தேடி
தீனி கிடைக்காத
ஆட்டுக் குட்டியாய்....
இன்னும் பறக்க
நினைக்கும்
சிறகில்லாத தீக்கோழியின்
மகோன்னத ஆசைகளின்
எச்சங்களின் அம்சங்களா...?

வேண்டாமென்று
உதிர்ந்த இறகொன்று
காற்றில் சுழன்றே
கைகளில் விழுந்தே

தரையிறங்க
தவிப்பின் நடுவில் திரும்ப
ஒட்டிக் கொள்ள முயலும்

நியாயங்களோ?

இருப்பினைத்
தக்க வைத்துக் கொள்ள
இன்னும் தேடுதோ
இதயக் கொள்ளை நோய்...

இல்லாத
தொடுவானத்தையே?...

# திசையின்றிய தலைமைத்துவம்

## சேஹு மொஹம்மது பெனாஸிரா

தலைமைத்துவம் என்பது ஒருவர் தனக்குள்ளே வரவழைத்துக் கொள்ளும் ஓர் ஆளுமை.தனது வார்த்தைகளால்,செயற்பாடுகளால் ஏனையோரை கவர்ந்திழுக்கும் ஓர் உன்னதமான ஆற்றல் என்றும் கூறலாம்.

இத்தகைய தலைமைத்துவக் கோட்பாடுகள்,சித் தாந்தங்கள்,கொள்கைகள் தொடர்பான ஏராளமான விளக்கங்கள் விரவிக் கிடைக்கின்றது.

இருந்த போதிலும் இத்தலைமைத்துவத் திறனைக் கொண்டு இன்றைய சமூக நிலையில் பல்வேறு சாதனைகள் புரியப் பட்டாலும் தலைமைத்துவத்தை வகிக்கின்ற ஒருவரது பல்வேறு உள்நிலைகள் குறித்த தலைமையின் கீழ் செயற்படுவோரிடத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது.அது எவ்வகையான கோணத்தில் வைத்துப் பார்க்கப் படுகிறது என்பதை நாம் உன்னிப்பாக நோக்குவோமாயின், பல்வேறு திசைமாறிய அம்புகள் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட பாரதூரமான விளைவுகளை சமூகத்தில் உண்டுபண்ணி விடுவதனை காணக்கூடியதாக உள்ளது.

ஒரு தலைமைத்துவத்தால் ஒரு சமூகத்தை சிறந்த சமூகமாக மாற்றி அழகு பார்க்கும் நிலையை அடைய முடியும்.அதே தலைமைத்துவத்தைக் கொண்டு ஒரு சமூகத்தைத் தீயதின்பால் காய் நகர்த்தி இழிநிலையைக் கொண்டுவரவும் முடியும்.எது எவ்வாறிருந்த போதிலும் ஓர் திட்டமிடலில்லாத குறுகிய சிந்தனை உள்ள, சுயநலமிக்க தலைமைத்துவத்தை க் காணக் கிடைப்பது கூட சாபமாகத்தான் இருக்க முடியும். இத்தகைய சிந்தனையைச் சுமப்பவர்களது கரங்களில் தலைமைத்துவம் கிடைப்பதானது,அதிகாரமிக்க ஆணவம் மிக்க தீய வழிகாட்டலை நோக்கி நகர்த்துவதற்காக இந்த சந்தர்ப்பத்தை க் தாராள வழிவகுதது விடும்.

சமூகத்தைச் சீர்திருத்தப் பாதையில் நகர்த்த வேண்டிய தலைவர் தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து தனது சுயநலத்திற்காக,சுய இலாபத்தைப் பெறுவதற்காகவும், பெயரையும் புகழையும் மக்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காகவும் பயன்படுத்துவார் ஆயின் அது சீரழிவை நோக்கிய பயணத்தின் அடிக்கல்லாகும்.

குறிதவறி வீசப்பட்ட அம்பைப் போல இலக்குகள் தவறி யாருக்கும் பிரயோசனமின்றிப் போய்விடும். இதனால் ஒற்றுமையின் சிகரமாய்த் திகழ்ந்த சமூகம் கூறுபோடப்பட்டு துண்டாடப்பட்டுவிடும். அவருக்கென்ற தனி ரசிகர் வட்டம் ஒன்றை உருவாக்குவதிலும்,அதனைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் அதிக பிரயத்தனங்கள் எடுத்துக் கொள்வதால் நேர விரயங்களும்,தேவையற்ற சந்தேகங்களும்,ஊகங்களும் கூடவே தொடர்ந்த வண்ணமிருக்கும்.இதனால் எதற்காக தலைமைத்துவம் சமூகத்தால் வழங்கப்பட்டதோ அதன் தேவையும்,நோக்கமும் காலத்தால் மறக்கடிக்கப்பட்டு விடும்.

அந்தத் தலைவர் பிழை விட்டாலும்,மோசடி செய்தாலும் தட்டிக் கேட்க முடியாது.அப்படி யாராவது தப்பித்தவறிக் கேட்டு விட்டால் தேக்க சிந்தனையுள்ள,கண்மூடித்தனமான பின்பற்றுதல் தலைமைத்துவத்துக்கு வக்காலத்து வாங்கும் குறுகிய சிந்தனைதான் இன்று சமூகத்தில் தலைவிரித்தாடுகின்றது. இவர்கள் சாதாரண பொதுமக்களை ஏமாற்றி,போலியான விளக்கங்களை மெழுகு பூசி நம்பவைக்கின்றனர். இத்தகைய. சதி வலையில் சமூக நலன்களும்,பொது நன்மைகளும் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன.

தட்டிக் கேட்பவர்கள் அறிவாளியாக,சமூக வாஞ்சை மிக்கவர்களாகத் திகழ்ந்த போதிலும் அவர்களிடம் அதிகாரம்,ஊழல் மோசடி,பணம் இல்லாததன் காரணமாக அது சமூகத்தால் முடக்கப்பட்டுகிறது. இத்தகைய விடயங்கள் தொடர்வது ஆரோக்கியமான நிலைக்கு ஒரு போதுமே இட்டுச். செல்லாது. இத்தகைய திசையின்றிய செயற்பாடுகளே இன்றைய உலகில் பல்வேறு போராட்டங்களை,சமூக எழுச்சி களை நோக்கிய பயணத்திற்கு வித்திட்டுள்ளது என்று கூறினாலும் அது மிகையாகாது.




# அப்பாவின் கடிதம்

**ஜனனி. மோ**

அன்று... எப்பொழுதும் போல் அந்தத் அறையில் மேசையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள் காவியா.

மேசையில் இருந்த புத்தகங்கள் ஒருபக்கமும், பல வண்ணக் கோப்புகள் இன்னொரு பக்கமும் ஒழுங்கில்லாமல் கிடந்தன. மேசையின் மத்தியில் ஒரு தேநீர் கோப்பையில் பாதி குடித்த தேநீர் மீதமிருந்தது. *(27)*

ரிங்.. ரிங்... சைக்கிள் மணியோசை கேட்கிறது. கவியா தங்கியிருக்கும் வீட்டின் முன் போய் நின்று "தபால் தபால்..." என்று குரல் கொடுத்தார் தபால்காரர் சந்திரன். ஆவலுடன் ஓடி வந்த காவியா *(20)*

"யாரு"எனக் கேட்க...

"காவியா "யாரும்மா என அவரும் கேட்க...

"நான் தான் சொல்லுங்க ஐயா"எனக் காவியா கேட்டாள்...

"உங்க பெயருக்கு ஒரு கடிதம் வந்திருக்கு. இதில கையெழுத்துப் போடுங்க..."

"யாரு அனுப்பியிருக்காங்க" எனக் கேட்டாள். *(27)*

"நாதன், கிளிநொச்சி, செல்வாநகர் என்று முகவரி இருக்கு" என்றார் தபால்காரர்.

" அப்படியா எனது அப்பா தான்"என்று கூறியவள் ஓடிச் சென்று வேண்டுகிறாள்.

தபால்காரர் நகர்ந்து போகின்றார்.

அழகாகக் குண்டு குண்டான கையெழுத்தில் முகவரி எழுதப்பட்டிருந்தது. கடிதத்தை முதலில் பிரிக்க ஆரம்பித்தவள் ஏதோ நினைவினில் மூழ்கினாள். *(33)*

காவியா ஒரு கல்லூரி மாணவி. சிறுவயதிலேயே என்றும் அழகானவளாகத் திகழ்ந்தாள். அன்பானவள், எல்லோரிடமும் சரளமாகப் பேசிப் பழகக் கூடியவள். படிப்பதிலும் நல்ல ஆர்வம் உள்ளவள். *(19)*

குடும்பத்துக்குச் செல்லப்பிள்ளை. அப்பாவும் அம்மாவும் தோட்டத்து வேலை செய்து வருபவர்கள். காவியாவைப் படிக்க வைத்தே தீர வேண்டும் என்ற ஒரு முடிவில் கடினமாக நாதன் உழைத்தார். காவியாவும் பள்ளிக் காலத்தில் விளையாட்டிலும் படிப்பிலும் முழுக் கவனம் செலுத்தி முதன்மையாக வந்து கொண்டிருந்தாள். நினைவு திரும்பியவள் கடிதத்தை வாசிக்க ஆரம்பித்தாள். *(34)*

அன்புள்ள மகளுக்கு ....!

உன் பாச அப்பா எழுதிக் கொள்ளும் கடிதம்.

இங்கு நானும் உன் அம்மாவும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். அங்கு உன்னுடைய நலத்தையும் உன் நண்பர்கள் நலத்தையும் அறிய விழைகிறேன். (22)

இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். மின்னஞ்சலும் அலைபேசியும் வந்த பிறகு கடிதம் எழுதுவது காணமல் சென்று கொண்டிருக்கும் நேரத்தில் திடீரென்று கடிதம் எழுதுகிறேனே என்று ஆச்சரியமாக இருக்கிறதா? கடிதங்கள் மன உணர்வை அழகாய் வெளிப்படுத்தும். எவ்வளவு நாள்கள் கடந்தாலும் மறுபடியும் வாசிக்கும் போதும் அதே உணர்வை தரக்கூடியவை. (36)

கடிதங்களுக்காக காத்திருப்பது. ஒரே கடிதத்தைப் பலமுறை திரும்பத் திரும்ப வாசிப்பது, கடிதம் வராமல் போன ஏமாற்றதைத் தாங்கிக் கொள்ள முடியாமலிருப்பது போன்றவை கடந்த காலத்தின் சுவடுகள் மகளே! (20)

தாத்தாவிடமிருந்து வரும் கடிதங்களை எங்கள் வீட்டில் பாட்டி ஒலைப்பெட்டி ஒன்றில் வைத்துப் பாதுகாத்தார். கடிதங்கள் நிறம்வெளிறி எழுத்து மங்கி வெளவால் போலத் தொங்கிக் கொண்டிருந்தாலும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் பலமுறை திரும்பத் திரும்ப படிக்கும் நினைவுகள் என்மனதினில் நிழலாடுகிறது. (28)

ஆர்வத்துடன் தொடர்ந்து வாசித்தாள்.

இதுவரையில் ஒருமுறையேனும் உன்னை நான் பார்க்க வராமல் போனாலும் உனது படிப்பிற்கான மாதத் தொகையை மறக்காமல் அனுப்பி வைக்கிறேன். (17)

[275]

உன்னைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் உனது படிப்பு குழம்பி விடக்கூடாது என நினைத்து உன்னைச் சந்திக்க நான் விரும்பியதில்லை. உனக்குத் தெரியும், நானும் உங்க அம்மாவும் குடும்பத்திற்கு நிறைய முக்கியத்துவம் கொடுத்து உன்னை வளர்த்து ஆளாக்கினோம். உனக்கு உயர்ந்தது கல்வி மட்டுமே. (31)

நீ காலாண்டுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுள்ளாயா?, வகுப்பில் முதன்மை நிலை பெற வேண்டுமென நானும், உன் அம்மாவும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நீ தங்கியிருக்கும் வீட்டில் உனக்குச் சுவையான உணவு கிடைக்கிறதா? (22)

நீ ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய பருவ வயதுப் பெண் நீ. நான் உன்னை நம்புகிறேன். ஆனால் உனது வயதை நம்ப முடியாது. நமக்கு ஒழுக்கம் தான் அவசியம். உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்து கொள். நிறையப் பயணப்படு. புத்தகங்களை நேசித்து வாசிக்கும் போது நீ நிறைந்த அனுபவத்தைப் பெறுவாய். " நூல் பல கல்", கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்ற முதுமொழிகளுக்கு இணங்க புத்தகங்கள் நமது ஒப்பற்ற ஆசானாக செயல்படுகின்றன. நல்ல நூல்களே நல்ல நண்பர்கள். (57)

நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உறவுகளையும் தாண்டி மேன்மையானது நட்பு மட்டுமே. (08)

அதிகம் எழுத வேண்டும் என்று நினைக்கிறேன். அடுத்த மாதக் கடிதத்தில் தொடர்கிறேன்.. மகளே! நீ ஏதேனும் சொல்ல விரும்பினால் எனக்கு அடுத்த கடிதத்தில் எழுதவும். உன் கடிதம் காண விரும்பும்,

நேசத்துடன்,

உன் அப்பா. (22]

கடிதத்தை வாசித்ததும் முகம் மலர்ச்சியடைந்தது. உள்ளம் பூரிப்படைந்தது. குதூகலம் பிறந்தது. கனவா நனவா... குழப்பமாய் எழுந்தவள் அந்தக் கடிதத்தை மீண்டுமொரு தடவை படித்துப் பார்க்கிறாள் காவியா.. (19)

கவியா! கவியா!

சமையலறையிலிருந்து நர்மதா கத்துகிறாள். எவ்வளவு நேரமாகத்தான் கத்துவது. தொண்டையும் வலிக்கிறது.

வாசற் கதவைத் தட்டுவதுபோல் சப்தம்.

"காவியா!" என்ற குரல்.

"நர்மதா? வா!"

அவளுடைய நண்பி நர்மதா வந்து "உன்னை எத்தனை தடவை கூப்பிடுறது. அறைக் கதவை சாத்திவிட்டு என்ன செய்கிறாய்?" என்று முணுமுணுத்தாள். (29)

" சொல்லு என்னை அழைத்ததன் நோக்கம் என்ன?"

"காவியா! தேநீர், பால் ஏதாச்சும் குடிக்கிறியா?"

"எனக்கு பால் வேண்டும். " என்றாள்.

அருகில் இருந்த தேநீர் கோப்பையுடன் நர்மதா நகர்ந்தாள். (20)

அலைபேசி, அதன் நவீனத் தொழில்நுட்பம் நம்மைத் தொடர்ந்தபடியே உள்ளது. தொழில்நுட்பம் அவசியம் தான். ஆனால் தொழில்நுட்பத்தின் பெயரால் பாரம்பரியம் அழியக் கூடாது என்று எண்ணியவள் தந்தைக்கு பதில் கடிதம் எழுத ஆரம்பித்தாள். (22)

# மறுபிறவி

**பவானி சற்குணசெல்வம்**



கிழக்கிலங்கையின் மட்டக்களப்பு நகரில் இருந்து வடக்கு நோக்கி கிரான் நாற்சந்திவரை சென்று அங்கிருந்து மேற்கு நோக்கி புலிபாய்ந்த பாலம் எனும் இடம் வரை சென்று அங்கிருந்து வடமேல்திசையில் சென்றால் கோரா வெளியினை அடைய முடியும்.

காட்டு பகுதியின் மத்தியில் கொக்கொட்டி மரசோலை சூழ சுற்றிவர சலசலத்து ஓடும் நதிக்கரையின் மத்தியில் உயர்ந்த மணல் புட்டியின் மத்தியில் குடி கொண்டுள்ளாள் கண்ணகையாள்.

இயற்கை எழில் கொஞ்சும் கொக்கொட்டிமரச்சோலை நிழலும் சலசல வென ஓடும் நதியின் சத்தமும் வீசுகின்ற தென்றல் காற்றும் மனதுக்கு இதமான சூழல்தான்.

மதுரைநகரை எரித்த கண்ணகி சினம்கொண்டு இலங்கையின் வந்தாறுமூலைக்கு (வந்து ஆறிய மூலை) வந்ததாகவும் அங்கிருந்து காட்டுவழிப் பாதையில் சென்றதாகவும் பின்னர் அழகு கொஞ்சும் கோராவெளியில் வந்து கொக்கொட்டிமரத்தடியில் அமர்ந்தாள் எனவும் வரலாறு சொல்லப்படுகின்றது.

கிரான், சித்தாண்டி, முறக்கட்டாஞ்சேனை, சந்திவெளி, கோரைகல்லிமடு, கிண்ணையடி, மிறவோடை போன்ற அழகிய கிராமங்கள் வந்தாறுமூலையை அண்டிய கிராமங்களாகும்.

1981இல் வந்தாறுமூலை மகாவித்தியாலயம் பல்கலைக்கழகக்கல்லூரியாக

மாற்றப்பட்டுப் பின் 1986 இல் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது.

நான் அங்கே விவசாய பீட இறுதியாண்டு மாணவியாக இருந்த காலம் அது.

எனது நண்பன் ஒருவர் பிணவறைப் பணிப்பாளராகக் கடமையேற்றிருந்த காலகட்டத்தில் எனக்கு உணவுக்கட்டுப்பாட்டாளர் பதவி தரப்பட்டது. வாழைச்சேனை நெல்சந்தைப்படுத்தும் சபை உடைக்கப்பட்டதனாலும் கோதுமை மா பருப்பு இருந்ததனாலும் ஓரளவு உலர் உணவிற்கு தட்டுப்பாடு இல்லாமல் இருந்தது. பல்கலைக்கழகம் அகதி முகாமாக மாற்றப் பட்டிருந்தது. அண்டைக் கிராமங்களில் இருந்த மக்கள் அங்கே வந்து பாதுகாப்பாகத் தங்கியிருந்தனர். உணவுப் பிரச்சினைகளைவிட மருத்து சம்பந்தமான பிரச்சினைகளே மிக அதிகமாகக் காணப்பட்டன. கிராமிய வாழ்வின் கடின உழைப்பின் அடையாளச் சின்னங்களாக இருந்த மக்கள் ஓரளவு அதைத் தாக்குப்பிடித்தார்கள். குழந்தைகளும் கர்ப்பிணிப் பெண்களும் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இறந்த குழந்தை ஒன்றை தனது கைகளில் சுமந்து கதறிக் கொண்டு ஓடிவந்த அந்த பாட்டாளி மகனின் கதறல் அந்தச் சுவர்களிப் பட்டு கட்டடமே அதிர்ந்து போனதை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது.

அதிகாலை எழுந்து சென்று அகதிகளுக்கு உணவுப் பொருட்களை விநியோகம் செய்து பின் மாணவர்களின் உணவு தயாரிப்பு வழிநடத்தலிலும் பங்கெடுத்த காலகட்டம். ஆண்கள் விடுதியில் இருந்த மாணவர்களில் ஒரு பிரிவினர் எங்காவது சென்று வேலியில்லாத காணிகளிற்குள் புகுந்து தேங்காய் பிடுங்கிக் கொண்டு வந்தனர். இன்னொரு பிரிவினர் காடுகளிற்குள் புகுந்து மான் மரை போன்ற விலங்குகளை வேட்டையாடி இறைச்சி கொண்டு வந்தனர். வேறொரு பிரிவினர் மரக்கறி மிளகாய் போன்றவற்றைத் திருடி வந்தனர்.

“களவும் கற்று மற” என்பதற்கமைய நல்லது கெட்டது எல்லாமே கற்றோம் பல்கலைக்கழகம் அல்லவா?

பெண்கள் விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு சமையற் கலை பயின்றனர். மிளகாயை அரைத்து மிளகாய்தூளுக்குப் பதிலாகப் பாவித்தோம். ஒருநாளைக்கு 500 ரொட்டிகள் தயாரிக்க வேண்டும். சமைக்க மறுப்பவர்களுக்கு உணவு வழங்கப்பட மாட்டாது என்ற சட்டம் அமுலில் இருந்தது. இரவில் சதுரங்கம் பகலில் பட்மின்றன் என பொழுது போனது.

போர் உச்சக்கட்டத்தை அடைந்த அந்தக்காலகட்டத்தில்தான் நானும் எனது சக மாணவர்களும் இறந்ததாக உதயன் பத்திரிகையில் செய்தி விடப்பட்டிருந்தது. எனது பெற்றோர் சகோதரர்கள் உற்றார் உறவினர் அனைவருக்கும் வேறு எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில் என்னைத் தேடித் திரிந்தனர்.எனது பெற்றோர் மனங்கலங்கி நோயுற்றனர்.

அந்தச் செய்தி கேட்டு நாம் பல்கலைக்கழக விடுதியிலிருந்து வெளிக்கிட்டு வீடுநோக்கிய பயணத்தை ஆரம்பித்தோம்.

பஸ்ஸிலும் லொறியிலும் மாறி மாறி நீண்ட நேரம் பிரயாணம் செய்து ஒரு

மாதிரிப் புதுக்குடியிருப்பை வந்தடைந்தோம். அங்கிருந்து றக்ரரில் நெடுங்கேணி சென்றோம். கரடுமுரடான பாதையிலும் உழவுக்காக விடப்பட்ட வயல் வெளிகளிலும் விரைந்து ஓடிய ரிறைக்ரர் நமது எலும்புகளையெல்லாம் அத்து வேறு ஆணி வேறாகக் கழற்றியெடுத்தது. பிச்சை வேண்டாம் நாயைப்பிடியென்று அதிலிருந்து இறங்கி நடக்கத் தொடங்கினோம். சதுப்பு நிலமொன்றில் சிக்கி கிழே புதையத் தொடங்கினேன். நிறம்மாறாத பூக்கள் திரைப் படத்தில் ரத்திக்கு நடந்த கதைதான் இதைவிட பல்கலைக்கழகத்தில் நின்று அங்கேயே இறந்திருக்கலாம் என நினைத்தேன். நண்பர்கள் என்னை முழுதாகப்

புதைய விடாமல் இழுத்தெடுத்தனர். கை வலி மாறப் பல வாரங்கள் ஆகின.

ஒரு வீட்டிற்கு அத்தியாவசிய தேவைகளாக கிணறு, மலசலகூடம், சமயலறை போன்றவற்றோடு ஈழத்தமிழர் வாழ்வில் ஒன்றிப் போன இன்னுமொன்று பங்கர் எனப்படும் பதுங்குகுழியாம். யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் பல உயிரிழப்புக்களை தவிர்ப்பதற்கு எமக்கு அது தேவையான ஒன்றாக இருந்தே வந்திருக்கின்றது.

90ம் ஆண்டு காலப்பகுதியில் தான் பதுங்குகுழிகள் அதிகமாகப் பாவிக்கப்பட்டன.

யாழ்க்குடா நாட்டில் சிறிலங்கா இராணுவத்திடம் பொம்பர் வகை விமானங்களே இருந்தன. தொடர்ந்து பத்து, இருபது விமானங்கள் ஒரே வரிசையில் வந்து குண்டு போடும் பார்க்க அழகாக இருந்தாலும் ஈனத்தனமாக எம் உறவுகளின் உயிரை குடித்தது. அப்போதைய பங்கர்கள் ஒரு சிறிய அறையின் தோற்றத்தை கொண்டிருந்தன. பொதுவான நீள-அகலத்தை கொண்டமைக்கப்பட்டிருந்தன. மேலே பனைமரக்குற்றிகள் போடப்பட்டு மூடப்பட்டிருக்கும். வாசல் பகுதியில் நீர் உள்வராத வகையில் கூரை போடப்பட்டு மேயப்பட்டிருக்கும்.

அங்கேயும் கலையுணர்வு குன்றி விடவில்லை. சகோதரிமார்கள் கீழே மெழுகி, மேலே மட்டைகளை அழகாக அடித்து ஒரு அறைமாதிரி அந்த பங்கரைச் செம்மையாக வடிவமைத்திருந்தனர்

பிற்பட்ட காலப்பகுதியில் பொம்பர் போய் கிபிர், சுப்பசோனிக் ஆட்சிக்கு வந்தன. எனவே பதுங்குகுழிகளின் கட்டுமானங்களிலும் மாற்றம் ஏற்பட்டன. கிபிர் போடும் குண்டுகள் மண்ணை ஆழமாகத் தோண்டியதால்

சிலவேளைகளில் பங்கர் மீது விழுந்தால் அதனுள்ளவர்கள் யாவரும் பலியாவதுடன், சிலவேளைகளில் வாசல்புறம் மூடப்பட்டு, உள்ளுள் பலர் மாட்டுப்பட்டு காற்றோட்டம் இன்றி சாவார்கள் என்பதை கொண்டு, திறந்த பங்கர்கள் அமைக்கும் முறை மேற்கொள்ளப்பட்டது.

திறந்த பங்கர்கள் ஒரு மனிதனின் இரண்டு தோள்பட்டைகள் அளவு அகலத்தேயே கொண்ட ஒடுங்கிய வடிவமாகும். பெரும்பாலும் நிற்கக்கூடிய அளவு ஆழத்தில் தான் அமைக்கப்பட்டது. மேலும் ஒரே நேராக அமைக்கப்படுவது தவிர்க்கப்பட்டு, "ட" வடிவில் தான் அமைக்கப்படும். இதனால் அங்கே குண்டு விழுந்தாலும் இழப்புக்கள் குறைக்கப்படும் என்ற நப்பாசை தான்.

வன்னியில் பங்கர்கள் தொடராக தான் அமைக்கப்படும். ஒரு பக்கத்தில் குதித்தால் வேறு எங்காவது போய் எழுந்து கொள்ளமுடியும். மேலும் தண்ணீர்பாயும் வாய்க்காலும் இருந்தால் அதுவும் ஒரு பதுங்குகுழி மாதிரி அவசரத்துக்கு பயன்படுத்தப்பட்டன.

எமக்குத் தங்கியிருப்பதற்கு ஏற்றவாறான பதுங்குகுழி அது. அன்போடு எம்மை வரவேற்ற வன்னி மக்கள் தம்மோடு சேர்த்து எம்மையும் அங்கு பாதுகாத்தனர்.

நாங்கள் குழுவாகச் சென்றதால் ஹெலிகொப்ரற்கள் தாழ்ந்து எம்மைக் கலைத்து அடிக்கத் தொடங்கின. நாங்கள் முதலில் மரங்களின் கீழ் ஒதுங்கினோம். மரக்கிளைகள் முறிந்து விழுந்தன. நாங்கள் பங்கரில் இருந்தபோதும் ஹெலிகொப்ரர்கள் பதிந்து வந்து கரைப்பக்கமாக சன்னங்களை அடித்துச் சென்றன. அப்படியான துண்டுகள் பங்கரினுள்ளும் வந்து விழும்போது நாங்கள் மறுபக்கம் ஓடித்தப்பக்கூடியதாக இருந்தது.

மிகுந்த இன்னல்களையும் பயங்கரமான அனுபவங்களையும் கடந்து வந்த எமது மனதை வன்னி மக்களின் அன்பும் பரிவும் மயிலிறகால் தடவி எடுத்தன. அவர்களிடமிருந்து விடைபெற்று யாழ் நோக்கி நடக்கத் தொடங்கினோம்.

எமக்கு வழித்துணையாக வன்னியின் ஆதிவாசி எம்முடன் இணைந்தார். வன்னி நிலப் பரப்பின் பெருமைகளையெல்லாம் எம்முடன் பேசியவாறே எம்முடன் நடந்து வந்தார்.

வன்னிப் பிரதேசமானது ஈழ நாட்டில் வடகீழ் பாகத்தில் பரந்த நீண்டதொரு சுமார் 2000 சதுரமைல் உடைய பிரதேசமாகவும், தமிழரின் வரலாற்றுக் கலை, கலாசாரம், பண்பாடுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. வன்னிநாடு தனது எல்லைகளாக கிழக்கே திருகோணமலையையும், வடக்கே யாழ்ப்பாண பரவைக் கடலையும், தெற்கே அருவி ஆற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் கொண்டமைந்துள்ளது. இப்பிரதேசத்தை வன்னியர்கள் ஆண்டமையினால் வன்னிநாடு என அழைக்கப்பட்டது.

'எல்லை வடக்கில் எழில் யாழ் பரவு கடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை – நல்ல திருக்
கோணமலை கீழ்பால் கேதீச்சர மேற்கு
மாணத் திகழ்வன்னி நாடு'

என ஆரம்பித்தவர்..

வன்னி வளநாடு வயல்களும்,குளங்களும் நிறைந்தது. வன்னியில் செந்நெல்லும், கருநெல்லும் தீம்பலாவும்,தேமாவும், தேக்கும் மலிந்து கிடக்கின்றன. வீரமிக்க இவ்வன்னிநாடு அஞ்சா நெஞ்சம் படைத்த அருந்தமிழ் மன்னர் அரசாண்ட நாடு. வற்றாத வளம் கொழிக்கும் வன்னி நாட்டின் வளங்களைக் கண்டு அவற்றைக் கவர்ந்து செல்வதற்கு பயம்காட்டி திறை வேண்டும் என்று செப்பிய போதும் அந்நியருக்கு அடிபணியாது இறுதி மூச்சுவரை போராடி வீரமரணம் எய்திய பண்டாரவன்னியன் என்ற தமிழ் மன்னன் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசமாகும். 'வன்னிநாடு'

என்ற பெயர் ஏற்படுவதற்கு முன்னர் 'அடங்காப்பற்று' என்னும் பெயரைப் பெற்றிருந்தது. அடங்காப்பற்று

வன்னியர்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பனங்காமப்பற்று, கரிக்காட்டு மூலைப்பற்று, கருநாவல்பற்று, மேல்பற்று, முள்ளியவளைப்பற்று, தென்னமரவடிப்பற்று என்பனவாகும்.

'அடங்காப்பற்று' என்ற பெயரை வன்னிநாடு பெற்றமைக்கான காரணம், இப்பகுதி மன்னனும் மக்களும் வடக்கே யாழ்ப்பாண மன்னருக்கோ, தெற்கே அனுராதபுர அரசருக்கோ அடிபணியாது செங்கோல் ஆட்சி புரிந்தமையால் ஆகும். வன்னியர்களை பற்றி இதுவரை கிடைத்துள்ள வரலாற்று மூலங்களில் 1722 ஆம் ஆண்டு எழுதப்பட்ட 'கயிலை வன்னியனார் மடதர்மசாதனப் பட்டயம்' என்பது மட்டுமே சான்றாகும்.

வன்னிப் பிரதேசமானது மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களை தன்னகத்தே கொண்டு அமைந்துள்ளது. இம்மூன்று மாவட்டங்களையும் ஒன்றாகச் சேர்த்து வன்னித் தேர்தல் தொகுதி அமைந்துள்ளது. இம்மூன்று மாவட்டங்களிலும் வளங் கொழிக்கின்ற மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் விளங்குகின்றது. காடுகளும், வயல்களும், குளங்களும், குடியிருப்புகளும் முல்லைத்தீவு மக்களின் வாழ்க்கையையும் வயல் வளத் தினதும் கருப்பொருட்களே முல்லைத்தீவு பண்பாட்டை தீர்மானிக்கின்றது.

'வன்னி நாடு வளர் சோலை நாடு
வரியம் மூன்று விளைவுள்ள நாடு
கன்னி நாடு கதிர்சோலை நாடு
காரளார் வாழும் கன்னியர் நாடு'

என்ற பாடலடி வன்னியின் முல்லைத்தீவு மாவட்டத்தின் சிறப்புகளை எடுத்து இயம்புகின்றது. தமிழர்களின் வீரத்தினை உலகிற்கு பறைசாற்றிய வீரமானவர்கள் வாழ்ந்த முல்லைத்தீவு மண்ணானது முன்னைய வவுனியா மாவட்டத்தின் ஏறக்குறைய அரைவாசியினையும், யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளையும் இணைத்து 1106 சதுர மைல் பரப்பளவையும், கொக்கிளாயில் இருந்து கேப்பாரம்பிட்டி வரையான நாற்பது மைல் நீளமான கடற்கரையினையும் கொண்டமைந்துள்ளது. அதிக நீளம் கொண்ட கடற்கரைப்பகுதி இருப்பதனால் மீன்பிடித் தொழில் சிறந்து காணப்படுகின்றது.

கடற்கரையை அண்டி மணல் பிரதேசமும் பின்பு கரையில் இருந்து உள்ளே செல்லச் செல்ல இருவாட்டி மண், களிமண், செம்மண் என்பனவும் கருங்கல் பாறைகளும் அதிகளவு தட்டையான பகுதிகளையும் கொண்டு சூரியன் ஆறு, பறஸ்தி ஆறு, பேராறு போன்ற ஆறுகளையும் இருபதிற்கும் மேற்பட்ட குளங்களையும், நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட சிறிய நீர்ப்பாசனக் குளங்களையும் கொண்டு விவசாயத்திற்கு வளம் சேர்க்கும் இம்முல்லைத்தீவு மாவட்டம் 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

என்று வன்னியின் சரித்திரத்தை அவர் கூறி முடிக்கவும் நாங்கள் இருபத்துஇரண்டு மைல் தூரம் நடந்து யாழ் பண்ணைப் பாலத்தை வந்தடையவும் நேரம் சரியாக இருந்தது. அவரின் கதைகளைக் கேட்டவாறு வன்னியின் அழகை நிலவொளியில் ரசித்த வண்ணம் நடந்து வந்ததால் களையும் பயமும் தெரியாமல் இருந்தது. எனினும் குரக்கன் பிட்டை அவித்துக் கொட்டும்போது வரும் வாசனையை அடிக்கடி அனுபவிக்க வேண்டி இருந்தது. அது பாம்பு கொட்டாவி விடும் போது வரும் வாசனை எனக் கூறுவார்கள். நடுக்கம்தான் ஆனால் அந்த ஆதிவாசி ஒரு பெரிய கொட்டான் தடியுடன் வந்ததால் நிலைமைகளைச் சமாளிப்பார் என்ற துணிவு நம் மனதில் இருந்தது. அந்தத் துணிச்சலான வன்னிமகனுக்கும் நன்றி கூறி விடைபெற்று நடையைத் தொடர்ந்தோம்.

கோட்டை சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலமாதலால், அங்கிருந்து பலவர்ண நிறங்களில் வந்து விழுந்த எறிகணைகள் வெளிநாடுகளில் ஜனவறி முதலாம் திகதியில் நடைபெறும் வானவேடிக்கைகளுக்கு அல்லது பாரிஸ் டிஸ்னிவேள்ட் இறுதிநாள் வான வேடிக்கைகளுக்கு ஒப்பிடக்கூடியளவு அழகாகக் காட்சியளித்தன. விடிய மூன்றுமணியிருக்கும் வாணவேடிக்கைகளின் வர்ணஜாலத்தை இரசித்த வண்ணம் யாழ் பண்ணைப் பாலத்தைக் கடந்து நண்பர்களுடன் யாழ் நகரை அடைந்தேன். நண்பியின் வீட்டில் குளித்து உணவு அருந்திய பின் வீடு நோக்கிப்பயணமானேன்.

பஸ் கோவிலடியை வந்தடைந்தது. இறங்கி நடந்து சென்று பிள்ளையாரை வணங்கினேன். கடந்து சென்ற மாதங்களில் வீடு திரும்புவேனா என்று பலதடவைகள் நினைத்துண்டு. ஊர் திரும்பியது மறுபிறவி எடுத்தது போல் ஓர் உணர்வை ஏற்படுத்தியது. ஐயர்

அம்மா வந்து என்னைக் கட்டியணைத்து அழுதா. நீ செத்துப் போனாய் என்று பேப்பரில வாசிச்சதிலயிருந்து உன்ற அம்மா அப்பா தண்ணி வென்னியில்லாமல் அழுது கொண்டிருக்கினம் என்று கூறினா. அப்படியே வழியில் கண்டவர்கள் எல்லாம் என்னை அதிசயமாய் விசித்திரமாய்ப் பார்த்தனர். படலை தாண்டி வீட்டினுள் நுளைய அம்மாவும் அப்பாவும் கதறியபடி வந்து என்னைக் கட்டியணைத்தனர். "இது கனவா நனவா? இது உண்மையா?எமது கண்களையே நம்ப முடியவில்லை...நம்பவே முடியவில்லை.....இனிமேல் நீ எங்களை விட்டிட்டு ஒரிடமும் போகக்கூடாது..... போகக்கூடாது....போகக்கூடாது...."என்று என்னைப் பார்த்து வணங்கி நின்றனர்.

# நடேஷ் கன்னா கவிதைகள்

**புதுக்கவிதைகள்**

ஒரு ரூபாய் சாக்பீஸ் பல ஆயிரம்
அறிவாளிகளை உருவாக்குகிறது
ஒரு கைபேசி பலரின் கண் பார்வை
இழப்புக்கு காரணமாகிறது

◎

பதில் தெரிந்தும் கேள்வி
கேட்பவர்கள் ஆசிரியர்களும்
மனைவிகளும் மட்டுமே.

◎

பெரிய மனிதர் ஆக வேண்டும்
என்ற முயற்சியில் பலர்
சிறிய மனிதர் ஆகி விடுகிறார்கள்

◎

காதலித்துப்பார் உலகம்
உன்னை சுத்தும்
கல்யாணம் பண்ணிப்பார்
உனக்கு தலையே சுத்தும்

◎

பணத்தின் உண்மையான மதிப்பு
பிறரிடம் கடன் கேட்கும் போது தான்
தெரியும்

◎

இறந்தவருக்கு கொடுக்கும் திதியும்
இறந்தபின் கிடைக்கும் நிதியும்
இறந்தவருக்கு பலன் அளிப்பது
இல்லை.



# Dr ஜலீலா முஸம்மில் கவிதை

**வான்கடல்**

*அந்தப் பறவையும்*
*இந்த மீனும்*
*ஒன்றுதான் எனக்கு*

*அந்த வானமும் இந்தக்கடலும்*
*ஒன்றுதான் எனக்கு*

*பரந்த வானமும் விரிந்த கடலும்*
*ஒன்றிலொன்று*
*முகம் பார்த்துக் கொள்கின்றன*

*வானம் வானமாகவே இருக்கிறது*
*இந்தக் கடலோ வானமாகவும் கடலாகவும்*
*மாறி மாறி ஜனிக்கிறது*

*கடலுக்கு எல்லை உண்டு*
*வானுக்கோ எல்லைதனை*
*அறுதியிட இயலாது*

*வானக் கடலில் பறவைகள் மிதக்கின்றன*
*கடல் வானத்தில் மீன்கள் பறக்கின்றன*



இந்த மீன்கள் வான் பறவைகளின்
பிம்பங்களோடு பேசிக் கொள்ளுமோ
என்னவோ?

ஆனாலும் பறவைகளுக்கு மீன்களின்
பிம்பங்கள் வானில் இல்லை
பேசும் சந்தர்ப்பங்களும் இல்லை
மௌனமாய் பறக்கின்றன அவை

பெருங்கடலின் ஆழமும் மௌனமும்
வானத்திற்கும் இருக்கிறது
பெருங்கடலின் ஆர்ப்பரிப்பும்
சப்தமும்
வானத்திற்கு இல்லாது இருக்கிறது

வானம் காற்றை
தலைகீழாக வைத்திருக்கிறது
கடலோ தண்ணீரை தன் மேலே
வைத்திருக்கிறது

நீரும் காற்றும் ஒன்றுதான் எனக்கு
நீருள் சிறகசைக்கும் மீன்
காற்றில் நீந்தும் பறவை

ஆயினும் பறவைகளே மீன்களின் எதிரி
இரண்டும் ஒன்றுதான் என்றறிவதாயில்லை
அவை

கடலும் வானும் காதல் கொள்கின்றன
கூடல் கொள்கின்றன
தொடு(ம்)வானத்தில்
தன் நீலவண்ணம் யாவும்
கொட்டிக் கரைத்தது வானம் கடலுக்குள்

ஆனால் மீன்களும் பறவைகளும்
காதல் பரிமாற்றத்தில் பங்களிப்பதில்லை
பங்கெடுப்பதில்லை

மேகவாய் கொண்டு கடலை கொஞ்சியது
உறிஞ்சுகிறது வானம்
அலைவதைத் தவிர ஆகாயந்தொடுவதில்லை
அலைகள்
ஆனாலும்
வான பிம்பத்தை கரை சேர்க்கப் படாத
பாடுபடுகின்றன

கடல்
கொடுத்ததைத் திரும்பக்கேட்டதோ என்னவோ?
வானம்
பெற்றுக்கொண்டதை பன்மடங்காக்கிக்
கொட்டிக் கொடுக்கத்தவறுவதில்லை

முங்கிய பறவையோடு
கொஞ்சம் சஞ்சரித்துக் கொள்கிறது கடல்
நீந்தும் மீன்களோடு
கடலே கதியென விழுந்து கிடக்கிறது வானம்

அந்தப் பறவையும்
இந்த மீனும்
ஒன்றுதான் எனக்கு

அந்த வானமும் இந்தக்கடலும்
ஒன்றுதான் எனக்கு

# அலெக்ஸ்பரந்தாமன்

**மனச் சிதறல்கள்**

பேனாவுள்
தீர்ந்துவிட்டது மை!
எழுதும் கவிஞனின்
பசிக்கும் வயிற்றைப்போல.

◎

எனது
ஒவ்வொரு
தமிழ் வார்த்தைகளிலும்
பிழை பிடித்துக்கொண்டிருந்தார்கள்
ஆங்கிலப் புலமைமிக்க
'மெத்தப்படித்தவர்கள்'.

◎

என்னதான் இருந்தாலும்
கூடாது கோழிக்கு
இத்தனை தற்பெருமை.

இட்டுவிட்டுக் கொக்கரிக்கிறது
ஒரே ஒரு முட்டையை.

◎

தனது
உண்டியைச் சுருக்கியவாறு
நிரப்பியபடி இருந்தான்
நாளாந்தம்
தன் உண்டியல் பெட்டியை.

◎

சோறுபோடாத
அவனது எழுத்துகள்...
இப்போது
சோறு போடுகின்றன பலருக்கு.
அவன் இறந்த
எட்டாம்நாள் நிகழ்வில்.

◎

சந்தைக்குள்
விலை குறைத்துத் தர மறுத்தவனின்
மரக்கறி வகைகளை



இப்போது
உண்டுகொண்டிருந்தன
கட்டாக்காலி மாடுகள்
அதன் கழிப்பிடத்தில்.

◎

கோவிலின்
கோபுர ஒலிபெருக்கியில்
அறிவிக்கப்படுகிறது
அன்னதான உபயகாரனின்
முழுப்பெயர்!

முன்னே
வீதியில் போகிறது
வறுமை ஒழிப்புப் பேரணி!

◎

குழந்தைவரம் வேண்டி
ஆலய முன்றலில் அவள்.

அருகே
குப்பைத்தொட்டியொன்றுள்
இறந்த நிலையில் ஒருசிசு
எறும்புகள் கடித்த நிலையில்.




# கல்

**முல்லைக்கோணேஸ்**

*வருடம் 1996.*

**நா**யாறு தொடக்கம் வட்டுவாகல் வரை இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருந்த முல்லைத்தீவைப் புலிகள் இயக்கம் கைப்பற்றியிருந்த சமயம், ஆறுவருடங்களாய் ஊரைவிட்டு வேற்றூர்களில் தங்கியிருந்த சனங்கள், தங்கள் ஊர்களைப் பார்ப்பதற்குப் படையெடுத்துக்கொண்டிருந்தபோது, அவனும் தனது சொந்த ஊரான சிலாவத்தையைப் பார்க்கவென ஆவலோடு புறப்பட்டான். போகும் வழியெங்கும் அவனுக்கு அவனது சிறுவயதுக்கால ஊர்நினைவுகள் மனசில் விரிந்தபடியே இருந்தன.

சிலாவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குப் போகும் ஆ 35 நெடுஞ்சாலையில் அமைந்திருந்தது. ஊரின் தெற்கே வீதியின் அருகாக பரந்து விரிந்த குளம் நீண்டுகொண்டே சென்றது. குளத்தின் மறுகரையில் பனைகளும் தென்னந்தோப்புமாய் இருந்தது. அவனது வீட்டில் நின்று பார்த்தால், சோளகக்காற்று எழும்பாத அதிகாலையில் அமைதியாய் இருக்கும் நீர்ப்பரப்பெங்கும் பனைகளும் தென்னைகளும் சம்புப்புற்களும் தலைகீழ் விம்பங்களைக் காட்டி நிற்கும். நாரைகள், கொக்குகள், நீர்க்காகங்கள், கூழைக்கிடாக்கள், சம்புக்கோழிகள், சிறைகள், இன்னும் பெயர் தெரியாப் பறவைகள் குளத்தின் மேற்பரப்பில் பறந்தும் நீந்தியும் சம்புகளில் உட்கார்ந்தபடி ஒலியெழுப்பியவாறு ஒரு மாய வெளியில் அவை இயங்கிக் கொண்டிருப்பனவாய்த் தோன்றும்.

நேரம் செல்லச்செல்ல காற்று எழும்போதெல்லாம் குளத்தில் எழும் மென்அலைகளில் சூரியவொளி நட்சத்திரத் துண்டுகள் போல கண்ணைப் பறிக்கும் பிரகாசமாய் தெறித்துத் தெறித்து ஜாலம் காட்டும். மாலையானால் அசைவற்றநீரில் வானம் செந்நிறத்தை ஊற்றியிருக்கும்.

முல்லைத்தீவு நகரிலிருந்து இரண்டாவது மைல் தூரத்தில், அவனது வீடு. அப்போதெல்லாம் கிலோ மீற்றரோ, கிலோ கிராமோ அளவீடுகளில் அறிமுகமில்லாத காலம். மைல் அல்லது கட்டை என்று தூரத்தையும், றாத்தல் என்று நிறையையும் வழக்கத்தில் கொண்டிருந்த காலம்.

அவனது வீட்டிலிருந்து நகருக்குச் செல்லும் வலப்பக்கமாய் மேடான பகுதியில் அமைந்திருந்தது இரண்டாவது மைல் கல். வெள்ளைநிறம் பூசிய நிலமட்டத்திற்குமேல் நாலடி உரயத்திலிருக்கும் அக்கல்லில் 2 என்று பெரிதாக இடப்பட்டிருந்தது. அக்கல்லைச் சுற்றி புற்கள் வளர்ந்து இயற்கையும் செயற்கையும் கூடினால் பெறும் அழகினைக் காட்டி நின்றது.

அவன் சிறு பராயத்திலிருக்கும்போது அவனது ஐயா அக்கல்லடி வரைக்கும் கையைப் பிடித்து நடந்துபோய்த் திரும்புவார். சிலவேளைகளில் தன்னை அக்கல்லின்மீது உட்கார வைக்கக் கேட்கும்போது, அவர் தூக்கி இருத்தியதும் அவன் அவரது தோளில் ஒரு கையைப் பிடித்தவாறு கால்களை ஆட்டியபடி பெருமிதமாய்ச் சிரிப்பான். பிறகு அவன் பாடசாலைக்குப் போகும் நாள்களில் அக்கல்லை ஒரு முறையாவது தொட்டுவிட்டுச் செல்வதே வழக்கமாக இருந்தது. அப்போதெல்லாம் கல்லுக்கும் அவனுக்கும் ஒருவித பந்தம் இருப்பதாகவே எண்ணிக் கொண்டான். அக்கல்லின்மீது அவன தொடும்போது ஏற்படுகின்ற ஸ்பரிசம் ஒரு நாய்குட்டியை வருடி விடுவது போலோ ஒரு பூவை முகர்ந்து புளகாங்கிப்பதுபோலோ ஒரு மரக்கன்றுக்கு நீருற்றும்போது ஏற்படுகின்ற நிறைவைப்போலோ அம்மைல் கல்லின்மீது அவனுக்கு ஒருவித லயிப்பு எப்போதுமே இருந்து கொண்டது.

அக்கல்லுக்கு ஒருமுறை வந்த பி. டபிள்யூ. டி. லேபர் ஒருவர், கூடவே கொண்டு வந்த வெள்ளைத்தீந்தையைப் பூசி, சிறிதுநேரம் உலர்ந்த பின்னர் கறுப்புநிற வர்ணத்தால் இரண்டை எழுதுவதை ஆவல் கூடிப் பார்த்துக் கொண்டே நின்றான். அப்போது அந்த நபர் அவனை ஒருமுறை நிமிர்ந்து பார்த்துவிட்டு,

“ என்ன தம்பி...! பெயின்ரிங் செய்வது உங்களுக்கு விருப்பமோ?” என எழுதியவாறே கேட்டார்.

“இல்லையில்ல... எங்கட அற்றஸ், இரண்டாம் கட்டை எண்டு சொன்னால்தான், எல்லோருக்கும் தெரியும். கடிதம் வாறதெண்டாலும், இரண்டாவது மைல் சிலாவத்த முல்லைத்தீவெண்டுதான் வரும்... அதுதான் எங்கட ரெண்டாவது மைல் கல்ல அழகுபடுத்திறதப் பார்க்கிறன் “ என்றான் சிரித்த முகத்துடன்.

அவருக்கு அவன் கூறியதைக்கேட்டு, உற்சாகம் வந்திருக்கும்போல.

“ஆ... அப்ப நான் உங்கட ரெண்டாவது மைல் கல்ல ஆறுதலாய் வடிவாய்ச் செய்யிறன்” என்று பிறஸ்ஸை எடுத்துக் கறுப்பு வன்ணத்தில் தோய்த்து மீண்டும் அழுத்தினார். 2 என்ற இலக்கம் முன்னரைவிட இன்னும் கருமையாகவும் கவர்ச்சியாகவும் ஒளிர்ந்தது.

அவர் சைக்கிளை எடுத்துக்கொண்டு போனதற்குப் பிறகும் நீண்ட நேரமாகவே கல்லைப் பார்த்தவாறு நின்றிருந்தான்.

ஏ.எல். பரீட்சை எழுதிவிட்டு கம்பஸ் போவதற்கு றிசல்ற் காணாமல் நண்பர்களோடு ஊர் சுற்றிக்கொண்டிருந்த நாள்களிலும்கூட அக்கல்லுக்கு அருகாகச் செல்லும் குச்சொழுங்கையருகே சைக்கிளை நிறுத்திவிட்டு, மணிக்கணக்காய் கதையும் சிரிப்புமாய் அவ்விடத்தில் இருப்பான். இருட்டியிருந்தாலும், அக்கல்லின் வெண்மை இருளைக் கிழித்து ஒளிர்ந்தபடி தானிருக்கும். சிலபொழுதுகளில் அக்கல் அசைவது போலவும் தேவதை ஒன்று நடமாடுகிறதோவென எண்ணவும் தோன்றும்.

அப்படி நண்பர்களோடு நின்றிருந்த நாளொன்றில்தான் சுசியை அவன் கண்டான்.

தென்னைமரவாடி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், கோட்டக்கேணி ஆகிய ஊர்களில் இருந்து இடம்பெயர்ந்து அளம்பில், செம்மலை, உடுப்புக்குளம், முள்ளியவளை போன்ற இடங்களில் குடியேறிய சனங்கள் தங்கள் ஊர்களின் கனவுகளோடு அலைந்துகொண்டிருந்தபோது, சுசியும் தன் குடும்பத்தோடு சிலாவத்தைக்கு வந்திருந்தாள்.

அங்கு வந்தவர்களைக் காயாமோட்டைப் பிள்ளையார் கோயிலுக்குக் கிழக்கே இருந்த முதலியாரின் சோடையடித்த தென்னந்தோட்டத்தில் முகாம் அமைத்துக் குடியேற்றி இருந்தார்கள். சுசியும் அங்கு தன் குடும்பத்தினரோடு தங்கியிருந்தாள். அவளை அவன் பார்த்த அந்தமுதல் கணத்திலிருந்தே அவளது வசீகரமான முகமும் இளமை ததும்பும் உடலின் வனப்பும் அவனைக் கிறங்கச் செய்து கொண்டிருந்தன. இன்னொருதடவை அவளைப்பார்க்க முடியாதா?பேச முடியாதா? என்று அவன் எண்ணங்கள் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டிருந்த பொழுதொன்றில் திடீரென்று அவளே அவனது வீட்டிற்கு வந்திருந்தாள். அவனுக்கு ஒருவித பதட்டமும் உள்ளூர ஒரு இன்ப உணர்வும் உண்டாக -

"வாங்கோ..." என்று மொட்டையாகச் சொல்லியபடி, முற்றத்து மாமர நிழலில், தான் வாசித்துக் கொண்டிருந்த கதிரையைக் காட்டினான்.

"பரவாயில்லை.. நீங்களிருங்கோ" என்று அவள் நிற்கும்போது, அவன் உள்ளேபோய் இன்னுமொரு கதிரையைக் கொண்டு வந்தான்.

"நான் மட்டக்களப்பு கம்பஸில பைனலியர் ஆர்ட் பக்கல்றி லிற்றரேச்சர் றிசேச் ஒண்டு செய்ய வேணும். இஞ்ச ஆரேம் எனக்குத் தெரியாது. ஊரில உங்களைத் தொடர்பு கொண்டால், நீங்கள் ஆரேம் அறிமுகப்படுத்துவியளாம் எண்டு சொல்லிச்சினம். அதுதான் வந்தனான்" என்றாள்.

பேச்சில் எதுவித பதட்டமும் தடங்கலுமின்றித் தெளிவாய்க் கதைத்தாள். உட்கார முன்னர் கையால் பஞ்சாபி ஆடையின் பின்புறத்தை இருப்பதற்கு வசதியாகச் சீர் செய்தபடி மறுகையில் வைத்திருந்த கொப்பிகளையும் காகிதாகிகளையும் மடியில் வைத்துக் கொண்டு அமர்ந்தாள். பிறகு பின்னால் தொங்கிய முடியை முன்புறமாக எடுத்துவிட்டு நீவினாள்.

"நீங்கள் என்ன செய்யிறியள் " என்றாள்.

"நான் இரண்டாவது தடவையும் எக்ஸாம் எழுதீட்டன். றிசல்ற் காணாது. வெளிநாடு எங்கேம் போவம் எண்டிற பிளானில இருக்கிறன்" என்றான் அவளது விழிகளைப் பார்க்கத் தைரியமற்றபடி.

"நல்ல வடிவான பூக்கண்டெல்லாம் வைச்சிருக்கிறியள். பூக்கண்டு வைக்கிறதில இன்றஸ்ரோ?"

" ஓ... விடிய எழும்பினால் புக்கண்டுகளத்தான் பாக்கிற. ஒவ்வொரு பூக்களின்ர நிறமும் வடிவும் தாற ரம்மியம் மனசுக்கு எவ்வளவு இதமாய் இருக்கும்."

"உங்கட வீடு இருக்கிற இடமே ஒரு ரம்மியம்தானே... குளக்காத்தும் அதைச் சுற்றியிருக்கிற மரங்களின்ர குளிர்ச்சியுமே ஒரு அற்புதமான உலகத்த உங்களுக்குக் குடுத்திருக்குக் கடவுள்."

நிதானமும் இயற்கையோடு அவள் கொண்டிருந்த பற்றுதலான பேச்சும் அவனை மேலும் மேலும் அவள்பால் ஈர்த்துக் கொண்டே இருந்தது.

"அப்ப நீங்கள் ஆரைச் சந்திக்கப் போறியள்?"

"நீங்கள்தான் ஆரும் இலக்கியக்காரர் ரண்டு மூன்று பேர அறிமுகப்படுத்தவேணும்... அவயளிட்ட வன்னியின்ர இலக்கியப் போக்குகளைப் பற்றி அறிஞ்சு ஆய்வுக்கட்டுர ஒண்ட எழுதலா மெண்டிருக்கிறன்."

"அப்ப நீங்க ஒரு டேற்றச் சொல்லுங்கோ நான் கூட்டிக்கொண்டு போறன்" என்று அவன் சொல்லும்போது, அவனது அக்கா தேநீரோடு வந்தாள்.

அவள் தேநீர் பருகுவதே ஒரு அலாதியான ஸ்ரையிலாகத்தான் தெரிந்தது.குடித்த மறுகணமே அவள் போவதாகக்கூறி எழுந்தாள். இன்னும் சற்றுநேரம் இருக்கமாட்டாளா என அவன் நினைத்துக்கொண்டான்.

அவள் கேட்டதுபோல ஒரு காலையில் இருவரும் ஆளுக்கொரு சைக்கிளில் புறப்பட்டார்கள். போகும் வழியெங்கும் வன்னிக்கேயான பெரு மரங்களையும் வயல்வெளிகளையும் ரசித்து விமர்சித்துக்கொண்டே வந்தாள். சங்கிலிப் பாலத்தடியில் நீரிலிருந்து வெளியே வந்து ஆவென்று கொண்டு படுத்திருந்த முதலையை அவன் காட்டினான். அவள் அதைப் பார்த்துவிட்டு...

"ஐயோ... எவ்வளவு பெரிசாய் இருக்கு" என்று வியப்படைந்தாள். தங்களுடைய பறையனாற்றில் தனது உறவினரொருவரை முதலை பிடித்த கதையைக் கூறியவாறு நீராவிப்பிட்டி மேடான வீதியில் பெடலை மிதிக்கச் சிரமப்பட்டாள்.

"என்ன கஸ்ரமாயிருக்கோ?" என அவள்மீது காபந்துணர்வு மேலிடக் கேட்டான்.

"இல்லையில்லை... கனநாள் சைக்கிள் ஓடேல்லை. அதுதான் கொஞ்சம் களைக்கிது."

வெயில் ஏற ஏற அவனுக்கும் உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. இருவரும் தண்ணீரூற்றில் முல்லைமணி சேரையும், முள்ளியவளையில் அரியான் பொய்கையையும், முல்லை ரமணனையும் சந்தித்தனர். முல்லைமணி சேர் வன்னியில் நாவல், சிறுகதை முயற்சியையும், அரியான்பொய்கை வன்னிவள நாட்டார் பாடல்கள் பற்றியும், முல்லை ரமணன் கவிதைபற்றியும் சுசிக்கு விரிவாகக்கூறி, சில புத்தகங்களையும் கொடுத்தார்கள்.

அன்றிலிருந்து அவன் சுசியின் முகாமுக்கு அடிக்கடி போய் வந்தான். மாலைநேரத் தேநீர் வாரத்தில் இரண்டுநாளாவது சுசி வீட்டிலாக இருந்தது.

சுசியும் அவனது வீட்டுக்கு இடைக்கிடைபோய் வந்தாள். போகும்போது வீட்டில் செய்த சிற்றுண்டிகள் எதையாவது எடுத்துச் செல்வாள். அவ்வாறான நேரங்களில் அவளது ஊர்பற்றியே அதிகம் பேசிக் கொண்டாள். அப்போதெல்லாம் அடிக்கடி, "நாங்கள் ஊருக்குப் போனபிறகு நீங்கள் கட்டாயம் எங்கட ஊருக்கு வரோணும்" என்பாள்.

அவனும் " கண்டிப்பாக வருவன். தென்னைமரவடியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறன். ஒருநாளும் வந்ததில்லை. அழகான வயல்வெளியும் மலைக்குன்றுகளும் சிறுகடல் நீரேரியும் இருக்கிற உங்கட ஊர் ஒரு வடிவுதான் எண்டு ஆக்கள் கதைக்கிறதக் கேட்டிருக்கிறன். எப்ப மட்டில விடுவாங்கள் எண்டு தெரியாதெ?"

"எங்களுக்கும் அதுதான் தெரியேல்ல... எப்ப எங்கட ஊருக்குப் போவமெண்டிருக்கு."

"ஏன் எங்கட ஊர் உங்களுக்குப் பிடிக்கேல்லியோ?"

அவளோடு கதையைத் தொடரவேண்டும் என்பதற்காகவே கேட்டு வைத்தான்.

"இல்ல இல்ல இடம்பெயர்ந்து வந்தோண்ண உங்கட ஊர்தான் எங்களுக்கு அடைக்கலம் தந்தது. என்னதான் இருந்தாலும், சொந்த வீடுவாசல்ல இருக்கிறமாதிரி வராதுதானே".

அது சரி என்பதுபோல தலையை ஆட்டினான். அவனைக் காண்பதிலும் அவளோடு பேசுவதிலும் அவனுக்கு அதீத பிரியமாக இருந்த நாட்களில் ஒருகாலையில் அவனது வீட்டிற்கு சுசி வந்திருந்தாள்.

"கம்பஸ் தொடங்கப்போகுதாம். நான் பற்றிக்கொலோ போறன். அதுதான் சொலஅலீட்டுப் போகலாமெண்டு வந்தனான். நீங்கள் எனக்கு எவ்வளவோ ஹெல்ப் பண்ணீயிருக்கிறியள். எல்லாத்துக்கும் தாங்ஸ்"

அவள் கூறியதைக் கேட்டதும் அவன் அதிர்ந்து போனான். அவள் போய்விடப் போகிறாள் என்ற எண்ணம் மேலிட அவள் பின்பு கூறிய எதுவுமே அவனுக்குச் செவிகளில் விழ மறுத்தது. கால்கள் நிலத்தில் நிற்கத் திராணியற்றுத் தளர்ந்திருந்தன.

அவள் விடை பெற்றுப் போகும்வரை பார்த்தபடியே நின்றான். நீர் கட்டிய விழிகளில் அவளது உருவம் கலங்கலாய் அசைந்தது.

அவளது நினைவுகளில் இருந்து கலைப்பதாய் பின்னாலிருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தபோது, பக்கத்துவீட்டுச் சண்முகநாதன் எனக்கண்டு "என்னண்ண வீடெல்லாம் எப்பிடியிருக்கு?'

"வீடோ... கல்லுக்குவியல்தான் கிடக்கு. உங்கட வீடு கிடக்கு,, கோப்பிசமில்லை. காடு வெளியாக்கித்தான் வீடு பாக்கோணும். அப்பிடிக் கிடக்கடாப்பா காணியள்"

"எங்கேண்ணை இருந்தனிங்கள் இவ்வளவு நாளும்? நான் ஒருநாள்கூடக் காணேல்ல"

"தொண்ணூறாம் ஆண்டு நாங்கள் எல்லாம் போய் புதுக்குடியிருப்பில இருந்த நாங்களெல்லோ... அப்பிடியே இந்தியாவுக்குப் போட்டன். இப்ப ஒரு வருசத்துக்கு முதல்தான் கப்பல்ல வந்தனான். யாழ்ப்பாணத்தில இருக்கிறன். கேள்விப்பட்டோண்ண நேற்று வந்தனான்."

அவரோடு கதைக்கும்போது வீட்டைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அவனுக்கு இன்னும் மிகுதியாக எழுந்தது. அவரிடமிருந்து விடைபெற்றுச் சைக்கிளை எடுத்தான்.

சிலாவத்தை பழைய களையிழந்திருந்தனு. ஊரே வெறிச்சென்று வெயில் மட்டுமே அங்கு குடியிருப்பதுபோல அதிகமான வெப்பம் கொண்டிருந்தது.

சந்தி தாண்டி மைதானம் கடந்தால் வருவது இரண்டாவது மைல். மைதானத்திலிருந்து கடற்கரை போகும் தெருவரை இடதுபுறம் இராணுவம் நீண்ட அணை போட்டிருந்தது.

சைக்கிளை நிறுத்தி இரண்டாவது மைல் கல்லைத் தேடினான். புற்களும் தும்பைச் செடிகளும் நிறைந்த இந்த மேடான நிலத்திலிருந்த அக்கல் இருந்ததற்கான அறிகுறியெதுவுமற்றிருந்தது அவ்விடம். அணையின் சரிவுகளில் கிழிந்த இராணுவச்சீருடைகளும் தலைக்கவசங்களும் கிடந்தன.

அப்போதுதான் அவன் அக்கல்லைக் கண்டான். அணையின் மேலே போடப்பட்டிருந்த காவலரணில் முள்கம்பி வேலிகளுக்கிடையில் துப்பாக்கி ரவைகளில் இருந்து இராணுவத்தைப் பாதுகாக்க கிடையாகக் கிடந்தது அக்கல்.

நன்றி: முல்லைக்கோணேஸ் சிறுகதைகள் (தொகுதி)

# இளையவன் சிவா
# சிறார் கவிதைகள்

**ஓடி விளையாடு பாப்பா**

*தேகத்தின் தாகங்கள் தணிந்தே நிறைந்திட*
*வேகத்தின் மேகங்கள் உடலினை நனைத்திட*
*குருதியின் ஓட்டங்கள் உறுதியை வழங்கிட*
*கருவியாம் மூளையும் கவனமாய் இயங்கிட*
*சகிப்பின் இலக்கணம் மனதினில் பதிந்திட*
*சமத்துவச் சிந்தனை வாழ்வில் உயர்ந்திட*
*பொறுப்பும் பொறுமையும் நிறைவாய் ஒளிபெற*
*பிணியின் வரவைத் தடுத்திடும் வழிகளை*
*அணியென நமக்குள் ஆழமாய் நிறைத்திட*
*விளையாட்டின் பொழுதில் உடலைக் கரைப்போம்*
*வியர்வையின் வழியே மேனியைக் காப்போம்.*

◎



**சிறகடிப்பாய் செல்லமே**

*மண்ணில் நல்ல வண்ணம் மகிழ்வுடன் வாழ்வைப்*
*பிரசவிக்க*
*கருவிலிருந்து உதித்திட்ட காப்பியம் நீ*
*அழித்தொழிப்புகள் துவங்கி*
*ஆணவப்போக்கு வரை*
*நீளும் தாக்குதலில் தப்பித்தல்*
*வேலையென்றானபிறகு*
*விடியல் தேடுவதில் விரக்தி வேண்டாம்*
*படைப்பதன் பயனறியாப் பசலிகளைக் கண்டு*
*பயமெதற்கு?*
*சிறகடிக்கும் பட்டாம்பூச்சிக்கு*
*வண்ணங்களால் இடர்பாடுகளல்ல.*
*சிதைந்திடாத கனவுகளை நோக்கிய*
*வானத்தைத் தேடுகையில்*
*இறகுகள் பாரமல்ல.*
*சீண்டலெனப் பாலியல் தொல்லைகளும்*
*வாழ்வதற்கான வரையறைக் கட்டுகளும்*
*விலங்கென உனை சிறைபிடித்தாலும்*
*விட்டு விடுதலையாகி*
*நன்னெறியும் நல்லறிவும் கொண்டு*
*நடைபோடும் உன் வேகத்தில்*
*தடைகளின் இடையூறுகள் தகர்ந்திடக்கூடும்.*
*போற்றியும் தூற்றியும்*
*புகழுக்குள் புழுதி பரப்பும்*
*வீணர்களைக் கண்டு விரக்திக்குள் விழுந்து விடாதே.*
*உதிக்கும் சூரியனைக் கண்டு*
*நாய்கள்தான் குரைக்கின்றன நாவறட்சியில்.*
*நம்பிக்கையும் நாளையும்*
*உனக்குள் நிறைகையில்*
*சிறகடித்துப் பறந்திடு செல்லமே*
*சித்திரமென எழுதிடு*
*சமூகத்தில் நிலைத்திடும் சரித்திரத்தை.*

# பா.சிவகுமார் கவிதைகள்

**யதார்த்தம்**

தொலைக்கும் வரை
தெரிவதில்லை
தொலைத்ததின் அருமை

◎

**ஓசைகள்**

ஒளிராத அலைபேசி
ஒலிக்காத தொலைபேசி
விரல்படாத அழைப்பு மணி
தட்டப்படாத கதவு
சத்தமில்லாத வீடு
ஒளித்து வைத்துள்ளது
அளவிடயியலா
மன ஓசை டெசிபல்களை

◎

**புரிதல்**

பிரிந்து செல்கிறாய்
புரிந்து கொள்ளாததாலா....
அல்லது
புரிந்து கொண்டதாலா...
என்பது மட்டும்
புரியாமலே இருக்கிறது

◎

**தன்னம்பிக்கை**

ஆயிரம் முறை
விழுந்தாலும்
வாழ்க்கையில்
எழுந்து நிற்க
முயல்பவர்களுக்கு
முன்னுதாரணமாக
நிற்கிறது மழலை

◎

**முகங்கள்**

மனமுகம் காட்டும் கருவி
கண்டுபிடிப்பு



புற முகங்கள்
ஒன்றில் கூட
ஒத்து போகவில்லை
அகமுகங்கள்
அதிர்ந்து அக்கணமே
அழிக்கச் சொன்னது
கோரமுகத்திலொன்று

◎

**நடுத்தர வர்க்கம்**

பறக்க இயலாது
யதார்த்த சூழலில்
மாட்டிக் கொண்டு
மேலேயும் போக முடியாமல்
கீழேயும் இறங்க முடியாமல்
உடையக் காத்திருக்கின்றன
சாமானிய
நடுத்தர வர்க்கத்தினரின்
ஆசைபலூன்கள்

# கலா புவன் கவிதை

**புதிய அச்சங்கள் உன்றன் மௌனங்கள்**

எம்மின் பத்தபிரானே
உமக்கு ஒரு விண்ணப்பம்
மியான்மரின் சுடு நெருக்கடிகள்
மக்களை விரட்டிடும் வேளையில்
மௌன புன்னகையில்  உம் இதழ்
விரிந்து கிடப்பதும்...

பௌத்தம் தொன்மையானதே
சோதனைகளும் பழமையானவைகளே
இருப்பினும் இன்னமும் உம்மை
நான் நேசிப்பதால்
இந்த எளியவளின் விண்ணப்பம்....

உம் எளிமையும் அழகான தோற்றமும்
கம்பீர இருப்பின் பேரெழிலும்
என்னை வசீகரிக்கிறது
அரச போக வாழ்வினை துறந்து
சுக சௌகர்யங்களை விட்டு விட்டு
சுக தேக பரிணாமங்களை
நீர் தொலைத்துவிட்டு.....

மென் துறவு நிலை சார்ந்து
வாழ்வியலின் உண்மை இருப்பை
அர்த்தமுள்ள தான  நிலைப்பாடாக
விளக்கியவரே எம் இனிய போதகரே....

நாட்டில்  - நாடுகளில்
உம்மின் பேரால் தான்
எல்லாமும் எல்லாமுமே
நடைபெறும் போது
உம் நெடு மௌனம்
உம் சம்மதத்திற்கு ஆன வீச்சலையோ என
நான் அச்சமுறுகிறேன்........

என் அச்சம் நியாயமான ஒன்றானால்
நல் விடியலை இனிமேல்
உம் மௌனம் புன்னகைக்கட்டும் ......
ஆமென்



# ரகுநாத் கவிதைகள்

மரத்தில் மோதி
மூர்ச்சையடைகிறது
விறகு லாரி.

◎

காய்ந்த மரத்தில்
வெற்று வானமும்
நட்சத்திரங்களும்.

◎

விதையினை
ஊன்றவிடவில்லை
கரையில் அலை!

◎

அசையும் தாள்களிடம்
'பேப்பர் வெயிட்'
என்றது கல்.

◎

கண்ணீரைத் துடைத்து
புன்னகை வரைகிறது
மகிழுந்து துடைப்பான்.

◎

இறந்திருக்கிறான்
மணலைக் கடத்தியவன்
கைப்பிடி மண்ணோடு.

◎

பசியிலலையும் புறாவுக்கு
அர்த்தம் புரிகிறது
மொட்டை மாடி.

◎

பட்டாம்பூச்சித் தோட்டம்
எதிர்ச்சொல் தருக
'புல் டவுசர்'.

◎

கிருஷ்ணர் பாதம்
ஆண் பிள்ளையாம்
மெட்ரோவின் வயிற்றில்.

◎

சடை வீரன்
முதுகில் வீரவாள்
அருவி.

◎

மணலற்ற ஆறு
நீரற்ற குடுவை
குப்பைத் தொட்டி

◎

கருப்பு உடைகளில்
தேவதைகள்
நீதிமன்றத்தில்.

◎

பிறை அருகே நட்சத்திரம்
படகு நோக்கி வருகிறது
மீன்!

◎

அம்மாவின் கைரேகையினை
வெட்டி வெட்டி போடுகிறது
அரிவாள் மனை.

◎

கவிழ்ந்த மணல் லாரி
ஸ்மைலி போடுகின்றனர்
குழந்தைகள்!

◎

வலசை செல்லும் பறவைகள்
புலனாகிறது
அம்பின் வடிவம்.

◎

புள்ளிகளை
வைத்துவிட்டது வானம்
பறவைகளை கோலம்
போடுவது யார்?

—

கண்ணாடி தொட்டியில்
கடலின் ஆழம்
பார்க்கிறது மீன்.

# தமீம்.அசாருதீன் கவிதைகள்

பொய்கள் எப்பொழுது
அழகாகும்?
நீ வெட்கப்படுகையில் !
பிறகு அது உண்மையான
மகிழ்ச்சியில்
உன் சிரிப்பின் பால்
மோட்சமடைந்துவிடும்
ஆதலால் காதலில்
பொய்க்கு பஞ்சமில்லை!

◎

அவள் போய் இவள்
இவள் போய் அவள்
நீங்கள் கால் நனைக்காவிடில்
நான் எப்படி நதியாவேன்.!

◎

நடப்பு கிளையில்
பூ ஒன்று பூத்தது !
காதலென்று பெயரிடாமல்
காத்து நிற்கிறோம்
முதலில் யார் பறிப்பது?
யாரிடம் இருந்தாலென்ன!



# நேசன் மகதி

**எங்கே நனைவது?**

*காற்றுப்புகாதவாறு*
*எத்தனைமுறை*
*தழுவிக்கொண்டாலும்*
*நீ விட்டுச்சென்ற*
*ஈரமான*
*ஒரு ஸ்பரிசம்தான்*
*மனதை எப்போதும்*
*உரசிக்கொண்டே*
*இருக்கிறது*
*நதியைவிட*
*ஒரு மழைத்துளிதானே*
*நனைத்துவிடுகிறது...*



# கோ.நாதன் கவிதைகள்

**வெறுமை மேயும் பொழுது**

*அறையை*
*மேய்ந்து திரியும் மிருக மனசு*
*வெறுமைப்பட்ட சுவரின் பக்கங்களை*
*முத்தங்களால் ஈரப்படுத்திக் கொண்டது.*
*காலத்தின் நாழிகை*
*காமத்தின் ஈச்சையை முகர்கிறது.*
*இரவின் வெப்ப உக்கிரத்தை*
*வெப்பக் காற்றில் உதிரும் உஷ்ணம்*
*பஞ்சனையில் கரைந்து*
*இரு உடலில் மென் நீராய் கசிந்தன.*
*பெருந்தீயில் கருகும்*
*கோடை மரங்களின் காடாய்*
*உடல் எச்சங்களில் எரிந்தது*
*கலவிக் கணத்தின் புணர்ச்சி மிகுதியாய்*
*புகை போக்கி வழியே*
*நறுமணம் வீசும்*
*செந்தணலில் வேகும் மாட்டிறைச்சி*
*சைவத்தை மென்று கொண்டிக்கிறது அசைவத்தின்*
*காமத்துப் பால்.*
*உதடுகள் மொழிகளை மட்டுமே*
*உச்சரிப்பதில்லை.*
*அல்லது ஒலிப்பதில்லை.*
*மேலும்*
*அறுசுவைகளை கடந்து ஏழாவது*
*சுவையை பரிசோதனை செய்கிறது.*

*(காலம் ஒரு சூத்திரம்)*

# கவிக்கோ துரை வசந்தராசன்

**கடவுச் சொல்**

*கள்ளெல்லாம் போதைக்குன் கண்ணைத் தேடும்!*
*கனிமலைத்தேன் சுவைப்பதற்குன் நாவை நாடும்!*
*கள்பூக்கள் ஓடிவந்துன் முறுவல் கூட்டில்*
*கண்டபடி புரண்டெழுந்தோர் குளியல் போடும்!*
*புள்சிறகு வான்மேகம் அழைத்துக் காட்ட*
*பூச்சுருளும் உன்கூந்தல் அழகில் வெட்கும்!*
*கற்சிலைகள் உன் முன்னால் மூச்சிழக்கும்!*
*கடவுச்சொல் உன்பேர்தான் உயிர்த்தெ ழுப்பும்!*

*விண்ணேஉன் கால் நகத்தில் முகம்தி ருத்தும் !*
*விரலிடுக்கில் மேகநதி சிக்க றுக்கும்!*
*பண்ணூறு தாளங்கள் இமைவா சிக்கப்*
*பாதத்தில் இசையமர்ந்து பாடம் கேட்கும்!*
*கண்ணேறு கழித்துவைக்க நிலவுத் தட்டில்*
*கற்பூர விண்மீன்கள் ஏற்றி வானம்*
*பெண்ணேஉன் முன்வந்து ஆலம் சுற்றும்!*
*பெருவளியின் பேரழகால் ஞாலம் சுற்றும்!*

*சுழல்நதியில் சிக்கிமிக வேர்க்கின் றேன் நான்!*
*சுற்றவைத்து வேடிக்கை பார்க்கின் றாய்நீ!*
*உழுதுவிதைத் துள்ளேன்நான் உனது நெஞ்சில்!*
*உயிர்விதைகள் அத்தனைக்கும் உயிராய் வாநீ!*
*விழல் மழையாய் ஆக்கிடாமல் எனது வேர்வை*
*வயல்நதியாய் ஆகவேண்டும்! ஆக்கிக் காட்டு!*
*தொழும்கைக்கு வரமாகு! தோழி உன்னில்*
*தொக்கியுள்ளேன் வெளிப்படுத்து! மகிழ்வே நீளும்!*

*உனக்குள்நான் குடியேறி உருள வேண்டும்!*
*உயிர்மெய்யாய் நாம்கலந்து புரள வேண்டும்!*
*உனதழகில் சொற்கலந்தவென் திரட்டுப் பாட்டால்*
*உனைப்பார்க்க உலகமெலாம் திரள வேண்டும்!*
*உனைத்திறந்து பார்க்கின்ற கடவுச் சொல்லாய்*
*எனைமாற்று! எனக்குள்நீ உன்னை ஊற்று!*
*கனக்காத உயிர்க்காற்றே! வா! வா! வந்தால்*
*காலத்தின் கடவுச்சொல் படைப்பேன் நானும்!*




காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆவணி - 2022


கார்த்திகை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
கவிதைச் சிறப்பிதழ்


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
புரட்டாசி : 2024

# முந்தைய இதழ்கள்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
பங்குனி - 2024
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
ஆடி - 2024
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2023
சொக்கன் சிறப்பிதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
தை - 2023